بسم الله الرحمن الرحيم

“

முஃமீன்களே!
நீதியை, நிலை
நாட்டுவதற்காக
அல்லாஹ்வுக்கு நீங்கள்
உறுதியான சாட்சியாக
இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார்
மீதும், நீங்கள் கொண்டுள்ள
வெறுப்பு நீதி செய்யாமலிருக்க
உங்களைத் தூண்ட வேண்டாம்.
நீதி செய்யுங்கள், இதுவே
பயபக்திக்கு மிக
நெருக்கமாகும்.
அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் ;
நிச்சயமாக அல்லாஹ் நீங்கள்
செய்பவற்றையெல்லாம் (நன்கு)
அறிந்தவனாக இருக்கின்றான்
(அல்குர்ஆன் - 5:8)

”


குஜராத் இனப்படுகொலை 2002 வீரமங்கை பல்கீஸ் பானு - 6
இழக்கக் கூடாததை? - 16
கவிக்கோ ஓர் உந்து சக்தி - 18
வாசிப்பவரை வசீகரிப்பவர் - 23
செங்கம் ஜப்பார் - 25
கவிக்கோ வாழ்கின்றார்..! - 26
எது முதலில் ? - 28
சோதனைகளை வென்ற ரமழான் - 34
கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் - 40
மதிமாறனுக்கு கொலை மிரட்டலா? - 44
இந்தியாவின் எதிர்காலம்? - 48
இந்தியாவில் தலை தூக்கும் கும்பல் ஆட்சி - 52
மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம்? - 55
பால் பண்ணை உரிமையாளரின் மீது தாக்குதல்? - 60
முஸ்லிம்கள் அல் அக்ஸா மஸ்ஜித்து ஏன் பயணம் செய்ய வேண்டும்? - 61
பொய்யைக் கல்வியாகப் புகட்டுவோம் - 63



ஜுலை - 2017

# வைகறை
## வெளிச்சம்

ஷவ்வால் - 1438

ஆசிரியர்
மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

# நீதியும் பாசிச ஆட்சியும்

ஜனநாயகத்தின் மிகப்பெரிய பலவீனம் பளிச்சென தெரிகின்றது, பாரதத்தில்! அதுதான் இப்போது பாசிசம் பாரதத்தைப் பயங்கரமாகப் பற்றிப் பிடித்துக் கொண்டது. ஜனநாயகத்தில் இது எப்படி முடிந்தது?

ஆங்கிலேயர்களின் கோரப் பிடியில் இந்தியா சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த போது, அவர்களுக்கு எல்லா விதத்திலேயும், உதவியாக இருந்தவர்கள் இன்று அரியணை எறி ஆட்டம் போடுகின்றார்கள். தேச பக்தியை பெரிதாகப் பேசும் நாட்டில் இது எப்படி முடிந்தது?, இதுதான் ஜனநாயகமா?

அன்று மட்டுமல்ல இன்றைக்கும் ஆங்கிலேயர்கள் முஸ்லிம்களுக்கெதிராக போட்ட திட்டங்களையும் அவர்கள், பொய் யாகவும், புனைந்துரையாகவும் எழுதி வைத்த வரலாறுகளையும் பூஜித்துக் கொண்டிருப் பவர்கள். பாடத்திட்டங்கள் வழி பாலகர்கள் மனதில் வெறுப்பையும் பதித்துக் கொண்டி ருப்பவர்கள்.

அன்றைக்கு ஆங்கிலேய தளபதி ஒருவன் "நான், ஒரு முஸ்லிம்–ஐயும், இன்னொரு வனையும்வழியில்கண்டால்அந்தமுஸ்லிமை உடனேயே கொன்று விடுவேன்" என்றான். காரணம் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு மிகப்பெரிய சவாலாக இருப்பவர்கள், முஸ்லிம்கள்தான். எங்களுக்கு அதாவது ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போர் செய் வதை இவர்கள் 'ஜிஹாத்' என்கின்றார்கள் என்றான். (Source : Muslims in India and The Freedom Struggle)

அந்த ஆங்கிலேயர்களின் வெறுப்பை அப்படியே கவ்விப் பிடித்துக்கொண்டு முஸ்லிம்களுக்கெதிராக விஷத்தைக் கக்கி, மக்களிடையே வெறுப்பை வளர்த்தார்கள். இன்றளவும்வளர்த்துக்கொண்டிருப்பவர்கள் இன்றைய பாசிஸ்ட்டுகள்

அந்த வெறுப்பை வளர்த்துத்தான் இன்றளவும் பல கோடி முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள்.

அந்த வெறுப்பை இன்றளவும் வளர்த்து வருகின்றார்கள். இன்றளவும் படுகொலை களை நடத்தி வருகின்றார்கள்.

ஆட்சிக் கட்டிலில் மோடி அமர்ந்ததும் இந்தக் கொலைகள் பயங்கரமாக வளர்ந்தன.

மோடி இதற்கெல்லாம் பக்க துணையாக இருப்பார் என்பதால் மோடி வகையறாக்கள் கொலைகளைச் செய்வதையும், முஸ்லிம் களைக் கற்பழிப்பதையும், கொள்ளை அடிப்பதையும் தங்குத் தடையின்றி தொடர்ந்து வருகின்றார்கள.

மாட்டை காரணமாககக் காட்டி மனிதர் களைக் கொலை செய்கின்றார்கள். ஆனால் கொலைச் செய்யப்படுபவர்கள் மீதே குற்றம் செய்ததாக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படுகின்றது.

நாடுமுழுவதும்நூற்றுக்கணக்கானகுண்டு வெடிப்புகளை நடத்தி பழியை முஸ்லிம்கள் மீது போட்டு ஆட்சியைப் பிடித்தவர்கள் இவர்கள். எப்படி இருப்பார்கள்?

ஆனால் இதற்கெல்லாம் நேர் எதிராக ஓர் ஆட்சி. அந்த ஆட்சியில் குடிமக்கள் அனைவரும் ஒன்றுபோல், சமமாக நடத்தப் பெற்றார்கள், பாதுக்காக்கப்பட்டார்கள். சிறுபான்மையினர் சிறப்பான, அதிகமான பாதுகாப்பைப் பெற்றார்கள். இதில் பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என ஒரு நிகழ்வு.

கலீபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சி, சிரியா வெற்றிக் கொள்ளப்பட்டது.

இஸ்லாமிய ஆட்சி நிலை கொண்டது.

ஆனால் பாரசீகப் பெரும் படை ஒன்று முஸ்லிம்களை தாக்கிட வருகின்றது என்ற செய்தி முஸ்லிம் தளபதிகளை வந்தடைந்தது.

அவர்களை எதிர்கொள்ள மொத்த முஸ்லிம் படையும் தேவைப்பட்டது. அதனால் சிரியாவின் பகுதிகளிலிருந்த அனைத்துப் படைகளையும் அழைத்துக் கொண்டு பாரசீகத்தை நோக்கிப் போருக்குப் போய்விட வேண்டிய நிலை.

ஆனால் சிரியாவின் கிறிஸ்தவ மக்களிடம் பாதுகாப்பு வரியை இஸ்லாமிய அரசு வசூல் செய்திருந்தது. இப்போது படைகள் அனைத்தையும், பாரசீகம் நோக்கி அழைத்துச் சென்றிட வேண்டியதிருந்ததால் சிரியாவின் மக்களைப் பாதுகாத்திட இயலாத நிலை.

ஆகவே அந்த மக்களை அழைத்துப் பாதுகாப்பு வரியைத் திரும்பத்தந்தார்கள் இஸ்லாமிய ஆட்சியாளர்கள். அத்தோடு அதற்கான காரணத்தையும் விரித்துரைத்தார்கள்.

அப்போது அந்த மக்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

“இந்தத் தொகை எங்களிடமிருப்பதை விட உங்களிடமிருப்பதே சிறந்தது. நீங்கள் மிகவும் நீதியோடு தான் நடந்து கொண்டீர்கள். நீங்கள் எங்களை இதற்கு முன் ஆட்சி செய்த எங்களவர்களை விட சிறப்பாகவே ஆட்சி செய்தீர்கள். நீங்கள் வெற்றி பெற்றவர்களாக மீண்டும் வந்து எங்களை ஆட்சி செய்ய வாருங்கள்” என அனுப்பி வைத்தார்கள். (Source : Some Glitering Aspects of Islamic Civilization)

இப்படி தன் ஆட்சியில் கீழுருந்த மக்களை அனைத்து நிலையிலும் காப்பாற்றியவர்கள், அந்த மக்களே மெச்சிடும், அளவில் நீதியை நிலை நாட்டியவர்கள். இஸ்லாமிய ஆட்சியாளர்கள். இந்த ஆட்சி இங்கே நிலைக்க உழைப்போம்.

இன்ஷா அல்லாஹ்.

“

அல்லாஹ் எச்சரிக்கின்றான்...
**அவர்களுக்கு உங்கள் மீது அதிகாரம் கிடைத்தால்**, அவர்கள் உங்களுக்கு விரோதிகளாகித் தம் கைகளையும், நாவுகளையும் உங்களுக்குத் தீங்கிழைப்பதற்காக உங்கள் பால் நீட்டுவார்கள். அத்தோடு நீங்களும், அல்லாஹ்வை நிராகரித்தவர்களாக ஆகிவிட வேண்டும் என்று பிரியப்படுவார்கள். (60 :2 அல்குர்ஆன்)
மேலும் பார்க்க திருக்குர்ஆன் வசனங்கள் 2:126, 2:217, 4:44, 14:13

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்...

**( அல்லாஹ்வுக்கு உதவி செய்கிற ) அவர்கள் எத்தகையோரென்றால் பூமியில் அவர்களுக்கும் நாம் சக்தியளித்தால் ( அதிகாரம் கொடுத்தால் )**, தொழுகையை அவர்கள் கடைப்பிடிப்பார்கள் ; இன்னும், ஜகாத்தைக் கொடுப்பார்கள் ; மேலும் நன்மையை ஏவி, தீமையை விட்டும் (மக்களைத்) தடுப்பார்கள். காரியங்களின் முடிவு அல்லாஹ்வுக்கே உரியது. 22 : 41

முஃமீன்களே!
நீதியை, நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும், நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள், இதுவே பயபக்திக்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் ; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் (நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான் (அல்குர்ஆன் – 5:8)

”



# குஜராத் இனப்படுகொலைகள் 2002

# வீரமங்கை பல்கீஸ் பானு!

**2002-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-இல் தொடங்கி மே மாதம் வரை தொடர்ந்தன. இந்த குஜராத் இனப்படுகொலை 20,000 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.**

பல லட்சம் பேர்; ஆண்டாண்டு காலமாகக் குடியிருந்த வீடுகள், குடித்தனம், சொந்தங்கள், சொத்துப் பத்துக்கள் இவற்றையெல்லாம் இழந்தார்கள். அநாதையானார்கள்.

குழந்தைகள் பல தாயின் வயற்றிலிருந்து பிளந்தெடுக்கப்பட்டு தரையிலே வீசப்பட்டன.

பெண்களின் கற்புகளைச் சூரையாடினார்கள் மோடியின் வகையறாக்கள்.

இத்தனையும் அப்போதைய குஜராத் முதலமைச்சர் மோடியின் ஆணையின்கீழும், மோடியின் கண்காணிப்பின் கீழும் நடந்தன.

இந்தப் படுகொலையின் போது தன் குழந்தையையும், குடும்பத்தையும், கற்பையும் இழந்தவர்தான் பல்கீஸ் பானு, ஆனால் ஏனைய பெண்களைப் போல் அல்லாமல் அவர் நீதிக்காகப் போராடினார்.

அதில் வந்த கெடுபிடிகள், சித்திரவதை ஆகியவற்றை எதிர்கொண்டார், சந்தித்தார். இந்தக் குற்றங்களையு, பாதகங்களையும், செய்தவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டவர்களில் 11 பேருக்கு ஆயுள் தண்டனை பெற்றவர்கள். பல்கீஸ் பானு தொடுத்த வழக்கில் அவருடைய வழக்கில் மே-4, 2017-ல் சுமார் 15 ஆண்டுகளுக்குப்பின் வழங்கப் பெற்றது.

அந்தத் தீர்ப்பைப் பற்றி முழு விவாதம் ஒன்றை இங்கே இடம் பெறச் செய்கின்றோம்.

அதற்கு முன் அவருடைய சொந்தக் கதையை, சோகக் கதையை அவரே கூறுகின்றார் கேளுங்கள்...

அதன்பின் இப்போது அதாவது மே-4, 2017-ல் வழங்கப்பெற்றத் தீர்ப்பை விவாதிப்போம்...

**பல்கீஸ்பானு தன் கதையைச் சொல்லுகிறார்...**

கோத்ரா நடந்தபோது என்னுடைய கணவர் யாகூப் ரசூலுக்கு வேலை இல்லை. ஆனால் நாங்கள் சிறந்த வசதிகள் உள்ள ஒரு வீட்டில் வாழ்ந்தோம். எங்கள் திருமண வாழ்க்கையும் மகிழ்ச்சியாகவே இருந்தது.

எங்களுக்கு ஒரு மகள் சாலிஹா. அப்போது 2002 பிப்ரவரியில் அவளுக்கு மூன்று வயது. நான் ஐந்து மாதக் கர்ப்பினி.

2002 பிப்ரவரி 27 அன்று சபர்மதி எக்ஸ்பிரஸ் எரிந்தது. அடுத்த நாள் காலை எங்கள் ரந்தீப்பூர் கிராமத்து தலைவர் ஓர் ஊர்வலத்தை நடத்தினார்.

இந்த ஊர்வலம் வன்முறை ஊர்வலமானது. முஸ்லிம்களின் வீடுகளை எரித்தார்கள். கால் நடைகளையும் எரித்தார்கள். நாங்கள் கிராமத்தை விட்டு ஓடிட திட்டம் போட்டோம். ஆனால் எங்கள் கிராமத்துத் தலைவர்கள் எங்களுக்கு உத்திரவாதம் தந்தார்கள். நீங்கள் அச்சப்பட வேண்டாம். எதுவும் நடக்காது, யாரும் உங்களைத் தொட மாட்டார்கள் என்றார்.

ஆனால் கூட்டங்கூட்டமாக வந்தவர்கள் எங்களைத் கல்லால் தாக்கினார்கள். நாங்கள் ஓடி ஒளியத் தொடங்கினோம். நான் என்னுடைய காலணிகளைக்கூட அணிந்திடவில்லை.

அந்தக் கிராமத்தைச் சார்ந்த அத்தனை பேரும் அங்கேயுள்ள தலையாரி ஊர் தலைவரின் வீட்டில் தஞ்சம் புகுந்தோம். ஊர் தலைவரை நாங்கள் கர்ஜா காக்கா என அழைப்போம்.

நாங்கள் போலீஸ் – காவல்துறையின் பாதுகாப்பை எதிர்பார்த்தோம். ஆனால் காவல்துறையினர் எங்களுக்குப் பாதுகாப்புத் தந்திட மறுத்தார்கள். நாங்கள் பெண்கள், குழந்தைகள், ஆண்கள் என மொத்தம் (100) நூறு முஸ்லிம்கள் அங்கே இருந்தோம்.

நேரம் நகர, நகர எங்கள் உயிர்களுக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிக்கின்றது என்பதை உணர்ந்தோம். நாங்கள் தப்பித்து ஓடிட முயன்றோம். ஆனால் எல்லா சாலைகளும் வழிகளும் மூடப்பட்டிருந்தன. தப்பிச் சென்றிட இருந்த பிரதான வழிகளில் அவர்கள் மின்சார கம்பிகளைக் கொண்டு வேலிகளை அமைத்திருந்தார்கள்.

28 ஆம் தேதி 2002 பிப்ரவரிமாதம் சங்கப் பரிவாரத்தினர் வீடுகளை கணக்குப் போட்டு நிதானமாக எரிக்கத் தொடங்கினார்கள்.

உங்களை வெட்டுவோம், கொல்லுவோம் எனக் கூப்பாடு போட்டுக்கொண்டே அவர்கள் வந்தார்கள். எங்களுடன் இருந்த ஆண்கள் 573 பேர்களும் காவல் நிலையம் நோக்கி ஓடினார்கள், பாதுகாப்பு கேட்டார்கள். ஆனால் காவல்துறையினர் சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. பாதுகாப்பு தர மறுத்துவிட்டார்கள்.

பல முஸ்லிம்கள் காட்டுப் புதர்களை நோக்கி ஓடினார்கள். அங்கே பல நாள்கள் பதுங்கி இருந்தார்கள்.

28–ஆம் நாளை காலை 11 மணியிலிருந்து இரவு 8 மணிவரை நாங்கள் எங்கள் கிராமத்தில் பல்வேறு பகுதிகளிலும் பதுங்கி இருந்தோம். உணவோ, தண்ணீரோ கூட எங்களுக்கு கிடைக்கவில்லை.

எவர் வீட்டிலும் பதுங்கிட இயலவில்லை. எங்களுக்கு யாராவது அடைக்கலம் தந்தால் அவர் வீட்டுக்கு தொலைபேசியில் அழைப்பு வரும். நீங்கள் முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கின்றீர்கள். உடனேயே அவர்களைத் துரத்திவிடுங்கள், இல்லையேல் நாங்கள் உங்கள் வீட்டைத் தாக்குவோம்.

அப்படித்தான் யாரோ “கர்ஜா காக்கா” என்ற எங்கள் கிராமத் தலைவரையும் யாரோ மிரட்டி இருக்கின்றார்கள். அவர்களை உடனேயே வீட்டை விட்டு வெளியேறும் படி கூறிவிட்டார். எங்கள் வீடுகள் எங்களுக்குச் சொந்த மான வாகனங்கள், பசுக்கள் எல்லாம் எரிக்கப்பட்டன.



நாங்கள் மீண்டும் காவல்துறையினரிடம் பாதுகாப்புக் கேட்டோம். அவர்கள் மீண்டும் உதவி செய்ய மறுத்துவிட்டார்கள். உங்களைக் காப்பாற்றிட எங்களுக்கு உத்தரவு வரவில்லை எனக் கூறிவிட்டார்கள். அவர்களும் நீங்கள் உடனேயே எங்கேனும் ஓடிவிடுங்கள் என துரத்தினார்கள். நாங்கள் எங்கள் கிராமத்தை விட்டகன்றோம்.

நடு இரவு நேரத்தில் பக்கத்திலுள்ள கண்டாடி கிராமத்தை சென்றடைந்தோம். அங்கே முன்னாள் காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ, பிஜால்பாய் தாமோர் வீட்டில் தஞ்சம் புகுந்தோம். அவர்கள் வீட்டில் இல்லை. அவருடைய மகன் எங்களுக்கு தண்ணீரும் சிறிது உணவும் தந்தான். ஆனால் அவரும் எங்களை உடனேயே இடத்தைக் காலி பண்ணிட சொன்னார். நாங்கள் அங்கிருந்தும் ஓடினோம்.

நாங்கள் “கவ்கர்” என்ற கிராமத்தை வந்தடைந்தோம். ஆனால் அங்குள்ள முஸ்லிம்கள் எப்போதோ அந்த கிராமத்தை விட்டு ஓடி விட்டார்கள்.

அங்குள்ள பள்ளிவாசலில் நாங்கள் இரவு தங்கினோம். என்னுடைய மைத்துனி ஷமீம் அப்போது நிறைமாத கர்ப்பினி. நாங்கள் நிறைய தூரமும் பல மணிநேரமும் நடந்தோம்.

இந்த நடை அலுப்பு என் மைத்துனி ஷமீமாவுக்கு பிரசவ வேதனையைக் கொடுத்தது. அவள் அந்தப் பள்ளிவாசலி லேயே ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அது ஒரு சுகப்பிரசவம்.

அங்கேயும் கவ்கர் கிராமத்திலும் கொலை காரர்கள். நாங்கள் அங்கிருந்து “குத்ரா” என்ற கிராமத்திற்கு வந்தோம். நாங்கள் குத்ரா கிராமத்திற்கு வந்திட அங்குள்ள ஆதிவாசிகள் உதவி செய்தார்கள்.

நாங்கள் முதலில் 500 ஐநூறு முஸ்லிம்கள் இருந்தோம். இப்பொழுது 17 மட்டுமே மீதி. எல்லாம் எங்கள் குடும்பம்தான்.

ஷமீமா இப்போது தான் குழந்தையைப் பெற்றிருந்தாள். அவளால் நடந்திட இயல வில்லை. அதனால்நாங்கள்அவளுடன்“குத்ரா” கிராமத்திலேயே தங்கிவிட்டோம். எங்களைச் சார்ந்த ஆண்களில் பெரும்பாலோர் ஓடி விட்டார்கள்.

என் தாய், எனது இரண்டு தங்கைமார்கள், எனது கணவரின் தந்தை, எனது இரண்டு சகோதரர்கள், என் தந்தையின் சகோதரிகள், அவளுடைய கணவன், அவனது மூன்று சகோதரிகள் இப்படி நாங்கள் 17 பேர் தங்கிவிட்டோம். சில ஆதிவாசிகள் எங்களுக்கு உதவி செய்தார்கள். நாங்கள் அங்கே இரண்டு நாட்கள் தலைமறைவாக இருந்தோம்.

என் மைத்துனி அப்போதுதான் குழந்தை பெற்றிருந்தாள் என்பதால் எல்லோரும் அவ ளிடம் பரிவு காட்டினார்கள். அவளோடு சேர்ந்து எங்களுக்கும் அடைக்கலம் கொடுத் தார்கள். அவர்கள் எங்களுக்கு உணவு தந்தார் கள். சில துணி மணிகளையும் தந்தார்கள். நாங்கள் எங்கள் அடையாளத்தை மாற்றிட ஆதிவாசிகளைப்போல் ஆடை அணிந்தோம்.

அந்த ஆதிவாசிகளின் வீடுகளை விட்டு நாங்கள் உடனேயே வெளியேறிட வேண்டி யிருந்தது. காரணம் கொலைகாரர்கள் சங்கப் பரிவாரத்தினர் அங்கேயும் வந்து முஸ்லிம் களைத் தேட தொடங்கிவிட்டார்கள். முஸ்லிம் களுக்கு அடைக்கலம் கொடுத்தால் நீங்களும் சேர்த்து அழிக்கப்படுவீர்கள் என எச்சரிக்கை விடுத்தார்கள்.

நாங்கள் குத்ரா கிராமத்தை விட்டு காலை 4 மணிக்குப் புறப்பட்டோம்.

நாங்கள் அழுது கொண்டே நடந்தோம். கொலைகாரர்கள் ஏற்படுத்திய அச்சமும் பீதியும் எங்களைத் துரத்தின.

நாங்கள் எதைப் பற்றியும் சிந்திக்கவில்லை. எங்கள் முன்னாலுள்ள ஒரே பிரச்சனை எங்கள் உயிர்களை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது? என்பதே...

எங்களோடு வந்தது 17 பேர் அதில் 4 ஆண்கள், எட்டு பெண்கள், மீதியெல்லாம் குழந்தைகள்.

இரண்டு நாட்கள் கழித்து அந்த ஆதிவாசி கள் “சப்பார்” வார்டு என்ற கிராமத்தில் கொண்டுவிட்டார்கள். இங்கிருந்து நாங்கள்



பானிவெல என்ற கிராமத்திற்கு செல்வதென்றும் அங்கு எங்களுடைய பழைய நண்பர் "மனா பாய்" யை சந்திக்கலாம் என்றும் எண்ணினோம்.

நான் பால் வியாபாரம் செய்து வந்தேன். இந்தப் பானிவெலா என்ற கிராமத்திலுள்ளவர்களுக்கு என்னை நன்றாகத் தெரியும்.

இந்த "பானிவெலா" என்பது இரண்டு மலைக் குன்றுகளுக்கு இடையேயுள்ளது. நடுவில் ஓர் அகலபாதை செல்கின்றது. நாங்கள் பானிவெலா செல்லும் முன்பு சப்பார்வார்டு என்ற கிராமத்தில் ஒரு குடிசையில் சிறிது நேரம் தூங்கினோம்.

நாங்கள் "பானிவெலா செல்லும் பாதையில் இறங்கியதும் சிலர் "முஸ்லிம்கள் செல்லுகின்றார்கள். அவர்களைக் கொல்லுங்கள், கொல்லுங்கள் எனக் கூப்பாடு போட்டார்கள்.

அவர்கள் "பானிவெலா" கிராமத்திலிருந்தும் "சப்பார்வார்டு" கிராமத்திலிருந்தும் ஆட்களை சேர்த்துக் கொண்டார்கள். நாங்கள் மிகவும் சோர்ந்து போயிருந்தோம். எங்களுக்கு அவர்களை எதிர்த்துச் சண்டைபோடும் சக்தி இல்லை. நாங்கள் எங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினோம். அதனால் எங்களால் ஒரு துரும்பைக் கூட எடுத்து அவர்களுக்கு எதிராகப் போட்டிட முடியவில்லை. நாங்கள் எல்லா திசைகளிலும் சிதறி ஓடினோம். ஆனால் அவர்கள் எங்களை விடவில்லை. நாங்கள் 17 பேர், அவர்கள் 25–க்கும் மேற்பட்டவர்கள். அவர்கள் ஒரு "டாட்டா சுமோ" வேனில் வந்திருந்தார்கள்.

அவர்கள் பெண்களை அவமானப்படுத்தினார்கள். அவர்களின் துணிகளை அப்புறப்படுத்தினார்கள். நிர்வாணமான எங்கள் பெண்களை அந்தக் கும்பலின் முன் வைத்தே கற்பழித்தார்கள். அவர்கள் ஷமீமாவின் குழந்தையைக் கொன்றார்கள். அவளது வயது இரண்டு நாட்கள். அவர்கள் என் கணவரின் தந்தையைக் கொன்றார்கள். அதன்பின் என் தந்தையின் சகோதரியைக் கொலை செய்தார்கள். பின்னர் அவளுடைய தந்தையையும் கொலை செய்தார்கள். பெண்களைக் கற்பழித்தப் பின்பு அவர்கள் எல்லோரையும் கொலை செய்தார்கள்.

அதன்பின் அவர்கள் என் குழந்தையைக் கொலை செய்தார்கள். அவர்கள் என் குழந்தையை வீசி விட்டெறிந்தார்கள். அதன் தலை ஒரு பாறையில் மோதியது. என்னைக் கற்பழித்த பின்பு ஒருவன் என் கழுத்தில் காலை வைத்து மிதித்தான். என்னால் அவர்களிடம் நான் ஐந்து மாத கர்ப்பினி என்று கூட கூறிட இயலவில்லை. அவர்கள் கம்புகள், கற்கள் இவற்றால் என்னைத் தாக்கினார்கள். அதன்பின் என்னை அங்கிருந்த புதருக்குள் தூக்கி எறிந்துவிட்டுச் சென்று விட்டார்கள். நான் மூர்ச்சையாகிப் போனேன்.

நான் இறந்து விட்டதாக அவர்கள் நினைத்து விட்டார்கள். ஆனால் சில மணி நேரங்கள் கழித்து எனக்கு நினைவு வந்தது.

நான் கண் விழித்துப் பார்த்தபோது என் குடும்பத்தினர் அங்கே பிணமாகக் கிடந்தார்கள். என்னால் எழுந்து கூட நிற்க இயலவில்லை. எனினும் ஒரு திகில், எங்கே நம்மை மீண்டும் கண்டு கொள்வார்களோ என்பது தான் அது. பயங்கர பசி, தாகம் என்னால் பொறுத்துக்

கொள்ள இயலவில்லை. தண்ணீர் தேடி நான் மலை முகட்டிலிருந்து இறங்கி கீழே விழுந்தேன்.

அங்கே ஒரு பொது தண்ணீர் "பம்பு" இருந்தது. கைகளால் அடித்தால் அதில் தண்ணீர் வரும். தண்ணீர் அடிக்கத் தொடங்கியதும், அங்குள்ள ஆதிவாசிகள் ஓடோடி வந்தார்கள். நான் ஒரு முஸ்லிம் எனத் தெரிந்தால் அவர்கள் என்னைக் கொலை செய்து விடுவார்கள். நான் அவர்களிடம் போய்ச் சொன்னேன். அதையும் அவர்களின் மொழியிலே சொன் னேன். அவர்கள் எனக்குத் தண்ணீரும், சில துணிமணிகளையும் தந்தார்கள். நான் அங்கே ஓர் மூலையில் படுத்து சிறிது நேரம் தூங்கி னேன். அப்போது அங்கே ஒரு போலீஸ் வேன், காவல்துறை வண்டி வந்தது. அவர்கள் அங்கே கொலை நடந்திருக்கின்றது என்பதைக் கேள்விப்பட்டுத்தான் வந்தார்கள்.

அவர்கள் என்னை வேனில் எற்றிக் கொண் டார்கள். இன்னும் கொலை செய்யப்படாமல் நான் உயிருடன் இருப்பது நான் பெற்ற பாக் கியம் என அவர்கள் என்னைப் பாராட்டினார் கள். அப்போது நான் அவர்களிடம் நான்பட்ட கஷ்டங்களைச் சொல்லிடவில்லை.

காவல்துறையினர் என்னை "லெக்மி கேடா" என்ற இடத்திற்கு அழைத்துச் சென் றார்கள். அங்கே எனக்கு உணவு தந்தார்கள். என் கதையைக் கேட்டார்கள். ஆனால் அவர்கள் நான் சொன்னதை எழுதிடவில்லை. அவர்கள் நான் சொன்னதற்கு நேர்மாறாகவே என் கதையை எழுதினார்கள், என்னை மிரட்டி னார்கள்.

அவர்கள் என்னிடம் "உன்னைக் கற்பழித் தார்கள் எனச் சொன்னாய் என்றால் நாங்கள் உன்னை ஒரு மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றிட வேண்டியது வரும். அங்கு சில மருத்துவ பரிசோதனைகளை நீ சந்திக்க வேண்டியதுவரும்என்றார்கள். மருத்துவமனை போய் வருவதற்குள் நீ கொலைச் செய்யவும் படலாம் என்றும் அவர்கள் என்னை மிரட்டி னார்கள். காவல்துறையினரோடு வாதாடிடும், போராடிடும்சக்தி எனக்கில்லை. இவர்களோடு சண்டையிட்டுப் புண்ணியமில்லை என முடிவுக்கு வந்த நான், காவல்துறையினரிடம் என்னை கோத்ரா அகதிகள் முகாமிற்கு அழைத்துச் செல்லுங்கள் என்றேன். அவர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள்.

ஐந்து நாட்கள் கழித்து நான் மருத்துவ மனைக்குச் சென்று என்னைக் கற்பழித்த தற்கான சான்றிதழைப் பெற்றேன்.

என்னைக் கற்பழித்தவர்களையும், என் குடும்பத்தினரை கொலை செய்வதர்களையும் பழி வாங்கிட நினைத்தேன் நான். ஆனால் என்னால் எதுவும் முடியவில்லை.

அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கலாம் என்றால் காவல்துறையினர் எனது புகாரில் உண்மை. ஆனால் கண்டு பிடிக்க இயலவில்லை என எழுதி கோப்பை மூடிவிட்டார்கள்.

கோத்ரா அகதிகள் முகாமிற்கு வந்து 20–ஆம் நாள் நான் என் கணவனை அங்கே சந்தித்தேன். என் கண்களையே என்னால் நம்பிட இயலவில்லை.

இப்போது நீதிக்கான போராட்டத்தை நாங்கள் இருவரும் இணைந்து மேற்கொண் டோம்.

மனித உரிமை அமைப்புகள் எங்களுக்கு உதவி செய்தன. நானும் எனது கணவரும் தலைமறைவாகவே வாழ்ந்தோம். இதனி டையே நான் வயிற்றில் சுமந்த மகளைப் பெற்றெடுத்தேன்.

வழக்கை மேற்கொண்டு நடத்தினால் என்னைக் கொலை செய்து விடுவோம் என மிரட்டினார்கள். நான் அதற்கு அஞ்சாதபோது பணம் தந்தார்கள், நான் மறுத்தேன்.

குஜராத் நீதிமன்றங்கள் வழக்கை நடத் திடவே மாட்டார்கள் என்ற நிலை.

இந்நிலையில் தான் தேசிய மனித உரிமை ஆணையத்திடம் சென்றேன். அவர்கள் என் வழக்கையும் வாழ்க்கையையும் விரிவாக விசாரித்தார்கள்.

பின்னர் உச்ச நீதிமன்றத்தில் மனு தந்தேன். அதில் குஜராத் நீதிமன்றத்தில் நீதி கிடைக்க

வில்லை. அதனால் இந்த வழக்கை குஜராத்திற்கு வெளியே நடத்திட வேண்டும் எனக் கோரி இருந்தேன். குஜராத் காவல்துறை இதில் நியாயமாக நடந்துகொள்ளாது என்பதால் வழக்கை மத்திய புலனாய்வுத்துறையிடம் ஒப்படைக்க வேண்டும் என வேண்டினேன். உச்ச நீதிமன்றம் அனைத்தையும் ஒத்துக் கொண்டது.

இதற்குள் நான் இருபது முறை வீடு மாறிவிட்டேன்.

மனித உரிமை அமைப்புகள் இதில் மிகப்பெரிய அளவில் உதவி செய்தது. மத்திய புலனாய்வுத்துறை கொலை செய்யப்பட்ட என் குடும்பத்தினரை புதைத்திருக்கும் இடத்தைத் தேடினார்கள். குஜராத் காவல்துறையினரும் சில மருத்துவர்களும் சில பிணங்களை மறைத்து விட்டார்கள்.

மத்திய புலனாய்வுத்துறை விடவில்லை. அனைத்தையும் அகழ்ந்தெடுத்தது. தடயவியல் வல்லுநர்களுடன் ஒத்துழைத்தேன். இறுதியில் குற்றம் சாட்டப் பெற்றவர்களில் 11 பேர் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் ஏழு பேர் விடுதலைச் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

எனக்கு நன்றாகத் தெரியும் அவர்களும் குற்றவாளிகள் தாம் அவர்களும் தண்டிக்கப் படும் வரை நான் போராடுவேன்.

சங்கப்பரிவாரத்தினர் இதுபோன்ற கொலைபாதகத் திட்டங்களை முஸ்லிம் களுக்கெதிராகவும், கிருஸ்தவ சிறுபான்மை யினருக் கெதிராகவும் தீட்டி வைத்திருக் கின்றார்கள்.



உண்மையைச் சொன்னால் அப்போதைய பிரதமர், பாரதீய ஜனதா கட்சியின் மூளை வாஜ்பேயி குஜராத்தில் நடந்ததை இந்தியா முழுவதும் எடுத்துச் சென்றிட வேண்டும் எனக் கொக்கரித்தார்.

ஆனால் இனப்படுகொலைகளைச் செய்பவர்களையும் அதற்குத் திட்டம் போட்டுத்தருபவர்களையும் தண்டிக்க பல்கீஸ் காட்டிய வீரம், விவேகம், கடந்த 15 ஆண்டுகளாக தாங்கிய துன்பங்கள் இவை சிறந்ததொரு படிப்பினையாக அமைந்திட வேண்டும்.

இதுபோல் தான் போராடினாள் வீர மங்கை சாஹிரா ஷேஹ். ஆனால் சூது மதியாளர்கள் அவளை சூழ்ச்சியில் மூழ்கச் செய்துவிட்டனர். உச்ச நீதிமன்றமும் அவளைத் தண்டித்துவிட்டது. அவள் தன் சிறை வாழ்க்கையை முடித்துக் கொண்டு மார்ச்சு 2007–ல் வெளியே வந்திருக்கிறாள்.

சங்கப்பரிவார காட்டுமிராண்டிகள் அவளைத் தடம் பிறழ செய்து விட்டார்கள். ஆனால் குஜராத்தின் யதார்த்த நிலையைப் பார்த்திடும்போது, அவளை நாம் குறை கூறிட இயலாது. மட்டுமல்லாமல் உச்சநீதி மன்றமும் அவளைத் தண்டித்திருக்க வேண்டாம். குஜராத்தின் சூழ்நிலைகளை மனதில் வைத்து அவளை எச்சரித்து விட்டிருக்கலாம்.

இந்த இரண்டு பெண்களில் பல்கீஸ் பானு காட்டிய பொறுமையையும் தீரமும் பெண்ணினத்திற்கு பெருமை சேர்ப்பது.

விடுபட்ட குற்றவாளிகளைத் தண்டிக்க அவள் மீண்டும் தலை மறைவாகவே வாழ்ந்து வருகின்றாள்.

பல்கீஸ் பானுவைப் போல் அன்று வீரத்தைக் காட்டிய வீரமங்கையரின் வரலாற்றை இங்கே தருகின்றோம், பாடம் பெறவும் படிப்பினைப் பெறவும்.

**வீர சுபைதாவும் ஃபாசிஸ்டுகளும்...**

அந்தச் சகோதரியின் பெயர் சுபைதா மன்சூரா. வயது 35, குஜராத்திலுள்ள அஹ்மதாபாத் பகுதியில் மண்டிஜவ்கரின் என்ற இடத்தில் வாழ்ந்து வந்தாள்.

இது பெரும்பான்மையாக இந்துக்கள் வாழும் பகுதி. சுமார் நூறு பேர் கொண்ட ஒரு கொலை வெறிக் கூட்டம் முஸ்லிம்களின் முகவரியோடு மோப்பம் பிடித்து வந்து கொண்டிருந்தது.

சுபைதாவை நிச்சயமாக அவர்கள் கற்பழித்த பின்னரே கொலை செய்வார்கள். ஏனெனில் முஸ்லிம் பெண்களை இந்து பயங்கரவாதிகள் இப்படித்தான் கொலை செய்கின்றார்கள் என்ற செய்தி ஏற்கெனவே சுபைதாவை வந்தடைந்துவிட்டது.

ஆமாம்... அதோ சுபைதா மன்சூராவின் வீடு நோக்கி அவர்கள் வந்து கொண்டிருக் கிறார்கள். இல்லை மரணம் அவர்களின் வடிவில் வந்து கொண்டிருந்தது. அத்தோடு அவமானமும் வீடு தேடி முகவரியோடு வந்து கொண்டிருந்தது.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களெல்லாம் மன்சூராவின் மரணத்தையும் அவள் மான பங்கப்படுத்தப்படுவதையும் வேடிக்கைப் பார்க்க குழுமிவிட்டார்கள்.

தானும் தன்னைச் சார்ந்த ஏழு பேரும் காப்பற்றப்படுவோம் என்ற எண்ணம் அவளுக் கில்லை.

மரணம், அவமானம் இவை தன்னை நெருங்கி வரும் நிலையிலும் மதி மயங்க வில்லை. நிலை குலையவில்லை சுபைதா மன்சூரா.

ஃபாசிஸ்டுகள் குஜராத் இனப் படுகொலை யின்போது பயன்படுத்திய கொடுமையான ஆயுதம் கேஸ் சிலிண்டர்கள். சுபைதாவும் அதே சிலிண்டரை தனது ஆயுதமாகப் பயன் படுத்தினாள்.

ஃபாசிஸ்டுகள் அவருடைய வீட்டை நெருங்கியபோது அவள் தன் வீட்டிலிருந்து கேஸ் சிலிண்டரை இழுத்து வந்து வீட்டின் முன்னுள்ள வராண்டா என்ற சிறு முற்றத்தில் வைத்தாள். கேஸை திறந்துவிட்டாள், கையில் தீப்பெட்டியை எடுத்துக் கொண்டாள். அந்த ஃபாசிஸ்டுகளை நோக்கி இப்படிக் கூறினாள் :

உயிரின்மேல் ஆசையிருந்தால் ஓடி விடுங்கள் இல்லையேல் விரைந்து வெளி வந்து கொண்டிருக்கும் கேஸை நெருப்பாக எரியச் செய்வேன்.

நானும் என்னோடு சேர்ந்த ஏழு பேரும் மரணிப்போம் என்பது உண்மையே. அதற்கு நாங்கள் எப்போதோ தயாராகிவிட்டோம். அத்தோடு உங்களையும் கூண்டோடு அனுப்பி விடுவோம்.

அவ்வளவுதான் அந்த ஃபாசிஸ்டுகள் பின்னங்கால் பிடரியில் பட ஓடினார்கள். ஓடினார்கள், ஓடிக்கொண்டேயிருந்தார்கள். மரணத்தில் ஓலம் அவர்களைத் துரத்திக் கொண்டிருந்தது. வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள் மாயமாய் மறைந்தார்கள்.

பின்னர் சுபைதா மன்சூரா தன் குடும்பத் தவர்கள் ஏழு பேரையும் அழைத்துக் கொண்டு சொந்த பந்தங்கள் இருக்கும் இடம் தேடி நகர்ந்தார்.

அது போது அகதிகள் முகாம்களை நோக்கி அனைத்து முஸ்லிம்களும் பயணமாகிக் கொண்டிருந்தார்கள்.

**மைமூனாவைத் தேடிவந்த மரணம்...**

**அதே அஹ்மதாபாத்!**

மைமூனா தன் வீட்டில் தனது இரண்டு குழந்தைகளுடன் இருந்து கொண்டிருந்தாள். துணையாக யாருமில்லை. தனித்தே இருந்தால்.

சுமார் 23 பரிவாரத்தார் அவளது மானத் தைப் பறிக்கவும், அதன் பின் மரணத்தைப் பரிசாகத் தரவும் அவள் இல்லம் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

முதல் மாடியில் நின்று அவர்கள் வரு வதைப் பார்த்தாள். அஞ்சவில்லை மைமூனா. ஒரு வினாடியில் தன்னை மரணத்திற்குத் தயாராக்கிக் கொண்டாள். தன் அன்பு குழந்தைகளையும் அல்லாஹ்வைச் சந்திக்கத் தயாராக்கிக் கொண்டாள். தாயும் சேய்களும் மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந் தார்கள்.

பாய்ந்து வரும் ஃபாசிஸ்டுகளிடம் கையெ டுத்து கரம் கூப்பி மடிப்பிச்சை கேட்கவில்லை மைமூனா. அவர்கள் தன் இல்லம் நோக்கி

நகர்ந்து வருவதை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தபால்காரன் முகவரி தேடி கடிதம் தர வருவதைப்போல் அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள் அவளது முகவரி தேடி…

மைமூனாவின் அழகையும், உயிரையும் குறி வைத்து வந்த அவர்களுக்கு மைமூனாவின் குறி தெரியவில்லை.

எதிர்பாராமல் தங்களைத் தாக்கிய மிளகாய்ப் பொடியின் எரிச்சலை தாங்க முடியவில்லை. தங்கள் வயிற்றெரிச்சலை அசிங்கமான வார்த்தைகளாக வாந்தி எடுத்தார்கள்.

“திரும்பி வருவோம், உன்னை அதம் பண்ணுவோம்” என மிரட்டிவிட்டு ஓடி விட்டார்கள்.

அவளுடைய கணவன் ஒரு பரபரப்பான வியாபாரி. அவன் பம்பாய் சென்றிருந்தான். கூட்டமான தொகுப்பு வீடுகளில் (ஊஃ அகூகு) ஒரு விசாலமான வீட்டில்தான் அவள் டியிருந்தாள். ஃபாசிஸ பரிவார கொலை யாளிகள் தன்னை நோக்கி வருவதைக் கண்ட அவள், அக்கம் பக்கத்து வீட்டாரிடம் “உங்களவர்கள் வருகின்றார்கள், அவர்களைத் தடுங்கள்” எனக் கோரினாள். கடைசி வரை கத்திப் பார்த்தாள், பயனேதுமில்லை.

ஒரு முடிவுக்கு வந்தால், நாம் மட்டும் மரணிக்க வேண்டாம், வருபவர்களையும் அந்த ஃபாசிஸ்டுகளையும் இங்கே இறப்பு களை வேடிக்கைப் பார்ப்பவர்களையும் அழைத்துச் செல்லலாம் மண (மறுமை)



மைமூனா அகதிகள் முகாம் நோக்கி நகர்ந்தாள்.

**வீர சகோதரி சவ்தா - ஓர் விசித்திரப் பெண்.**

அதே அஹ்மதாபாத், மணி நகரில் குடியிருக்கின்றாள்.

ஃபாசிஸ பரிவாரத்தினர் தங்கள் பகட்டான வாளைச் சுழற்றிக் கொண்டு அவளை நெருங்கி வந்தார்கள். வீட்டின் முன் நின்ற காரைத் தவிடு பொடியாக்கினார்கள். அவள் வீட்டை நெருங்கும் முன் எதிர்ப்பட்ட இரண்டு முஸ்லிம்களையும் கண்டம் துண்ட மாக வெட்டிப் போட்டார்கள். நெருப்பிட்டுக் கொளுத்தினார்கள், சவ்தா அதைக் கண்டாள், குலை நடுங்கினாள் அவர்கள் அடுத்த இலக் காக அவளை நோக்கியே வந்து கொண்டி

வாழ்க்கைக்கு என முடிவு கட்டினாள்.

தன் வீட்டில் கேஸ் தீர்ந்துபோனால் பயன்படுத்துவதற்காக வாங்கி வைத்திருந்த மண்ணெண்ணையை எடுத்தாள் முடிந்த இடங்களிலெல்லாம் தெளித்தாள்.

வீட்டில் கிடந்த மரத்தில் செய்த பொருட் கள், பஞ்சு மெத்தைகள், துணி மணிகள் எல்லாவற்றையும் கொண்டு வந்து போட்டு அவற்றிலும் அதே மண்ணெண்ணையை ஊற்றினாள்.

எதிரே வரும் ஃபாசிஸ கொலையாளிகள் அவளையும் கொன்று எரிக்கத்தானே செய் வார்கள். முந்திக்கொள்வதாக முடிவெடுத்தாள் சவ்தா. எல்லோரும் ஓடோடி வந்தார்கள்.



என்னவென்று கேட்டார்கள் என்ன இப்படிச் செய்கின்றீர்கள் எனக் கேட்டார்கள்.

மரணத்தை வரவேற்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன் என்றாள். “என்னோடு வர எல்லோரும் தயாராகுங்கள்” என்றாள்.

திரண்டவர்கள் ஓடிப்போய் அங்கே வந்த ஃபாசிஸ்டுகளிடம் முறையிட்டார்கள். அந்த ஃபாசிஸ்டுகள் விடுவதாய் இல்லை.இறுதியில் அந்த ஃபாசிஸ பரிவாரங்களிடம் அந்தப் பெண்கள் இப்படிச் சொன்னார்கள் “நீங்கள் மேலே சென்று கீழே வருவதற்குள் நீங்களும் எரிந்து போவீர்கள்”

அவ்வளவுதான் ஒரே ஓட்டமாக ஓடினார்கள் அந்த ஃபாசிஸ்டுகள். தங்கள் உயிருக்கு மேல் அவ்வளவு பயம் அவர்களுக்கு..!

## பல்கீஸ்பானு வழக்கும் - நிருபையா வழக்கும் நீதிமன்றத்தின் பாரபட்சமும்

2012–இல் நம் நாடறிந்த ஒரு வழக்கு. நிருபையா என்ற பெண்மணி கற்பழிக்கப்பட்ட வழக்கு.

நிருபையா என்ற பெண்மணி தன்னுடைய ஆண் நண்பன் உடன் (Boy Friend) இரவு 11 மணியளவில் டெல்லியில் பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த பஸ்சுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். அப்போது அங்கு பஸ்ஸில் இருந்தவர்களுடன் வாக்குவாதம் பின்னர் அவள் கற்பழிக்கப்பட்டாள், காயப்படுத்தப்பட்டாள்.

அவருடைய ஆண் நண்பர் அவ்ந்திரபிரதாப் பாண்டே படுகாய மடைந்தான். கற்பழிக்கப்பட்ட நிருபையா அரசு செலவில் சிங்கப்பூர் அனுப்பப்பட்டார். இறுதியில் கிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். (எமது அனுதாபங்கள்)

இந்த நிருபையா (எ) ஜோதி கற்பழித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில் 4 பேர் மீது குற்றம் சாட்டப் பெற்றது.

இதுகுறித்தத் தீர்ப்பு மே–5 ஆம் நாள் (2017) அன்று வந்தது. இதில் அனைவருக்கும் கீழ் நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.

தீர்ப்பில் இந்த குரூரத்திற்கு மரண தண்டனை வழங்கவில்லை என்றால், வேறு எந்த குற்றத்திற்கு தூக்குத் தண்டனை

வழங்குவது எனக் கேட்டார்கள் நீதிபதிகள். இதில் நீதிபதி பானுமதியும் ஒருவர்.

ஆனால் பல்கீஸ் பானு விவகாரத்தில் கீழ்நீதி மன்றம் ஆயுள் தண்டனையைத்தான் விதித்தது.

ஆனால் நிருபையா வழக்கில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டதோடு, நிருபெய்யா சட்டம் என்றொன்றையும் கொண்டு வந்தார் கள். அத்தோடு வருடந்தோறும் 1000 கோடி ரூபாய் மத்திய நிதிநிலை அறிக்கையில் (பட்ஜெட்டில்) ஒதுக்கப்படு கின்றது.

இந்தப் பணம் தன்னார்வ குழுக்களுக்கு ஒதுக்கப்பட்டு பெண்களின் மேம்பாட்டுக்குச் செலவு செய்யப்படுகின்றது. இதில் வேடிக்கை என்னவெனில் நிருபைய்யாவின் சகோதரன் ஓர் கற்பழிப்பு வழக்கில் குற்றம் சாட்டப் பெற்று நிற்கின்றான்.

பல்கீஸ்பானு விவகாரத்தில் இப்படி எதுவும் நடக்கவில்லை. குரூரமான குற்றத்தைச் செய்தவர்களுக்கு ஏன் மரண தண்டனை வழங்கப்படவில்லை?

பல்கீஸ்பானு விஷயத்தில் அவள் நீதியைப் பெற்றிட 15 ஆண்டுகள் ஆயின. இன்னும் நீதிக்கான அந்தப் பெரும்போர் தொடரும், ஏனெனில் தண்டனைப் பெற்றவர்கள் சங்கப் பரிவார கும்பலின் ஆதரவோடு உச்ச நீதிமன்றம் செல்வர்.

நிருபையா வழக்கு விவகாரத்தில் அரசே அனைத்து முயற்சிகளையும் செய்தது. விரைந்து வழக்கை முடிக்க முனைப்போடு செயல்பட் டது. இதனால் வழக்கு ஐந்தே ஆண்டுகளில் உச்சநீதிமனறம் என்ற கட்டத்தையும் கடந்து வந்துவிட்டது.

ஆனால் பல்கீஸ்பானு விவகாரத்தில் அவருக்கு எல்லாக் கெடுபிடிகளையும் கொடுத் தது. அத்தோடு வழக்கை மண்ணோடு புதைக்க எல்லா வழிமுறைகளையும் கையாண்டது.

பல்கீஸ் பானுக்கு எல்லாவிதத்திலேயும் உதவியாக இருந்தவர் மனித உரிமை போராளி டீஸ்டா செட்டல்வாட். இவரை சிறைபிடிக்க எல்லாவிதமான முயற்சிகளையும் மேற் கொண்டது மோடி அரசு. அவர்மீது இல்லாத, பொல்லாத வழக்குகளைப் புனைந்து அவரை அலைக் கழித்து, அலைக்கழித்துக் கொண்டிருக் கிறது.



இதனால் 15 ஆண்டுகள், உயர் நீதிமன்ற அளவிலே ஆகிவிட் டது. இனி உச்ச நீதிமன்றம் என்ற பெரும் கட்டடத்தைக் கடக்க வேண்டியுள்ளது.

**ஆக நமது நீதி துறை ஓர வஞ்சம்மிககது என்பதையே பல்கீஸ்பானு விவகாரமும்! நீதிக்காகப் போராடும் பல்கீஸ்பானு அவருக்கு எல்லாவிதத்திலேயும் துணை நிற்கும் டீஸ்டா செட்டல்வாட் அவர்களின் விவகாரமும் உணர்த்துகின்றன. இவர்களுக்குத் துணை நிற்போம். இன்ஷா அல்லாஹ்.**

– எம்.ஜி.எம்.



விட்டார்கள்", என்பதே அந்தச் செய்தி...

உலகம் சுற்றவில்லை நின்றுவிட்டது. ஷஹர் நேரம், தனியாக அதுவும் துஆ செய்யவும், வீட்டிலுள்ளவர்கள் தடையாக இருக்கவில்லை.

இது பஜ்ர் தொழுகை வரைத் தொடர்ந்தது. பின்னர் கவிக்கோ இல்லம் நோக்கி பணையூர் விரைந்தோம். எல்லைகளைக் கடந்து உலகையெல்லாம் தன் கவிதை வரிக்குள் வழைத்துப் போட்டவர். வாரிச்

# இழக்கக் கூடாததை?

**இறைவனிடமிருந்தே வந்தோம், அவனிடமே மீண்டும் செல்வோம்!**

**கவிக்கோ**
**நவம்பர்-9, 1937**
**ஜூன்-2, 2017**

சாதாரண நாட்களில், ஷஹர் நேரம் கைப்பேசி ஒலித்தால் ஒரு திடுக்கந்தான். ஏனெனில் அவ்வேளையில் வரும் தொலைபேசி / கைப்பேசி அழைப்புகளில் ஆபத்தின் அறிவிப்புகளே வரும். ஆனால் நோன்பு நாட்களில் வரும் அழைப்புக்கள் அப்படிஅல்ல.

சாதாரணமாக நாள் பொழுதில் அழைக்க முடியாதவர்கள் ஷஹர் நேரத்தில் பயன்படுத்திக் கொள்வார்கள்.

ஷஹர் நேரத்தில் அயர்ந்து தூங்கும்போது இந்த அழைப்புகள் ஓர் அருள்கொடை. ஆனால் அன்று பத்திரிகையாளர், சிராஜுல் ஹயன் அவர்களிடமிருந்து வந்த அழைப்பு அப்படிஅல்ல. அது இடிபோல் செய்தி ஒன்றைத் தாங்கி வந்தது.

ஆமாம்! "கவிக்கோ அவர்கள் மரணித்து

சுருட் டிக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தார் மரணத்தின் மடியில். என்னைப்போல் கண்ணீர் உகுத்தவர்கள் அங்கே அமர்ந்திருந்தார்கள். சோகத்தைப் பரிமாறிக் கொண்டார்கள். ஆறுதல்களை பரிமாறிக் கொண்டார்கள்.

ஏற்கெனவே செங்கம் ஜப்பார் அவர்களின் மரணத்திற்கு, அவருடைய சொந்த ஊரான செங்கம், செல்வதாக முடிவு செய்திருந்தோம். கவிக்கோவின் அடக்கம் பற்றிய செய்திகள், மகன் லண்டனிலிருந்து வரும்

வரை காத்திருப்போம், என மரண வீட்டில் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த யூவர்சல் வெளியீட்டு நிறுவனத்தின் ஷாஜஹான் அவர்கள் சொன்னார்கள். அதனால் இந்த கால அவகாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு செங்கம் நோக்கிப் பயணமானோம்.

கவிக்கோவைப் பற்றிய எண்ணங்கள். அவர்களை அல்லாஹ் அழைத்துக் கொண்டதில் ஏற்பட்ட வெறுமைகள், இவையெல்லாம் நம்மைப் பற்றிப் பீடித்துக் கொண்டே இருந்தன.

மாதமொருமுறை கவிக்கோவை சந்தித்து வந்தோம். இந்த சந்திப்புக்கள், பின்னர் எல்லோரும் அதிகமாக விரும்பும் சந்திப்பாக ஆகியது. நானும், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் இன் பொருளாளர் இல்யாஸ் ரியாஜி அவர்களும் அன்புத் தம்பி, ரஹ்மத்துல்லாஹ் அவர்களும் தம்பி பைசல்கான் இணைந்தே சென்றோம். சந்திப்புக்கள் பல விவாதமாகவும் மாறியது. இவற்றால் அனைவரும் பலடைந்தோம்.

கடைசி சந்திப்பின் போது, அவர்களுடைய சிறுநீரகத்தில் சற்று பிரச்சனை என்றார்கள். நான் அதேபோன்ற பிரச்சனைகளுக்கு, சென்னை விஜயா ஃபவுண்டேஷன், மருத்துவர் டாக்டர் சின்ன சாமி அவர்களிடம் கடந்த 10 வருடங்களாகச் சிகிச்சைப் பெற்று வருகின்றேன். நல்ல சேவை மனப்பான்மையோடு கூடிய மருத்துவர் “அவரிடம் ஒருமுறை காட்டுவோம்” என்றேன். அதற்கு நானும் கேள்விப் பட்டேன். ஆனால் நான் இப்போது ஒரு மருத்துவரிடம் சிகிச்சைப் பெற்று வருகின்றேன் என்றார்கள்.

நான், நீங்கள் டாக்டர் சின்னசாமி அவர்களிடம் சிகிச்சைப் பெறாவிட்டாலும், ஓர் ஆலோசனையைப் பெறுங்கள் என்றேன். அதற்கு சரி என்றார்கள். நான் டாக்டர் சின்னசாமி அவர்களிடம் நேரம் பெற்றுவிட்டு உங்களைத் தொடர்புகொள்கிறேன், நானும் வருகின்றேன் என்றேன். “அப்படியானால் ஆகட்டும்” என்றார்கள்.

இன்னும் பல விஷயங்களைப் பேசினோம். பல வரலாற்று செய்திகளைப் பரிமாறிக் கொண்டோம். நான் எப்போதும் போல நாட்டு நடப்புகளையும், உலக நடப்புகளையும் இயக்கும் சூழ்ச்சிகளையெல்லாம், பல நூல்களை ஆதாரமாகக் காட்டினேன். விளக்கிச் சொன்னேன். “இவற்றையெல்லாம் தமிழில் கொண்டு வா” என்றார்கள்.

இதை கவிக்கோ அவர்கள் இட்டக்கட்டளையாகவே எடுத்துக் கொண்டேன் இன்ஷா அல்லாஹ், அவற்றைத் தமிழில் தந்திட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

மீண்டும் கவிக்கோவின் மருத்துவச் சிகிச்சைக்கு வருவோம்.

நான் வீடு வந்ததும், விஜயா மருத்துவ மனையைத் தொடர்புகொண்டு, டாக்டர் சின்னசாமி அவர்களைக் கேட்டேன், அவர் வெளியூரிலிருப்பதாகக் கூறினார்கள். அவரும் திரும்பி வரும் தேதியைக் குறிப்பிட்டார்கள். நான் அந்தக் குறிப்பிட்ட தேதியில் மீண்டும் ஒரு நேரத்தை (Appointment) வாங்கினேன். கவிக்கோ அவர்களைத் தொடர்பு கொண்டு நேரம் பெற்றதைச் சொன்னேன். அதற்கு “இப்போது வேண்டாம். நான் சொல்லும்போது,நேரம் வாங்கு” என்றார்கள். அதன் பிறகு கவிக்கோ அவர்களை மரணித்திலேயே சந்தித்தேன்.

எல்லோருக்கும் – தமிழ் கூறும் உலகுக்கும் கவிதை உலகுக்கும், பேரிழப்பு, என்னைப் பொறுத்தவரை, ஏதோ இப்போது இழக்கக் கூடாததை நிரந்தரமாக இழந்துவிட்டேன்.

அல்லாஹ் போதுமானவன். இறைவனிடமிருந்து வந்தோம், அவனிடமே மீண்டும் செல்வோம்.

- MGM



# ‘கவிக்கோ’ ஓர் உந்து சக்தி..!

**மு. குலாம் முஹம்மது**
ஆசிரியர் - வைகறை வெளிச்சம்

கல்லூரி நாட்களில் தான் கவிக்கோ அவர்களை அறிவேன். அவர்களை நேரில் பார்த்திட வேண்டும் என்ற ஆசையை குமரி மாவட்டம் கோட்டாற்றில் நடந்த ஒரு பொது விழாவில் சந்தித்துத் தணித்துக் கொண்டேன்.

‘கவிக்கோ’ அவர்களுடைய கவிதைத் தொகுப்புகளை வாங்கிப் படித்து அடிக்கடி அவர்களிடம் அவரது சொல் நயத்தையும், அதில்வழியும்சுவையையும்கருத்தாழத்தையும் சொல்லிச் சொல்லி வியப்பேன்.

‘மூச்சுக் குதிரைகள் ஒடித்தள்ளிய நுரைதான் இந்த நரை’ போன்ற கவிதைகள் என் நண்பர்கள் அடிக்கடி என்னிடமிருந்து அடிக்கடி செவிமடுக்கும் கவிதைகளாக இருந்தன.

‘இரவில் பெற்றோம் இன்னும் விடிய வில்லை’ என்ற கவிக்கோவின் மாணவர் எழுதிய கவிதை பாரெல்லாம் பரவிய கவிதை. இதையும் இடைவிடாமல் சொல்லி மகிழ்வோம். சொல்லில் சுவையும் பொருளில் சிந்தனைச் செல்வங்களும் சேர்த்துக் கொண்டே இருந்த ‘கவிக்கோ’ அவர்கள் மிகவும் உயரமான இடத்தை நம் உள்ளத்தில் பிடித்துக் கொண்டார்கள்.

எவ்வளவு உயரம் என்றால் நம்மால் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்திற்குப் போய்விட்டார். நாம் அவரை சந்திப்பதே கடினம் தான் என்ற எண்ணங்களே அன்றைய நாட்களில் மேலோங்கி நின்றன.

ஒரு கட்டத்தில் நான் இஸ்லாமிய இலக்கியங்கள் பலவற்றை மொழி பெயர்த்தேன். அவற்றுள் சில வாசகர்களிடையே மிகவும் பிரபல்யமானவையாக இருந்தன.

‘இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள்’. இஸ்லாமியக் கல்வி, ‘இஸ்லாம் உங்கள் பார்வைக்கு’ என்ற இலக்கியங்கள் முக்கிய மானவை.

இவை கவிக்கோ அவர்களின் பார்வைக்கும் சென்றிருந்தன. கவிக்கோ

அவர்கள் வீற்றிருந்த அவைகள் சிலவற்றில் இவை பேசப்பட்டன என்பதை நண்பர்கள் வட்டங்களின் வழி அறிந்து மகிழ்ந்தேன். ஏதோ நமது இலட்சியங்களுக்கும் இலக்கியங்களுக்கும் அங்கீகாரம் கிடைத்ததாக மகிழ்ந்தேன். இதனால் உற்சாகமடைந்தேன். இன்னும் நிறைய இந்தத் திசையில் உழைக்க வேண்டும் என்ற எனது முடிவை கவிக்கோவும் படிக்கின்றார் என்பது இன்னும் உறுதி செய்தது.

### எடுத்துக்காட்டு

ஒரு கட்டத்தில் நான் நடத்தி வந்த மனித நீதிப் பாசறையின் நிகழ்ச்சி ஒன்றுக்கு திண்டுக்கல் சென்றிருந்தேன். அங்கே ஓர் அரங்கில் கவிக்கோ அவர்கள் பேசுகின்றார்கள் என்பதை சுவரொட்டிகள் சொல்லின. அந்த அரங்குக்குச் செல்ல வேண்டும் என அவாவுற்றேன். ஆனால் நண்பர்கள் தங்கள் நிகழ்ச்சி தாமதமாகிடக் கூடாது என்றார்கள். அந்த அரங்குக்குச் செல்கின்றேன் என்றாலும் குறித்த நேரத்தில் பாசறையின் நிகழ்ச்சிக்கு வந்து விடுவேன் என நண்பர்களிடம் அனுமதி பெற்று அரங்கம் நோக்கிச் சென்றேன்.

“ஆகா! அங்கே கவிக்கோதான் பேசிக் கொண்டிருந்தார்கள்” சரியான நேரத்தில் வந்து விட்டோம் என அகமகிழ்ந்த போது இன்னொரு அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் கவிக்கோவின் உரையில் ஆமாம் நான் மொழி பெயர்த்த “இஸ்லாமியக் கல்வி” என்ற நூலிலிருந்து ஒரு நிகழ்வைக் கவிக்கோ அவர்கள் தன் உரையில் தனக்கே உரிய நயத்தோடு குறிப்பிட்டார்கள். தராவிஹ்–இல் தொழுதிட வேண்டிய ரக்ஆத்துகள் எட்டா? என்ற விவாதம் சண்டையாக எகிப்தில் மாறிய போது இமாம் ஹஸன் அல்பன்னா அவர்கள் தீர்த்து வைத்ததை ‘கவிக்கோ’ அவர்கள் பாங்குறச் சொல்லி அனைவரையும் சிந்திக்க வைத்தார்கள்.

உரை முடிவதற்குள் நண்பர்கள் என்னை இழுத்துச் சென்றுவிட்டார்கள். நான் பேசிட வேண்டிய நிகழ்ச்சிக்கு...

பேசும்போது கவிக்கோ அவர்கள் இவனென்ன எழுதுவது நாமென்ன படிப்பது என எதையும் விட்டு வைக்க மாட்டார்கள் போலும், எல்லாவற்றையும் படித்துவிடுவார்கள் போலும், கண்டது கற்க பண்டிதன் ஆவான் என்பது கவிக்கோவுக்கு அதிகமாகப் பொருந்தும் என நண்பர்களிடம் பேசிக் கொண்டே போனேன். இதை இயக்க ஊழியர்களின் கூட்டங்களில் சொல்லி அவர்களையும் எதையும் தள்ளுபடி செய்யாமல் படியுங்கள், பார்த்தீர்களா கவிக்கோவை? என உற்சாகப் படுத்தினேன்.

கவிக்கோவை நேரில் பார்த்து, ‘அண்ணே நான் தான் அந்த நூலை மொழி பெயர்த்தேன்’ எனச் சொல்லிப் பீற்றிடலாமா என நினைத்தேன். இல்லை, வேண்டாம் என்றது உள்மனது.

ஆனால், கவிக்கோவின் உரையில் இடம் பெற்ற மேற்கோள் ‘இன்னும் எழுது, எழுதிக் கொண்டே இரு’ என என்னை உற்சாகப் படுத்தியது.

இஸ்லாமிய இயக்கங்களின் கருத்துக்கள் அறிஞர்கள் வட்டத்தை எட்ட வில்லையே என்ற எங்கள் ஆதங்கத்துக்கு ஆறுதலாக இருந்தது கவிக்கோ அவர்களின் உரை.

இப்படி இனம் புரியாத ஓர் ஆற்றலாக கவிக்கோ அவர்கள் என்னை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

நான் யார் யாரைப் பெரியவர், எட்டாத கனி என நினைத்துக் கொண்டிருந்தேனோ அவர்களில் ஒருவர் கவிக்கோ அவர்கள்.

ஒருநாள், அந்தக் கவிக்கோ அவர்களிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் “ஆப்கானிஸ்தான் ஜாத்களின் தியாக வரலாறு” என்ற நூலை எழுதியது நீங்கள்தானே எனக் கேட்டார்கள். நான் ஆம் என்றேன். அதேபோல் இப்போது ஆப்கானிஸ்தானில் நடக்கும் போர், தாலிபான்கள், இவர்களைப் பற்றி எழுத முடியுமா? எனக் கேட்டார்கள். அதற்கான இலக்கியங்கள் சிலவற்றை வேண்டுமானால் ஏற்பாடு செய்கின்றேன் என்றும் சொன்னார்கள். நான் முடியும், நானும் நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்து வருகின்றேன். என்னிடமும் சில தகவல்கள் இருக்கின்றன, அவற்றை நான் உங்களுக்கு தந்துவிடுகின்றேன் நீங்கள் எழுதுங்கள், நான் எழுதினால் ஒரு

குறிப்பிட்ட வாசகர் வட்டம் வரை தான் செல்லும், நீங்கள் எழுதுங்கள் தமிழ் உலகமே படிக்கும் என்றேன், இல்லை நீங்கள்தான் எழுத வேண்டும் என்றார்கள்.இந்த வரிகள் இன்னும் அதிக உற்சாகத்தை தந்தது.

சில வருடங்களுக்குப் பின், மனித நீதிப் பாசறைக்கு மிகப்பெரிய நெருக்கடியை அரசு தந்தது. பாசறையைச் சார்ந்தவர்கள் எனப் பொய்சொல்லி மூன்று பெண்களைக் கைது செய்து கொட்டடிகளில் அடைத்தார்கள். பத்திரிகைளில் பரபரப்பும் பீதியும் நிறைந்த செய்திகளைப் பதிக்கச் செய்து தமிழ்நாட்டில் ஒரு பெரும் தீவிரவாத அமைப்பு நடப்பதாக வும், நான் நிறுவி நடத்தி வந்த விடியல் வெள்ளி என்ற பத்திரிகையே ஒரு பெரும் தீவிரவாத அமைப்பு என்றெல்லாம் பொய்யும் புனைந்துரைகளையும் பொது ஊடகங்களில் வழி பரப்பினார்கள்.

மனித நீதிப் பாசறையின் தலைவர் என்ற அடிப்படையிலும், விடியல் வெள்ளி மாதஇதழின் நிறுவனர்– ஆசிரியர் என்ற அடிப் படையிலும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு ஒன்றை நடத்தி உண்மையைத் தெளிவுபடுத் தினேன். எல்லா ஆங்கிலப் பத்திரிகையாளர் களும் தமிழ்ப் பத்திரிகைகளும் என் விளக் கத்தை வெளியிட்டு பலப்படுத்தினார்கள்.

அடுத்த நாள், சென்னை புத்தகக் கண் காட்சிக்கு சென்றிருந்தேன். அங்கு நண்பர்கள் பலர் என்னைச் சந்தித்து செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பின்புறத்தி லிருந்து உரிமையோடு யாரோ என்னைப் பற்றிப் பிடிப்பதுபோல் இருந்தது. திரும்பிப் பார்த்தேன், கவிக்கோ அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். “என்ன? உங்களுக்கு ஒன்றுமில்லையோ?” எனக் கேட்டார்கள்.

கவிக்கோ போன்ற ஆளுமைகளும் எல்லா வற்றையும் அக்கறையோடு உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தேன். கவிக்கோவின் வார்த்தைகள் நீதிக்காகப் போராடிக் கொண்டிருந்த என்னுள் ஒரு புதுத் தெம்பைத் தந்தது.

இதுபோன்ற வேளைகளில் அ.மார்க்ஸ், வழக்கறிஞர் லஜபதிராய், சங்கர சுப்பு, சங்கரன், போன்றவர்களும், சட்ட ரீதியாக உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கி நம்மை நிலைப்படுத்தி இருக்கின்றார்கள்.

கவிக்கோவின் சமுதாய சமூக ஆர்வங்களை நான் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தேன். பல கல்வி உதவிகளைக் கவிக்கோவின் குழுமம் வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்தேன். அடுத்து ஓர் மருத்துவக் கல்வி நிறுவனத்தை நிறுவுவதற்கான முயற்சிகளில் கவிக்கோ அவர்கள் அதிக அக்கறையுடன் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிந்தேன்.

### வைகறைப் பேட்டி

ஆகவே நமது “வைகறை வெளிச்சம்” இதழில் கவிக்கோவின் பேட்டி ஒன்றின் மூலம் அவருடைய முயற்சிகளையும் அக்கறை யையும் மக்கள்அறிந்திட செய்ய வேண்டும் என் அவாவுற்றேன். இதனை ‘வைகறை வெளிச்சம்’ துணை ஆசிரியர், பேராசிரியர் கே.எம்.இல்யாஸ் ரியாஜிடமும் சொன்னேன். பேராசிரியர் அவர்கள் கவிக்கோவை சந்தித்து சிறக்க பேட்டியோடு வந்தார்கள். இந்தப் பேட்டியை எண்ணற்றோர் பாராட்டினார்கள்.

### இட ஒதுக்கீடு

முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு விஷயத்தில் கவிக்கோ தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து கொண்டிருந்தார்கள். முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் தந்திட ஓர் முன் வரைவு ஒன்றைத் தயார் செய்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதற்காக ஓர் குழுவை அமைத்தார்கள்.

அந்தக் குழுவில் என்னையும், பேராசிரியர் இல்யாஸ் ரியாஜியையும் சேர்த்திருந்தார்கள். சென்னை பிரசிடெண்ட் ஹோட்டலில் நடத்த அந்தக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்டு என்னால் இயன்றதைச் செய்தேன்.

கவிக்கோ அவர்கள்தாம் இந்த வாய்ப்புக்கு ஏற்பாடு செய்திருப்பார்கள் என்பது கணிப்பு

(அல்ஹம்துலில்லாஹ்)

## ஓர் அங்கீகாரம்

என்னுடைய எழுத்துக்களுக்கு ஓர் அங்கீகாரம் தந்திட வேண்டும் என கவிக்கோ எண்ணி இருக்க வேண்டும்.

ஏனெனில் ஒருமுறை இல்யாஸ் ரியாஜி வழியாக என்னுடைய எழுத்துக்கள் அனைத்தையும் கேட்டுப் பெற்றார்கள். என்ன ஆச்சர்யம், மகிழ்ச்சி, எனக்குக் கவிக்கோவை நெறியாளராகக் கொண்ட இஸ்லாமிய இலக்கியக் கழகத்திலிருந்து “இலக்கியச் சுடர்” விருது தரவிருக்கின்றார்கள் என்ற செய்தி என்னை வந்தடைந்தது.



இந்தப் பின்னணியில் நான் கவிக்கோவைச் சந்தித்த போது, இவ்வளவு எழுதிவிட்டு எந்த அங்கீகாரமுமில்லாமல் இருக்கின்றீர்கள் எனச் சொல்லி இலக்கிய உலகில் ஓர் அங்கீகாரத்தை தந்தார்கள்.

டிசம்பர் 13, 2009 ஆம் ஆண்டு சென்னையில்நடந்தஇஸ்லாமிய இலக்கியக் கழக மாநாட்டில் “இலக்கியச் சுடர் விருது” தந்து கண்ணியப்படுத்தினார்.

அதன்பின் நானும் என்னோடு எல்லா நிலைகளிலும் உறுதியாக நிற்கும் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்களும் அடிக்கடி கவிக்கோவைச் சந்திக்கலானோம். இந்நிலையில்தான் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கெதிராக போராடும் தாலிபான்களை தீவிரவாதிகளாக காட்டும் விஸ்வரூபம் என்ற திரைப்படம் சர்ச்சையானது. முஸ்லிம்களின் கூட்டமைப்பு அதனைத் தடை செய்ய வேண்டும் என முயற்சிகளை மேற்கொண்டது.

நானும் சட்ட ரீதியான நடவடிக்கைகளில் என்னால் இயன்றதை செய்தேன்.

இந்தப் பின்னணியில் படைப்பாளர்களின் பொதுத்தளம் ஒன்றில் கருத்துச் சுதந்திரம் என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றைத் தம்பி ஆளுர் ஷா நவாஸ் ஏற்பாடு செய்தார்கள் அதில் என்னையும் இணைத்தார். அங்கே தாலிபான்கள் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்லிடும் வாய்ப்புக் கிடைத்தது.

தலித் தலைவர் திருமா உட்பட அனைவரும் தாலிபான்கள் பற்றிக்கொண்டிருந்த கருத்துக்களை அது தலைகீழாகப் புரட்டிப் போட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

அதேபோல் “விடியல் வெள்ளி” இதழை முன்னாள் சகோதரர்களுக்கு தந்துவிட்டேன். “இலக்கியச் சோலை” வெளியீட்டகத்தையும் தந்துவிட்டேன் என நான் கவிக்கோவிடம் சொன்னேன்.

2006 நவம்பர் திங்களில் கார் விபத்தில் பெரிய அளவில் காயம் பட்டதால் எடுத்த

முடிவு அது எனச் சொன்னபோது அப்படி யானால் உங்கள் எழுத்துக்கள் சமுதாயத்திற் கில்லையா? என ஒரு கேள்வியை ‘சடக்’கென்று கேட்டார்கள்.

“வைகறை வெளிச்சம்” மாதஇதழும், “வேர்கள் வெளியீட்டகமும்” தொடங்கப் படக் காரணமாக அமைந்த காரணிகளும் கவிக்கோவின் இந்தக் கேள்வி முக்கிய பங்கு வகித்தது. (அல்லாஹ் அவர்களுக்கு நிரம்ப நற்கூலிகளை நல்கிடுவானாக)

**இஸ்லாத்தின் பரவலில்...**

என்னைப் போன்றவர்களுக்கு உற்சாகம் தந்ததோடு நிற்கவில்லை கவிக்கோ அவர்கள். இஸ்லாத்தை இடைவிடாமல் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த அண்ணல் டி.எம். உமர் ஃபாரூக் (மர்ஹூம்) அவர்களையும் கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் அவர் களையும் கண்ணியப்படுத்தினார்கள்.

அண்ணன் டி.எம்.உமர் ஃபாரூக் அவர்கள் இலக்கிய உலகிற்கு தந்த மாபெரும் களஞ்சியம் “ஜாதி ஒழிந்தது” இதனை முதல் முதலில் சென்னை “ஃபைஸ் மஹாலில்” நாம் வெளியிட்டோம். இந்த நிகழ்ச்சியில் ஜாதி ஒழிந்தது நூலை ஆய்வு செய்து அறிமுகம் செய்யும் பொறுப்பை அண்ணன் கவிக்கோ அவர்களுக்குத்தான் தர வேண்டும் என “தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்” முடிவு செய்தது. தொலைபேசியில் அது குறித்து நேரில் பேசிட நேரம் கேட்டேன். நேரில் வாருங்கள் பேசலாம்.

ஆனால் நிகழ்ச்சிக்கு இப்போதே ஒத்துக் கொள்கிறேன் என்றார்கள். ஆச்சர்யமாக இருந்தது கவிக்கோவின் தாஃவா ஆர்வம்.

அதேபோல கும்பகோணத்தில் நடைபெற்ற 8–வது இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் அகில உலக மாநாட்டில் அண்ணன் டி.எம்.உமர் ஃபாரூக் அவர்களுக்கு “தீன் சுடர் விருது” தந்து அவர்களது இஸ்லாமிய பிரச்சாரத்திற்கு முடிசூட்டினார்கள். எங்கள் இஸ்லாமிய பிரச்சாரத்திற்கு உத்வேகம் தந்தார்கள்.

முன்னதாக சென்னையில் இடம் பெற்ற இஸ்லாமிய இலக்கியக் கழக மாநாட்டில் கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் அவர் களுக்கு “சமுதாயச் சுடர் விருது” தந்து ஊக்கம் தந்தார்கள். கவிக்கோவின் பங்களிப்பு கள் பலப்பல. பொதுத் தளத்திலிருந்து சமுதா யத்திற்கு வந்ததில் ஏற்பட்ட இழப்புகளை அவர் எள்முனை அளவும் பொருள்படுத்திட வில்லை.

**வாழ்க அவர்கள் தொண்டு...**

## எல்லாவற்றிற்கும் மேலாகச் சீதக்காதி அறக்கட்டளை வழங்கும் உயரிய இலக்கிய விருதான ஷெய்கு சதக்கத்துல்லாஹ் அப்பா இலக்கியப் பரிசு ரூபாய் ஒரு லட்சத்தை 2015ஆம் ஆண்டில் நான் பெறப் பேருதவியாக இருந்தார்

கவிக்கோ கருவூலத்திலிருந்து
எடுக்கப்பட்டது. –ஆர்.


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**அன்பு கோல்டு**

**ANBU GOLD**

SINCE : 1966

**நகைகள் மீட்க / விற்க, அதிக பணம் பெற! உடன் பணம்**

தொடர்புக்கு

**9600848215**
**8667261343**



# வாசிப்பவரை வசீகரிப்பவர்

இல்யாஸ் ரியாஜி
இணை ஆசிரியர்
வைகறை வெளிச்சம்

நான் "கவிக்கோ"வின் வாசகன், சந்தா கட்டிய வாசகன். ஆம், அண்ணன் "கவிக்கோ' அவர்கள் நடத்தி வந்த "கவிக்கோ" இதழின் சந்தாதாரன் என்றுதான் அவருக்கு அறிமுகமானேன்.

பத்திரிகைகள் வழியாக நாட்டு நடப்புக்களை அறியத் தொடங்கிய வயதிலிருந்தே கவிக்கோவின் எழுத்துக்களையும் வாசித்து வந்திருக்கிறேன்.

**கீதை இந்துவைத் தந்தது.**
**பைபிள் கிறிஸ்தவனைத் தந்தது**
**குர்ஆன் முஸ்லிமைத் தந்தது,**
**எந்த மதம் மனிதனைத் தந்தது?**

என்றொரு கவிதை, இது கவிக்கோவுடையது.

இருபது வயதில் இந்தக் கவிதையை நான் படித்த போது எனக்கு கவிக்கோ மீது கோபம்.

ஏன் குர்ஆன் மனிதனைத் தரவில்லையா? இஸ்லாம் உருவாக்குவது ஒரு நல்ல மனிதனைத் தானே!

ஏன் கவிக்கோ இப்படியெல்லாம் எழுதுகிறார் என்று கோபப்பட்டிருக்கிறேன்.

முப்பதாவது வயதில் அதே கவிதையைத் திரும்பவும் படித்தேன். இப்பொழுது அவர் மீது கோபம் வரவில்லை.

அவரின் அபாரமான கவித்துவம் புரிந்தது. கவிக்கோ மீது மரியாதை அதிகரித்தது.

“கீதை, பைபிள், குர்ஆன் இம்மூன்றில் எது மனிதனைத் தந்தது?” என்ற பொருளை உள்ளே வைத்திருக்கிறார். அதுதான் கவிக்கோவின் கவிதை.

சூரத்துல்ஃபாத்திஹாதந்த சிந்தனைகள் என்ற தலைப்பில் அந்த சூராவில் தாம் பெற்ற ஞானத்தை கவிதையாக வடித்திருக்கிறார். அதில் என்று அர்ரஹ்மான் அர்ரஹீம் என்ற வார்த்தைக்கு விளக்கம் தந்திருப்பார்.

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்பாளன் என்பதை இதைவிடச் சிறப்பாகவும் சுருக்கமாகவும் எவராலும் சொல்ல முடியாது.

தமிழின் செவ்வியல் பண்புகளை விளக்கி அண்ணன் கவிக்கோ அவர்கள் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் “யாதும் ஊரே ; யாவரும் கேளீர்” என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிக்கும் விளக்கம் தந்திருப்பார். அதைப் படிப்போர் எவரும் கவிக்கோவின் அறிவுத் திறன் கண்டு வியக்காமல் இருக்க முடியாது.

இவ்வளவு விளக்கங்களை மனதில் வைத்துத்தான் கணியன் பூங்குன்றனார் கூறினாரா அல்லது அவரை விடக் கவிக்கோவின் கவித்திறன் பதினாறடி பாய்கிறதா என்ற வியப்பு வாசிப்போருக்கு ஏற்படும்.

இப்படி வாசிப்போரையெல்லாம் வசப்படுத்தும் வசீகரம் அவரின் எழுதுகோலுக்கு உண்டு.

எங்களுடைய வைகறை வெளிச்சம் மாதஇதழுக்கு பேட்டி கண்டிட அண்ணனைச் சந்தித்தேன், அது அவர் சமூகப் பணியில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்த நேரம்.

‘‘இலக்கியவாதியான கவிக்கோ இயக்கவாதியாக எப்படி மாறினார்?” என அவரிடம் கேட்டதற்கு, “இந்திய முஸ்லிம்களின் நிலை குறித்து சச்சார் கமிட்டி அறிக்கை வந்த பிறகு சமுதாயப் பணியில் முன்பைவிட அதிக ஈடுபாடு ஏற்பட்டதை விவரித்தார்.

மூலையில் உட்கார்ந்து கொண்டு எழுதுபவராக மட்டுமின்றி, சமுதாய நலனுக்காக தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பயணித்தவர் கவிக்கோ.

ஒருமுறை நானும் வைகறை வெளிச்சம்

ஆசிரியர், பத்திரிகையாளர் மு. குலாம் முஹம்மத் அவர்களும் ஒரு பொது நிகழ்ச்சியில் அருகருகே அமர்ந்திருந்தோம். அப்பொழுது எங்களுக்கருகே வந்த ஒருவர் “கவிக்கோ”வின் சமூகப் பணிகளை விமர்சித்து எங்களிடம் பேசிடத் தொடங்கினார்.

உடனே அவரிடம் குலாம் அண்ணன் அவர்கள்

“நீங்களெல்லாம் சமுதாயப் பணிகளுக்கு வந்து பேரும் புகழும் பெற்றீர்கள், கவிக்கோ அப்படியல்ல, பொதுத் தளத்தில் போதுமான அளவுக்கு புகழ் பெற்றவர். அதன் பின்னரே அவர் சமுதாயப் பணிகளுக்கு வந்தார். அவர் கம்யூனல் (மதவாதி) ஆகிவிட்டார் எனப் பொதுத் தளத்திலுள்ள சிலர் பேசுமளவுக்குச் சமுதாயப் பணிகளில் ஈடுபடுகிறார். சமுதாயத் துக்கு உழைக்க வந்து தன் புகழில் கொஞ் சத்தை குர்பானி தந்தவர் கவிக்கோ.

அவரை விமர்சிக்கும் முன் அவர் யார் என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ளுங் கள்” என்று சூடாகக் கூறிவிட்டார். அப்படி ஒரு அற்புதமான மனிதர் கவிக்கோ.

வைகறை வெளிச்சம் மாதஇதழில் என்னுடைய திருக்குர்ஆன் விரிவுரைத் தொடர் தரீக்குல் குர்ஆன் முதல் கட்டுரையான தலை யங்கத்துக்கு அடுத்த பக்கத்தில் இடம் பெறுக்ஷவது வழக்கம்.

ஒருசில மாதங்களாக அது உள் பக்கங்களில் இடம் பெற்று வருகிறது. அப்படி ‘தரீக்குல் குர்ஆன்’ உள் பக்கங்களில் இடம் பெறத் தொடங்கிய முதல் மாதத்தில் அண்ணன் ‘கவிக்கோ’ என்னை தொலைபேசியில் அழைத்தார்.

“என்ன மௌல்வி சாப் (இப்படித்தான் என்னைக் குறிப்பிடுவார்) ஏன் இந்த மாதம் உங்களின் தரீக்குல் குர்ஆன் வரவில்லை? எழுதவில்லையா?” என்று கேட்டார்.

உடனே நான் “எழுதியிருக்கிறேன், அண்ணே! உள் பக்கங்களில் இடம் பெற்றுள் ளது” என்று கூறினேன். பிறகு நலம் விசாரித்தார். சில விஷயங்களைப் பேசினோம்.

ஒரு நல்ல தொடர் நின்னு விடக்கூடாது என்ற ஆதங்கம். உடனே கேட்டுவிட வேண்டும் என்ற அவசரம் இதையெல்லாம் தாண்டி அவ்வளவு வேலைப் பளுவுக்கு மத்தியிலும் நமது எழுத்துக்களைக் “கவிக்கோ” தொடர்ந்து படிக்கிறார் என்பது எனக்கு பேரானந்தம் தந்தது.

எந்த அரசுப் பதவியும் வகிக்கக் கூடாது என்ற தனது உறுதியை சமுதாய நலனுக்காகத் தளர்த்தினார் கவிக்கோ.

தமிழக முதல்வர் கலைஞரின் விருப்பத்தின் பேரில் வக்ஃபு வாரியத்தின் தலைவரானார். கலைஞருடனான தனது நட்பை, நெருக்கத்தைச் சமுதாய நலனுக்குப் பயன்படுத்தினார்.

“கவிக்கோ”வின் முயற்சியால் உருவானது உலமா நல வாரியம். அதில் நான் அலுவல் சாரா உறுப்பினராக இடம் பெறக் காரணம் கவிக்கோதான்.

நான் அவரைச் சந்திக்கும் பொழுதெல்லாம் என்னிடம் “திருக்குர்ஆனுக்கு ஓர் உரைக் களஞ்சியம் வேண்டும். திருக்குறள் உரைக் களஞ்சியம் இருக்கிறது. அதுபோல இந்த உரைக் களஞ்சியத்தை திறந்தால் முக்கியமான தஃப்சீர்களிலுள்ள உரைகளை ஒரு களஞ்சிய மாகத் தொகுக்க வேண்டும். நீங்கள் செய்ய முடியுமா? என்பார்.

“அது ஒரு பெரிய பணியல்லவா?” என்று மலைத்துப் போய் கூறுவேன் “உங்களுக் கென்னவயசாஆகிவிட்டது. எழுதவேண்டியது தானே” என்பார் உரிமையுடன்.

“என்னால் தனியாக இயலாது” என்றேன். மறுபடியும் “மௌலவிகள் குழுவொன்றை மனதில் வைத்திருக்கிறேன். அமர்ந்து பேசுவோம். திட்டமிடுவோம், பணிகளைப் பகிர்ந்துச் செய்யலாம்” என்றார்.

நானும் குலாம் அண்ணனும் சந்திக்கப் போனால் தோளில் கைபோட்டு உரிமையோடு பேசுவார். கண்டிப்பார், கேலி பேசுவார், சில நாட்களில நள்ளிரவு வரை பேசுவோம்.

– கவிக்கோ கருவூலத்திலிருந்து

# செங்கம் ஜப்பார்

**"வைகறை வெளிச்சம்" ஜுன் இதழுக்கு இறுதி வடிவம் கொடுக்கச் சென்றிருந்தபோதுதான் அந்த அதிர்ச்சிச் செய்தி எம்மை வந்து தாக்கிற்று.**

ஆமாம், எங்களோடு வந்திருந்த டாக்டர் ஹபீஸ் அவர்கள் அந்த செய்தியைச் சொன்னார். டெல்லி சென்று டி.டி.வி. தினகரனை சிறையில் சந்தித்துவிட்டு திரும்பி வரும் வழியில் ரெயிலில் வைத்து வாரங்கல் ரெயில் நிலையம் வரும்போது செங்கம் ஜப்பார் மரணித்துவிட்டார்கள்" ( என்றச் செய்தியை எமக்குச் சொன்னார்கள்)

ஓர் சிறந்த சமுதாயத் தொண்டர், முஸ்லிம் லீக்–ஐ காகிதேமில்லத் முஹம்மத் இஸ்மாயில் (ரஹ்) அவர்களுக்குப் பின் வழி நடத்தியவர்களில் முக்கியமானவர்.

நமது பணிகளை – இந்திய மாணவர் அமைப்ப, இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம், மனித நீதி பாசறை, தாருல் இஸ்லாம், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் எனப் பல்வேறு கட்டங்களிலும் கூர்ந்து கவனித்துப் பாராட்டி வந்தவர்.

**மனித நீதி பாசறையின் நாட்களில்**

2004–ல் நெல்லிக்குப்பத்தில் நடந்த ஒரு சாதாரண சம்பவத்தை, ஒரு பெரும் தீவிரவாத செயலாய்க் காட்டிட அப்போதைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி முடிவு செய்தது. அப்போது ஜெயலலிதா அம்மையார்தான் ஆட்சியிலிருந்தார். ஊடகங்கள் பல அண்மைச் செய்தி, அதிர்ச்சி செய்தி என்றெல்லாம் அதனைப் பெரிதுபடுத்தின. ''விடியல் வெள்ளி'' என்ற எனது பத்திரிகையை ஓர் தீவிரவாதி அமைப்பு எனக் காட்டின.

'விடியல் வெள்ளி' பத்திரிகையின் ஆசிரியராகவும், மனித நீதி பாசறை என்ற அமைப்பின் தலைவராகவுமிருந்த நான் பத்திரிகையாளர்கள் சந்திப்பு ஒன்றை நடத்தினேன்.

அந்தப் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் நான் கூறினேன் உளவுத்துறையினர் முதலமைச்சர் அவர்களுக்குத் தவறான தகவல்களைத் தந்து எங்களை ஒரு தீவிரவாத அமைப்பாகச் சித்தரித்து வருகின்றனர். அதனை அகற்றிடும் வகையில் நான் பத்திரிகையாளர்கள் சந்திப்பிற்குப்பின் முதலமைச்சரை சந்திப்பதாக இருக்கிறேன் என்றேன்.

இந்த சொற்களை பத்திரிகைகள் அனைத்தும், ஆங்கிலப் பத்திரிகைகள் உள்பட வெளியிட்டன இதனைப் பற்றிப் பிடித்துக் கொண்ட செங்கம் ஜப்பார் அவர்கள் ''முதலமைச்சரை சந்திக்கும் ஏற்பாடுகளை, நான் கவனிக்கட்டுமா?'' எனக் கேட்டார்கள்.

நான் அவர் காட்டிய அன்பால் ''சரி'' எனச் சம்மதித்தேன். ஆனால் பின்னர் முதலமைச்சரை சந்திக்க வேண்டும் என்ற முடிவை மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று.

காரணம், முதலமைச்சரைச் சந்திப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட கடிதத்தில் இடம் பெற்றவர்களே அந்த வரிகளை நான் ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறிவிட்டேன்.

ஆனால் செங்கம் ஜப்பார் அவர்கள் தன் முயற்சியை கைவிட வில்லை. பிற்ற நாட்களில் என்னை, முன்னாள் இந்திய பிரதமர் வி.பி.சிங் அவர்களைச் சந்திக்க வைத்தார்கள். அந்தச் சந்திப்பை நான் 'விடியல் வெள்ளி' இதழிலும் வெளியிட்டேன்.

அண்மையில் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், ''வைகறை வெளிச்சம்'' வாசகர் வட்டம், இவற்றின் சார்பாகவும், கோவையில் நடந்த சசிகுமார் கொலை வழக்கில் முஸ்லிம்களைச் சிக்க வைத்திட காவல் துறையினர் முயற்சி செய்தனர். இதில் அமிழ்ந்திருக்கும் சூழ்ச்சிகளை தலைவர்களைச் சந்தித்து தெரிவிக்க வேண்டும் என்றொரு முயற்சியை மேற்கொண்டோம். இந்த முயற்சியில் பெரிதும் உதவினார்கள் செங்கம் ஜப்பார் அவர்கள்.

அதனால் செங்கம் சென்று அவருடைய அடகத்திலும், கலந்துகொண்டு துஆ செய்து விட்டு வந்தோம்.

**– எம்.ஜி.எம்.**



25 ஆண்டுகள் மிகவும் நெருக்கமான உறவு கொண்டோம். தமிழ்க் கவிஞர்கள் கவிப்பேரரசு வைரமுத்து, சிற்பி பாலசுப்பிரமணியம், ஈரோடு தமிழன்பன், கவிஞர் மு. மேத்தா என்று அனைத்து ஆளுமைகளுடனும் ஒன்றாகப் பழகும் வாய்ப்பு எனக்கு இறைவன் கொடுத்த வரம். இவர்கள் அனைவரும் என் குடும்ப நிகழ்வுகளில் ஒன்றாகக் கலந்து பார்ப்பது காணக் கிடைக்காத அருங்காட்சி.

இவற்றைக் கடந்து கவிக்கோ அவர்களும் நானும் ஒன்றிணைந்து செயல்படக் காரணம் தமிழ்தான்.

இஸ்லாமியர்களின் வேதநூல் குர்ஆனும், இறைத்தூதர் (ஸல்) அவர்களுடைய ஹதீஸ் என்னும் நபிமொழி அறிவிப்புகள் அரபி மொழியில் தான் உள்ளது. இதை எமது ரஹ்மத் அறக்கட்டளை மூலமாக 1993 ஆம் ஆண்டு

# அப்துல் ரகுமான் மறைந்துவிட்டார்

# கவிக்கோ வாழ்கின்றார்!

– கவிக்கோ அரங்கம் முஸ்தபா ஹாஜி

## எப்போது "கவிக்கோ' ஆனார்?

**குடியேற்றம் "தமிழ் இலக்கிய வளர்ச்சி மன்றம்' சார்பில் 1976இல் கவிஞர் அப்துல் ரகுமானின் "பால் வீதி' கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. அப்போது புலவர் வே.பதுமனார், புலவர் பொன்முடியார் ஆகிய இருவரின் முன் முயற்சியால் கவிஞர் அப்துல் ரகுமானுக்கு கவிக்கோ பட்டம் அளிக்கப்பட்டது.**

முதல் தொடர்ந்து தமிழில் மொழி யாக்கம் செய்து வெளியிட்டு வருகிறோம். ஏறத்தாழ இன்னும் மூன்று ஆண்டு களில் இம்மொழி பெயர்ப்பு பணி நிறைவுபெறும்.

இப்படிப்பட்ட புனிதமிக்க மொழி பெயர்ப்புப் பணியை தமிழ்கூறும் நல்லுல கிற்கு கொண்டு வரவேண்டும் என்பது கவிக்கோ அவர்களின் எண்ணத்தில் நீண்ட காலமாக இருந்து உள்ளது. இதனை நான் செய்ய ஆரம்பித்ததும் அவர் என்னைத் தழுவிக் கொண்டார்.

இப்பணியில் சிறந்த தமிழ்நடை கொண்டு வர அரும்பாடுபட்டார். மார்க்க அறிஞர்களுக்கு எவ்வாறு எழுத வேண்டும் என்று பாடம் நடத்தினார். "நல்ல தமிழ் கற்போம்' என்ற வழிகாட்டி கையேடு ஒன்றைத் தயார் செய்து கொடுத்தார். மொழிபெயர்ப்பு செய்து வெளியிடப் படும் ஒவ்வொரு புத்தகத்தையும் முழுமை யாகப் படித்துப் பார்த்து அணிந்துரை வழங்கி உள்ளார். இதுவரை 24 ஆண்டு களில் ரஹ்மத் பதிப்பகத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள 25 மொழி பெயர்ப் புக் கிரந்தங்களிலும் கவிக்கோவின் அணிந் துரை இடம்பெற்றுள்ளது.

இந்த அணிந்துரைகள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் முஸ்லிம்களுக்கு ஒரு வரப்பிரசாதம். மேலும் இது சகோதர மதத்தினருக்கும் இஸ்லாத்தை தூய தமிழில் புரிந்து கொள்ள வசதியாக இருக்கும். இப்பணியில் அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

இதனால் அடிக்கடி சந்திக்கவும் பழகவும் வாய்ப்புகள் அதிகமானது. அவரது கவி படைப்பைப் பார்த்து எல்லாரையும் போல் நானும் பிரமித்துப் போனேன்.

மகாகவி பாரதி வாழும்போது புறக்கணிக்கப்பட்டு இறுதி ஊர்வலத்தில் 30 பேர் கலந்துகொண்ட சம்பவம் என்றும் என் மனதில் ஆழ்ந்த காயத்தை ஏற்படுத்தியிருந்தது.

இதன் பாதிப்புதான் வாழும் காலத்திலேயே கவிக்கோவை கவுரவித்து அவருக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று சென்னையின் மையப் பகுதியான மைலாப்பூரில் கவிக்கோ அவர்களின் பெயரில் கவிக்கோ மன்றம் நூல் வெளியீட்டு அரங்கத்தை அமைத்து அதை அவர் கரங்களாலேயே திறந்து வைக்கச் செய்தேன்.

முத்துப்பேட்டையில் எமது ரஹ்மத் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கவிக்கோ நூலகம் ஒன்றை உருவாக்கி யிருந்தேன். அதை அவர் தம் கரங்களால் திறந்துவைத்தார்.

கவிக்கோவுக்கும் எனக்குமான தொடர்பு மற்றும் சம்பவங்களைத் தொகுத்து எழுதினால் ஒரு நூலே வெளியிடலாம்.

**இறுதியாக**
**அப்துல் ரகுமான் மறைந்துவிட்டார்**
**கவிக்கோ என்றும் வாழ்கின்றார்.**

**- எம்.ஏ.முஸ்தபா**

- நன்றி தினமணிக் கதிர்

எது முதலில்?

# தர்பியா எனும் நன்னடத்தைப் பயிற்சி வழங்குவதற்கே முதலிடம்



இமாம் யூசுப் அல்கர்லாவி

**எதையும் சமநிலையோடு பார்க்கும் குழுவும் முஸ்லிம்களில் இருக்கத்தான் செய்கிறது.**

இக்குழு எதையும் சீர்தூக்கிப் பார்த்தே செயல்பட்டு வருகின்றது இந்த சன் மார்க்கத்தையும் இவ்வுலக வாழ்வையும் பற்றிய புரிதலிலும் கூட இவர்களிடம் ஒரு சமநிலைத் தன்மை இருக்கிறது.

அல்லாஹ்வின் மார்க்கம் அதிகாரத்தைப் பெற வேண்டும் என்பதற்காக இவர்கள் சமநிலைத் தன்மையுடன் உழைத்து வருகின்றனர்.

பின்வரும் வழிமுறைகளில் இவர்கள் உழைக்கிறார்கள் என்பதால் இவர்கள் மற்ற குழுக்களை விட தனித்தன்மை மிக்கவர்களாக இருக்கின்றனர். இவர்களின் வழிமுறைகள் இதோ...

அ) இவர்கள் மார்க்கத்தைப் புரிந்திருக்கும் விதம் அலாதியானது. பரந்த பார்வையுடனும் சீர்தூக்கிப் பார்த்தும் ஆழமாகவும் மார்க்கத்தைப் புரிந்துகொள்கின்றனர்.

ஆ) இவ்வுலக வாழ்வில் முஸ்லிம்களின் சூழ்நிலை எதிரிகளின் சூழ்நிலை ஆகியவற்றை அலட்சியமின்றியும் மிகை மதிப்பீடு இன்றியும் புரிகின்றார்கள்.

இ) மனித சமுதாயத்திடம் காலங்காலமாக அல்லாஹ் எப்படி நடந்து வருகிறான் என்பதையும் மாற்ற முடியாத அவனுடையசட்டங்களையும் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

ஈ) குர்ஆன் சுன்னாவின் வார்த்தைகள் தரும் நேரடியான மேலோட்டமான அர்த்தங்களில் உறைந்து கிடக்காமல் "ஷரீஅத்"தின் நோக்கங்களைப் புரிந்துகொள்கின்றனர்.

உ) எதையும் சீர்தூக்கிப் பார்த்து அதன்பிறகு எதை முதலில் செய்வது எதைப் பிறகு செய்வது என்று முடிவெடுக்கின்றார்கள்.

ஊ) பல்வேறு இஸ்லாமியக் குழுக்களுடனும் ஏற்படும் கருத்து வேறுபாடுகளின் போது அதற்குரிய ஒழுங்குடன் அதை வெளிப்படுத்துகின்றனர். அதாவது கருத்தொருமித்த விஷயங்களில் பரஸ்பர ஒத்துழைப்பு வழங்குகின்றனர். கருத்து வேறுபாட்டுக்குரிய விஷயங்களில் நீக்குப்போக்குடன் நடந்து கொள்கின்றனர்.

எ) பழைமை, புதுமை இரண்டையும் ஒன்றிணைத்தே சிந்திக்கின்றார்கள்.

ஏ) ஷரீஅத்தில் என்றென்றும் மாறாத சட்டங்களையும் காலத்துக்கு ஏற்ப மாறிக் கொள்ள வாய்ப்பிருப்பவற்றையும் எடைபோட்டுப் பார்க்கின்றார்கள்.

ஐ) ஆராய்ச்சிகளில் ஏற்படும் மாற்றங்களாலும் தனி மனிதனிடமும் அவனின் பண்புகளிலும்ஏற்படும்மாற்றங்களாலும் தான் ஒரு நாகரீகத்தில் மாற்றம் ஏற்பட முடியும் என்று நம்பிச் செயல்படுகின்றார்கள்.

ஒ) நிகழ்காலத்தில் நிலவுகின்ற உலகாதாய தத்துவங்களிலிருந்து மனித சமுதாயத்தை மீட்பதற்கும் சமுதா

யத்தைத் தட்டி எழுப்புவதற்கும் முழுமை யான இஸ்லாமிய நாகரீகத்தையும் ஷரீஅத்தை யுமே இவர்கள் முன்னே நிறுத்துகின்றார்கள்.

ஓ) ஏதேனுமொரு சட்டப் பிரச்சனையில் (ஃபத்வா) கருத்துரைக்கும்போது கடினமான அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்காமல் எளிமைப்படுத்தும் வழிமுறைகளுடன் கருத்துரைக்கின்றனர். மேலும் இஸ்லாத்தை இதர சமுதாயத்தினரிடம் எடுத்துரைக்கும் போது நற்செய்தி கூறும் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

ஔ) மனிதர்கள் அனைவரும் சுதந்திரமான வர்கள். யாருக்குமே அடிமையில்லை.. மனிதன் என்ற அளவில் ஒவ்வொருவரும் கண்ணியமானவர்களே என்பதெல்லாம் இஸ் லாத்தின் பிரகடனங்கள். மேலும் சமூகநீதி, மனித உரிமைகள், ஆகியவையும் எந்த முடிவை யும் யாரும் தண்ணிச்சையாக எடுத்துவிட முடியாது. கலந்தாலோசனையின் கீழ்தான் முடிவுகள் எடுக்க வேண்டும் என்பதெல்லாம் இஸ்லாத்தின் மாண்புறு கொள்கைகள்.

இஸ்லாத்தின் இந்த அரசியல், சமூகக் கோட்பாடுகளை விளக்கமாக எடுத்துரைக் கின்றனர்.

ஃ) பெயரளவுக்கு முஸ்லிம்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களிடமும் இதர சமுதாயத் திலுள்ள மாற்றுக் கருத்துடையவர்களிடமும் கருத்து பரிமாற்றம் செய்யும்போது மிக அழ கிய வழிமுறையைக் கடைப்பிடிக்கின்றனர்.

க) இஸ்லாமிய நாடுகளையும் முஸ்லிம்களின் கண்ணியங்களையும் காப்பதற்காக ஜிஹாத் எனும் அறப்போரை ஒரு வழியாகக் கடைப் பிடிக்கின்றனர்.

இப்படித்தான் முஸ்லிம்கள் இருக்க வேண் டும். இப்படி ஒரு குழு இருக்க வேண்டும் என்று நாம் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறோம்.

அல்லாஹ் தன் திருவேதத்தில் கூறிய படியும் பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்ந் தும் வழிகாட்டியும் சென்றதன் படியும் அன் னாரின் தோழர்கள் புரிந்து செயல்பட்டதன் படியும் இந்த சமுதாயத்தன் சிறந்த தலைமுறை யைச் சார்ந்தவர்கள் சொன்னதன்படியும் பார்த் தால் இஸ்லாம் என்ற சொல்லின் உண்மையான பொருள் இதுதான்.

இந்தக் குழுதான் நமது நாளைய நம்பிக் கைகளை நிறைவேற்றப்போகிறது. லட்சி யத்தை அடையப் போகிறது.

இந்தக் குழு தனது பிரச்சாரத்தை முனைப் புடனும் அடர்த்தியாகவும் செய்திட வேண் டும். தனக்கு உதவி செய்பவர்களுக்கு 'தர்பியா' எனும் பண்படுத்தும் பயிற்சி வழங்கிட வேண்டும்.

மாற்றுக் கருத்துடையவர்களுக்கு தக்க பதில் தந்திட வேண்டும். எதிர்வாதம் செய் வோரை சான்றுகள் மூலம் முறியடிக்க வேண்டும்.

எடுத்துக் கொண்ட லட்சியத்திலிருந்து தடம் புரளச் செய்யவும் திசை திருப்பிடவும் நடக்கும் சதிகளைக் கண்டறிந்து அவற்றிலி ருந்து தப்பித்து முன்னேற வேண்டும்.

ஒன்று தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. இஸ்லாமியவட்டத்துக்குஉள்ளேயும்வெளியே யும் உள்ள எதிர்ப்புச் சக்திகள் இந்த குழுவைத் பெரும் அபாயமாகப் பார்க்கின்றன.

வேறு எந்தக் குழுக்களையும் விட இந்தக் குழுவைத்தான் வெறுக்கின்றன. எதிர்க்கின்றன. "சொற்களில் சிக்கிக் கொண்டவர்கள்" என்று குறிப்பிட்டுக்காட்டிய குழுவைத்தான் பெரும் ஆபத்தானகுழு என்று முன்னர் கூறி வந்தனர்.

இப்போதோ புதிய கோஷம் முளைத்துள் ளது. "சமநிலை இஸ்லாம்தான் மற்றதைவிட பயங்கரமானது, எச்சரிக்கை... எச்சரிக்கை" என்கின்றார்கள்.

ஏனென்றால் மற்ற சிந்தனை குழுக்க ளெல்லாம் நீண்ட காலம் நிலைத்திருப்ப தில்லை. அவற்றின் ஆயுள் கொஞ்ச காலமே என்றும் கூறுகின்றனர்.

( அவர்களின் கூற்றுப்படி ) இந்த சமநிலை இஸ்லாம் என்றென்றும் இருக்கும். அழியாது. இது ஒரு அபாயம், சமநிலை, நடுநிலை என்று ஆரம்பித்து பின்னர்தீவிரவாதமாக மாறிவிடும்.

ஏனென்றால் தீவிரவாதம்தான் இஸ்லாத்தின் அந்தரங்கம் என்றும் கூறுகின்றனர்.

இஸ்லாத்தை ஒரு அபாயம் என்று கூறிவரும் இவர்கள் "பச்சை அபாயம்" என்று இதற்கு பெயர் வைத்துள்ளார்கள்.

முழு ஐரோப்பாவிலிருந்தும் "சிவப்பு அபாயம்" எனப்படும் கம்யூனிஸம் அகன்ற பின்னர் இஸ்லாத்தை மனித குலத்தின் புதிய எதிரியாகக் காட்டப்பார்க்கின்றனர்.

இது ஒரு கற்பனை. இதில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதை நூலாசிரியர்கள் பலரும் தெளிவு படுத்தியுள்ளனர்.

அந்தப்புரட்டர்களின்பொய்வாதங்களை எதிர்கொண்டு அவர்களின் முகத்திரையை கிழித்தெறிவதும் அந்தக் கூட்டத்திலுள்ள நடுநிலையாளர்களிடம் உண்மையை எடுத்துரைப்பதும் சமநிலை வாதிகளின் கடமை.

அந்தப் புரட்டர்கள் போட்ட குட்டிகளும் அவர்கள் உருவாக்கிய மாணவர்களும் இஸ்லாமிய அரசுக்கு உள்ளேயே முஸ்லிம் பெயர் தாங்கி வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இஸ்லாத்தை முழு பலத்துடன் எதிர்க்கின்றனர். சன்மார்க்கத்தின் எதிரிகளுடனும் சமுதாயத்தின் எதிரிகளுடன் அணி சேர்ந்து நிற்கின்றனர்.

இவர்களையும் கட்டாயமாக எதிர் கொள்ளவேண்டும். இப்படிப்பட்டவர்களைப் பற்றி அன்றைக்கே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இப்படி எச்சரித்துவிட்டார்கள்.

"நரகத்தின் வாசலருகே நின்று அதை நோக்கி அழைப்பவர்கள் அதைக் கேட்டு அங்கே சென்றவர்களை நரகத்தில் எறிந்து விடுவார்கள்" இப்படி நபி (ஸல்) கூறியதும், "அவர்களைப் பற்றி சற்று விபரமாகச் சொல்லுங்கள்" என்று நபித் தோழர்கள் கேட்டுக் கொண்டனர்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் "அவர்கள் நம்முடைய மொழிகளையே பேசும் நம் இனத்தவர்கள்தாம்" என்று பதிலளித்தார்கள். (அறிவிப்பாளர்கள் : ஹுதைஃபா (ரழி) நூல் : புகாரி, முஸ்லிம்)

எனவேதான் சொல்கிறேன் இவர்களை கட்டாயம் எதிர்த்தாக வேண்டும் என்று.

இவர்கள் சமுதாயத்தின் சிந்தனையிலே குழப்பத்தை ஏற்படுத்துகின்றவர்கள். சமுதாயத்தை அதன் ஆழமான வேர்களிலிருந்து திசை திருப்பி வேறு திசைக்குக் கூட்டிச் செல்பவர்கள்.

படிக்கும் நூல்களிலும் கேட்கும் செய்திகளிலும் பார்க்கும் காட்சிகளிலும் இனிப்பில் விஷம் தடவுவதுபோல் தடவி மார்க்கத்துக்கு எதிரான கருத்துக்களைப் பரப்புபவர்கள் உடலைக் கொல்லும் கிருமிபோல சமுதாயத்தின் அறிவை அழிக்கும் கிருமிகள்.

நம் சமுதாயத்திலுள்ள மேற்கத்திய வாதிகளை இவர்கள் நம்மை விட்டு என்றோ போய்விட்ட காலனித்துவச் சிந்தனைகளைச் சுமந்து திரிகின்றனர். கிறிஸ்தவ மத மாற்றக் கும்பல்களின் மற்றும் ஓரியண்டலிஸ்டுகளின் அழுக்குச் சிந்தனைகளையும் தத்தெடுத்துக் கொண்டவர்கள்.

இந்தக் காலனித்துவ வாதிகள், கிறிஸ்தவ மதமாற்றக் கும்பல்கள், ஓரியண்டலிஸ்டுகளெல்லாம் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா?

ஒருநாள் கூட நம்முடைய இஸ்லாமிய நாகரீகத்தைப் பற்றி உளப்பூர்வமாக நல்ல அபிப்ராயங்களைக் கூறியவர்களல்ல..

அப்படியே நல்ல அபிப்ராயங்களைக் கூறினாலும் கூட அப்படிக் கூறுபவர்களிடம் இஸ்லாமிய நாகரீகம் அதன் அடிப்படையில் அதன் பாரம்பரியம் குறித்து சரியான புரிதல்கள் இருப்பதில்லை. குறிப்பாக அந்த நாகரீகத்தின் செழுமைமிக்க (அரபு) மொழி, அதன் சுவைபற்றி எந்தப் புரிதலும் இருப்பதில்லை.

இவர்களின் சிந்தனைகளைத்தான் நம்மில் சிலர் தத்தெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆக, முஸ்லிம் நாடுகளிலேயே மதச்சார்பற்ற சிந்தனை கொண்டவர்கள் இருக்கின்றனர். பழைய மார்க்சிஸ்ட்டுகள் உள்ளனர். இவர்கள் லிப்ரலிஸ்டுகள் என்று வேடமிட்டு

வாழ்கின்றனர். இஸ்லாத்துக்கு எதிராக தம் பேனாக்களையும் ஆயுதங்களையும் பயன் படுத்துபவர்கள் உள்ளனர்.

இவர்களுக்கு எதிராக கண்டிப்பாக கருத்துப் போர் நடத்தியாக வேண்டும்.

இஸ்லாத்தின் மீது வெறுப்பை வளர்ப் பதற்காக இவர்கள் இஸ்லாமிய அழைப் பாளர்கள் மீது அவதூறுகளைப் பரப்புகின் றனர். இஸ்லாம் புத்தெழுச்சி பெறுவது இவர் களுக்க கடுப்பு ஏற்றுகிறது. முடக்குவதற்காக இல்லாத பொல்லாத அபாண்டங்களை அள்ளி போடுகின்றனர்.

அடிப்படைவாதம் "அரசியல் இஸ்லாம்" என்றெல்லாம் பிதற்றித் திரிகின்றனர்.

"இவர்கள் அரசுக்கு எதிராகச் செயல்படும் பயங்கரவாதிகள்" என்று துர்ப்பிரச்சாரம் செய்து அரசின் அடக்கு முறைக்கு இஸ்லாமிய வாதிகளை இலக்காக்குகின்றனர்.

இதனால் நெடுங்காலம் ஒரு பெயரில் செயல்பட்டு வந்த இஸ்லாமிய இயக்கங்கள் அரசால் தடை செய்யப்பட்டு பிறகு புதிய பெயரில், புதிய வடிவில் இயங்கும் நிலைக்குத் தள்ளி விடுகின்றனர்.

எனவே, இவர்களுக்கு எதிரான கருத்துப் போரிலிருந்து ஒருபோதும் திசைமாறக் கூடாது. இந்தப் போரை மழுங்கச் செய்ய இஸ்லாத்தின் எதிரிகள் தந்திரங்கள் செய்வார்கள்.

முஸ்லிம்களுக்கு மத்தியிலுள்ள கருத்து வேறுபாடுகளைப் பயன்படுத்தி முஸ்லிம் களைப் பிளக்க முயல்வார்கள்.

மஸாயில் மாறுபாடு, கொள்கை வேறுபாடு, பிரிவுச் சட்டங்களில் வித்தியாசம் என எதன் காரணமாகவும் நாம் அப்போரிலி ருந்து திசை மாறக் கூடாது.

அப்படித் திசை மாறினால் அது பேராபத்து, நம்மை அழிக்கக் காத்துக்கிடக்கும் உண்மையான எதிரியை விட்டுவிட்டு நம்மை நாமே அழித்துக் கொள்ள போகிறோம் என்று பொருள்.

அறியாமையின் காரணமாக இஸ்லா மியப் பிரச்சாரங்களில் எவரேனும் தடம் புரண்டால் அது பெரும் சோதனை. ஏனெனில் இதுபோன்ற விஷயங்களில் அறியாமை கொடிய விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

அதே நேரத்தில் அறிந்துகொண்டே இந்தத் தவறை ஒரு அழைப்பாளன் செய்வான் என்றால் அது அதைவிட படு பயங்கரமானது. அதன் விளைவுகள் பாரதூரமானது. இது இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் இஸ்லாம் ஏற்படுத்த விரும்பும் விழிப்புணர்வுக்கும் செய்யும் துரோகம்.

ஒரு கவிஞர் மிக அருமையாகச் சொன்னார்

"உன்னைச் சுற்றியிருக்கம் ஆபத்து
உனக்குத் தெரியவில்லை என்றால்
அது ஒரு சோதனைதான்.
அது உனக்குத் தெரிந்திருந்தால்
மிகப் பெரும் சோதனை"

எனவே "சம நிலைக்குழு" அல்லத "நடு நிலைக் குழு" என்று நான் குறிப்பிடுகின்ற இந்தக் குழுவுக்கு ஒரு பெரும் கடமை இருக் கிறது என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

இஸ்லாத்திற்காக உழைப்பவர்களை ஓரணியாகத் திரட்டிட உளப்பூர்வமாக அரும்பாடுபட வேண்டும். இதற்காக முனைப் புடனும் உண்மையாகவும் உழைக்க வேண்டும்.

அல்லாஹ்வை அவனின் திருத்தூதர்களை, வேதங்களை, வானவர்களை, மறுமை நாளை, விதியை நம்ப வேண்டும். இது நம்பிக்கை இதன்கீழ் அனைவரையும் திரட்ட வேண்டும்.

கடமையான செயல்களில் அல்லாஹ்வை யும் முஹம்மது நபி (ஸல்) நம்பி ஏற்று க் கொள்வதற்காக (ஷஹாதத்) மொழிதல், தொழுகையை நிலை நாட்டுதல், ஸகாத் எனும் கட்டாய தர்மம் வழங்குதல், ரமழான் மாதம் நோன்பு நோற்றல், ஹஜ் செய்தல் ஆகிய ஐந்தின் கீழ் அனைவரையும் ஒருங்கிணைக்க வேண்டும்.

மேலும் அடிப்படையான நற் பண்புகள்

கண்டிப்பாக இருக்க வேண்டிய ஒழுக்கங்கள் ஆகியவற்றின் கீழ் அனைவரையும் ஒன்றி ணைக்க வேண்டும்.

அழிவிலாழ்த்தும் பெரும் பாவங்கள், தடை செய்யப்பட்ட ஹராம்கள், அவசியம் தவிர்த்தாக வேண்டிய அசிங்கங்கள் ஆகியவை செய்யக் கூடாதவை என்பதன் கீழ் அனை வரையும் கொண்டு வர வேண்டும்.

அதாவது இப்படிப்பட்ட பொதுப் படையானவற்றில் முஸ்லிம்கள் அனைவரும் ஒத்த கருத்தில் இருந்தால் அதுவே நமக்குப் போதுமானது.

பிரிவுச் சட்டங்களிலும் உள் மார்க்க விவகாரங்களிலும் நாம் மாறுபட்ட கருத்து டையவர்களாக இருப்பது ஒன்றும் தவறல்ல.

சிந்தனைப் பிரிவுகளில், ஆராய்ச்சிகளில் அதில் வரும் முடிவுகளில் மாறுபட்ட கருத் துக்கள் நம்மிடையே ஏற்படுவது தவிர்க்க இயலாதது. ஏனெனில் நம்முடைய சன் மார்க் கத்தின் இயல்பும் மனித சுபாவமும் உலகத்தின் அமைப்பும் வாழ்வின் அமைப்பும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

இதைப்பற்றி நான் விரிவாக ஒரு நூல் எழுதியுள்ளேன். “அனுமதிக்கப்பட்ட கருத்து வேறுபாட்டுக்கும் இகழ்ச்சிக்குரிய பிளவுக்கும் இடையே இஸ்லாம் தரும் விழிப்புணர்வு” என்பது அந்நூலின் பெயர்.

(“நாம் பிரிந்து விட வேண்டாம்” பெயரில் நமது வேர்கள் வெளியீட்டகம் அதை வெளி யிட்டுள்ளது )

இஸ்லாத்துக்காக உழைக்கும் (ஜமாஅத்) குழுக்கள் பல இருப்பது தவறல்ல. அது தவிர்க்க இயலாததுதான்.

அவைப் பணிகளைப் பிரித்துக்கொண்டு தனக்கென தனித்தன்மைகளுடன் இயங் கலாம். இந்தக் குழுக்களிடையே மோதல் களோ முரண்பாடுகளோ வரக்கூடாது.

ஏனெனில் பல குழுக்கள் பல வழிகளில் உழைப்பதால் ஏராளமாக சாதிக்கலாம், வளர்ச்சி அடையலாம். அவைகளுக்கிடையே மோதல் வந்துவிட்டால் ஒருவரையொருவர் அழித்துக்கொண்டு மாய்ந்து போக வேண்டி யதுதான்.

எனவே இந்த சன் மார்க்கத்துக்குச் சேவை செய்வதற்காகவும் பிரச்சாரப் பணிக்கு உதவிடவும் ஷரீஅத் நிலை பெறவும் சமுதாயம் ஒன்றிணையவும் உழைத்து வருகின்ற அனை வரும் ஒன்றாக திரண்டு ஓரணியாகிட உழைப்பது அவசியத்திலும் அவசியம்.

இயக்கங்களுக்கு மத்தியிலிருக்கும் இடை வெளி குறைக்கப்பட வேண்டும். பிணைப்பு விதைக்கப்பட வேண்டும்.

கருத்து வேறுபாடு உள்ள விஷயங்களில் பரஸ்பரம் நீக்குப் போக்குடன் நடந்து கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவரை மதிக்க வேண்டும். அவர்கள் மீது அவதூறு கூறுவதோ சுய தம்பட்டம் அடிப்பதோ தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதோ கூடாது கூடாது.

நபி (ஸல்) கூறினார்கள்...

ஒரு முஸ்லிமான சகோதரனை இழிவாக எண்ணுவதே ஒருவருக்கு தீமை யாக இருக்கப் போதுமானது. (அறிவிப்பாளர் : அபுஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம்)

இந்த எச்சரிக்கையை இயக்கவாதிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய வட்டத்துக்கு உள்ள நாம் முதலில் செய்ய வேண்டியதும் முன்னுரிமை தந்து செய்ய வேண்டியதும் இந்தப் பணிதான் என்பதே என் கருத்து.

பல்வேறு குழுக்களாகவும் இயக்கங் களாகவும் பிரிந்து வாழ்வதால் ஏற்படும் ஆபத் துக்களை இயக்கவாதிகள் புரிந்துகொண்டு எச்சரிக்கையாக இல்லாவிட்டால் அனைவரும் மொத்தமாக அழிந்து போக வேண்டியதுதான்.

எதிரிகள் தம் கூரிய நகங்களையும் கொடிய பற்களாலும் நம்மை வேட்டையாடி விடுவார்கள். ஒவ்வொரு இயக்கமாக வேட்டை யாடப்பட்டு இறுதியில் முஸ்லிம்கள் அனை வரும் துவம்சம் செய்யப்பட்டு விடுவார்கள்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவி வாழ்கின்ற முஸ்லிம்கள் அனைவரையும் ஒருங்கிணைக்க இயலாமல் போனால் குறைந்த பட்சம் பெரிய குழுக்கள் மத்தியில் ஒருங் கிணைப்பை ஏற்படுத்தலாம்.

ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங் கள் பரஸ்பர புரிதல்கள் மூலம் ஒரு லட்சி யத்தை முடிவு செய்து அதை நோக்கிச் செல்லும் செயல்பாட்டின் நிலைப்பாட்டை வரை யறுத்து வேலை செய்யலாம்.

ஒத்த கருத்துள்ள விஷயங்களில் பரஸ் பரம் ஒத்துழைக்கலாம் மாற்றுக் கருத்தள்ள விஷயங்களில் நீக்குப் போக்காகச் செல்லலாம்.

இந்த பரஸ்பரப் புரிதல், ஒத்துழைப்பு, ஓரணியாக நின்று பணியாற்றுவது இவை யெல்லாம் மார்க்கத்தின் ஒரு கடமை. காலத்தின் கட்டாயம். ஒரு கோட்பாடு நம்மை ஒருங்கிணைக்க வில்லை என்றால் பல சிரமங்களாவது நம்மை ஒருங்கிணைக் கட்டுமே.

ஷவ்கீ என்ற கவிஞர் கூறுகிறார்

"இப்னுதல்ஹே! இனத்தால்
நாம் பிரிந்து கிடந்தாலும்
பாதிக்கப்பட்டவர்களை
சோதனைகள் ஒன்று
சேர்த்து விடுகின்றதே!"

சீர் திருத்தப் பணிகளில் எதற்கு முதலி டம் தர வேண்டும் என்ற கேள்வி வரும்போது இஸ்லாமிய வட்டத்துக்கு உள்ளே அறிவுரை கள் புகட்டுவது தர்பியா எனும் நன்னடத்தைப் பயிற்சி வழங்குவது ஆகியவற்றுக்கே முதலி டம் தர வேண்டும் என்று கூறினோம். அதனால் இஸ்லாமியக் களத்தில் உழை.

அரபி மூலம் : டாக்டர். யூசுஃப் அல் கர்ளாவி
தமிழ் வடிவம் : பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி, எம்.ஏ.,


காந்தி ஜி கொலை செய்யப்பட்ட தினத்தை
முன்னிட்டு வெளிவந்த நூல்




இப்போது பரபரப்பான
விற்பனையில்




விலை ரு. 30 மட்டுமே

வேர்கள் பதிப்பகம்,
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887



# சோதனைகளை வென்ற ரமழான்

இந்த ரமழானிலும், மாநில அரசும், மத்திய அரசும் பல நெருக்கடிகளைத் தந்தன.

ஆனால் அவற்றையெல்லாம் பொறுமையோடு தாங்கிக் கொண்டு, நோன்பினை நோற்றோம். இபாதத்களை நிறைவேற்றினோம், பெருநாளையும் கொண்டாடினோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த வகையில் உங்கள் அனைவருக்கும் பெருநாள் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்வரும் நாட்களிலும் ஈமானில் நிலைகுலையாமல் நின்று வருவனவற்றை எதிர்கொள்வோம். இன்ஷா அல்லாஹ்.

**இந்தப் பின்னணியில் ரமழான்களில் நாம் எதிர் கொண்டவற்றை ஏறிட்டுப் பார்ப்போம்...**

சென்ற 2016-ம் ஆண்டு ரமழான் மாதத்தில் சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாக அமர்ந்திருந்த திரு. கிருஷ்ணன் கவ்ல், பல்வேறு ஆணைகளைப் பிறப்பித்து, ரமழானில் நோன்பு நோற்பதை தொந்தரவுகளுக்கு உட்படுத்தினார்.

பாங்கு சொல்வதை தடை செய்ய தன்னால் இயன்றதையெல்லாம் செய்தார்.

கோன் ஸ்பீக்கரில் பாங்கு சொல்வது குறித்து ஓர் ஆணையைப் பிறப்பித்தார். அதைத் தடை செய்ய வேண்டும் என்பதே அவருடைய நோக்கம். ஓர் அதிரடி ஆணையைப் பிறப்பித்து முஸ்லிம்களை நெருக்கடிக்கு உள்ளாக்கினார். ஆணையைப் பிறப்பித்ததோடு நில்லாமல் அந்த ஆணையை எப்படிச் செயல்படுத்தினீர்கள்

என்பதையும் நீதிமன்றத்திற்கு வந்து தெரிவிக்க வேண்டும் என்றார்.

ஆனால் ரமழான் முடிந்த பின்பு கோன் குழாய்களை பயன்படுத்தி பாங்கு சொல்வது குறித்த விவகாரத்தை மாநில அரசு, நெறிப் படுத்திட வேண்டும் எனக்கூறி மொத்த விவகா ரத்தையும் கிடப்பில் போட்டார்.

மொத்தத்தில் ரமழான் மாதத்தில் முஸ்லிம் களுக்கு ஏதோ நம்மால் முடிந்த தொந்தரவு களைத் தந்தோம் என மகிழ்ச்சி அடைந்தார். அத்தோடு சங்கப் பரிவாரத்தையும் சந்தோஷப் படுத்திக்கொண்டார்.

இதேபோல்தான் ஒட்டகங்களைக் குர்பான் கொடுக்கும் விவகாரத்தில் நடந்துகொண்டு ஆட்சியாளர்களையும், சங்கர் பாரிவாரத்தின ரையும் சந்தோஷப்படுத்தினார், உச்ச நீதிமன்ற நீதிபதியானார்.

**மேட்டுப்பாளையத்தில்**

சென்ற ரமழானில் மேட்டுப்பாளையத்தில் பெண்கள் தராவீஹ் தொழுகை நடத்திய இடத்தில் சில தொந்தரவுகளை ஏற்படுத்தினர் காவல்துறையினர்.

அங்கு பெண்கள் தராவீஹ் தொழுகையை ஒரு வீட்டில் நடத்திக் கொண்டிருந்தனர். அங்கே காவல்துறையினர் சென்று “இது மஸ்ஜித் – அதுவும் அனுமதி இல்லாமல் கட்டியப் பள்ளிவாசல்” எனக்கூறி தொழுகையைத் தடுக்க முயன்றார்கள்.

ஆனால் பின்னர் மக்கள் மேற்கொண்ட பெரும் முயற்சிக்குப்பின் தொழுமிடம் காவல் துறையின் கெடுபிடிகளிலிருந்து தப்பியது.

அதேபோல் ஒரு கிராமத்தில் மக்கள், மதரஸாவையும், பள்ளிவாசலையும் ஒன்று போலவே நடத்தி வந்தார்கள். இங்கேயும் சங்கப் பரிவாரத்தினர் தொழுகையைத் தடுக்க தாசில்தாரையும் பின்னர் காவல்துறையும் ஏவி விட்டார்கள்.

அதையும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் துணையோடு ஊர் மக்கள் வென்றார்கள்.

இங்கே வென்றது ஊர் மக்கள் எனக் கூறியதற்குக் காரணம் ஊரிலுள்ள மக்கள் மத வேறுபாடுகளையும், ஜாதி வேறுபாடுகளையும் கடந்து ஒன்றாய் முஸ்லிம்கள் பக்கம் நின்றார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.தி.மு.க.) கவுன்சிலர் ஒருவர் இதில் உறுதி யாக நின்றார். அதனால் நீதி நிலைநாட்டப் பெற்றது. இதில் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில் ஒரு கட்டத்தில் பள்ளிவாசலில் தொழுகை நடத்தக்கூடாது என மனுகொடுத்



தவரை – புகார் கொடுத்தவரை கண்டு பிடிப்பதில் ஊர் மக்கள் வெற்றிப் பெற்று விட்டார்கள்.

ஊர் மக்கள் பிடியில் சிக்கிகொண்ட அந்த பாசிஸ்ட்டு இப்படிச் சொல்லியிருக் கின்றான்...

“என்னிடம் திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய இடங்களில் ரமழான் மாதத்தில் பிரச் சனைகளை உண்டு பண்ணிட வேண்டும் என இலக்கமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். நான் அவர்களிடம் சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை செய்பவன், நீங்கள் ஏதாவது செய்தால் என் வேலை போய்விடும் எனக் கூறி இருக்கின்றான்.

இரக்கப்பட்ட ஊரார் அவனை விட்டுவிட்டார்கள்.

இதிலிருந்து வெளிவரும் உண்மை என்ன வெனில் சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர்கள் “சம்பளம்” தந்து முஸ்லிம்களைச் சண்டைக் கிழுக்கப் பார்க்கிறார்கள். இதை தாருல் இஸ்லாம், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், இவை சந்தடி இல்லாமல் சந்தித்து வென்றார்கள்.

**இந்த ரமழானில் (முத்தலாக்)**

இது ரமழானுக்கு முன்னரே பீடிகையாக வந்தது. உங்களைத் தொந்தரவு செய்ய அதற்கு முன்னால் பொது சிவில் சட்டம் என்ற பீதியை கிளப்பிவிட்டனர். அதில் முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாகப் பொங்கி எழவே அதனை ஓரங்கட்டிவிட்டார்கள்.

ஆனால் முத்தலாக்கில், முஸ்லிம்கள் கருத்தால் வேறுபட்டார்கள். சக முஸ்லிம் களைப் பலவீனப்படுத்தினார்கள். இவர்களால் மோடியின் – பாசிஸ்ட்டுகளின் சூழ்ச்சியைச் சரியாகப் புரிந்துகொள்ள இயலவில்லை. மோடி வகையறாக்கள் முத்தலாக் விவகாரத்தை கிளப்பும் முன்னரே இந்த விவகாரத்தில் நர்க்ங்ப்ஹற்ங் நன்ள்ப்ண்ம் என்ற மிதமான முஸ்லிம்களின் கருத்துக்களை ஒன்றிணைக்க வேண்டும் எனச் சொல்லியேதான் பிரச்சனை யை கிளப்பினார்கள்.

மிதமான முஸ்லிம்கள் என்பதற்கு இங்கே பலவீனமான முஸ்லிம்கள் என்றே பொருள். எந்தத் தலாக்கும் எங்கள் "Personal Law" தனியார் சட்டம். அதில் தலையிட எந்தக் கொம்பனுக்கும் உரிமையில்லை என்பதை வீரியமுடன் சொல்லிட வேண்டிய தருணம்.

ஆனால் சில மெத்தப் படித்தவர்கள் மோடியின் வார்த்தைகளையே வாந்தி எடுத் தார்கள். இந்தப் பலவீனமான முஸ்லிம்களை அப்படியே விட்டுவிட்டு, நாம் அடித்துச் சொல்லுவோம் எங்கள் ஷரீஅத்தில் தலையிட உங்களுக்கு உரிமை இல்லை.

இதை இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் அடித்துச் சொல்லுகின்றது.

எந்த நீதிமன்றமாவது அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு மேல் எங்களுக்கு அதிகாரம் இருக்கின்றது என்றால் அதன் வாயை நறுக் கிடுவோம். அதனை சீர் செய்வோம்.. இன்ஷா அல்லாஹ்.

**மாட்டுக்கறி**



இப்போது மாட்டுக் கறியைத் தொடங்கி இருக்கின்றார்கள். கடந்த 200 ஆண்டுகளாக மாட்டுக் கறியை வைத்தே பல கோடி முஸ்லிம்களைக் கொலை செய்திருக்கின் றார்கள்.

1800கள் முதலே இவர்கள் மாட்டிறைச்சி

யைக் காட்டி முஸ்லிம்களைக் கொலை செய்திட துணிந்துவிட்டார்கள்.

அன்றைய முஸ்லிம்கள் இது அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கும் நிகழ்வு என்று விட்டுவிட்டார்கள். ஆனால் நாள்பட நாள்பட இது முஸ்லிம்களைக் கொலை செய்யக் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்க மேற்கொள்ளப்படும் முயற்சி என்பதைக் கண்டுகொண்டார்கள்.

இதனால் முஸ்லிம்களைப் பாதுகாக்கும் ஓர் தற்காப்புப்படையை 1893 ஆயிரத்து எண்ணூற்று தொன்னூற்று மூன்றாம் ஆண்டு நிறுவினார்கள்.

முஸ்லிம்களை ஒன்றிணைத்து இந்த ஏற்பாட்டைச் செய்தவர் அப்போதைய நீதிபதி களில் ஒருவர், அவருடைய பெயர்தான் நீதிபதி மஹ்மூத். நீதிபதி மஹ்மூத் அவர்கள் ஏற்படுத் திய தற்காப்பு அமைப்புப் படையின் பெயர் Hohammadan Defence Association (முஹம்மதியர்களின் தற்காப்புப் படை) இப்போதும் பல நீதிபதி மஹ்மூத்கள் தேவைப் படுகிறார்கள்.

அதேபோல் விநாயகர் சதுர்த்தியையும் கண்டுபிடித்தார்கள். இந்த விழாக்களின் பெயரில் கலவரங்களை உருவாக்கி முஸ்லிம் களைக் கொலை செய்தார்கள். முஸ்லிம்களின் வீடுகளைக் கொள்ளையடித்தார்கள். இதிலி ருந்தும் முஸ்லிம்களைப் பெருமளவில் பாதுகாத்தது, முஸ்லிம் தற்காப்பு குழுமம்.

இவர்களுடைய சுத்தி இயக்கம் "Suthi Movement" க்கு சுத்தம் செய்யும் இயக்கம் என்று பொருள். இவர்கள் ஏன் இந்தப் பெயைர வைத்தார்கள் என்பதை அன்றைய வரலாறு இப்படிக் கூறுகின்றது.

முஸ்லிம்கலெல்லாம் மாட்டை உண்டு அசிங்கப்பட்டுவிட்டார்களாம். அதாவது அசுத்தமாகிவிட்டார்களாம். அதனால் அவர் களை மீண்டும் இந்து மதத்திற்குக் கொண்டு வந்து தூய்மைப் படுத்திட வேண்டுமாம். இதற்காக இந்துக்களை "சங்காதன்" ஒன்றுபடுத்திட வேண்டுமாம். இதனை வி.டி. ராஜசேகர் அவர்கள் வரலாற்று ஆவணங்களி லிருந்து அகழ்ந்தெடுத்து இப்படிக் குறிப்பிடு கின்றார்.

இந்தியாவிலுள்ள நாஜிகள் (ஹிட்லரின் வாரிசுகள்) அந்த நிகழ்வால் மிகவும் மகிழ்ச்சி யடைந்தார்கள். (இங்கே அந்த நிகழ்வு என்பது முஸ்லிம்களின் உலகத்தலைமையாகிய கிலாபத்) இவர்கள் தங்களுடைய அமைப்பு களை ஏற்படுத்தினார்கள். அவை சுத்தி மற்றும் சங்காரின் அமைப்புகளாகும். இவற்றை சுவாமி ஷரதா நந்தா பண்டிட் மதன் மோகன் மாள்விய ஆகியோர் 1923 ஆம் ஆண்டில் தலைமையேற்று நடத்தினார்கள். (DV.Edit.1986)

இவர்கள், ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு சுத்தி சங்காதன் இயக்கங்கள் வீழ்ந்து பத்து ஆண்டுகளுக்குள் பின் அந்த இயக்கங்களை புதுப்பித்தார்கள் பத்து ஆண்டுகளுக்கு முன் இந்த இயக்கங்களை கர்நாடாகவிலுள்ள உடுப்பி–இல் வைத்து சுவாமி தர்மசன்சாத் என்பவரால் தொடங்கப்பெற்று, நடத்தப் பெற்றதாகும். இதன் முக்கிய நோக்கம் மாட்டுக் கறியைத் தின்னு, அசுத்தமாகிவிட்ட முஸ்லி ம்களை சுத்தப்படுத்து, இஸ்லாத்திலிருந்தும் அவர்களை சுத்தப்படுவதுமாகும். (DV.Edit.1986)

ஆக மாடுகளைக் காரணங்காட்டி முஸ்லிம் களைக் கொலை செய்வது, ஆண்டாண்டு காலமாக நடந்து வருகின்ற ஒன்று. அது இன்று ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் சங்கப்பரிவாரத்தின் கொள்கைகளுள் ஒன்று.

இவர்கள் இந்தக் கொலைகளை எப்படி ஊக்கப்படுத்தினார்கள் என்றால், இவர்கள் ஆட்சி செய்த மாநிலங்களில் பன்றிக்கூட பாடபுத்தங்களில் இதனை கற்பித்தார்கள்.

இவர்கள் ஆட்சி செய்த பாட சாலைகளில் கணக்குப் பாடம் ஒன்று கற்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குப் பாடத்தில் ஒரு பாடம். அது பின்வருமாறு அமைந்தது.

ஒரு முஸ்லிம் தன் வாழ்நாட்களில் 20 மாடுகளைக் திண்ணுகின்றான். இதனால் ஒரு முஸ்லிமை கொன்றால் 20 மாடுகளைக் காப்பாற்றிடலாம். அப்படியானால் நூறு மாடுகளைக் காப்பாற்றிட எத்தனை முஸ்லி ம்களைக் கொலை செய்ய வேண்டும்.



கணக்குப் பாடபுத்தகங்களில் இடம் பெற்ற இவற்றிற்கு பின்னால் நாடு தழுவிய எதிர்ப்புகள், விஷமங்களுக்கு எதிராகக் கடுமையாக எதிர்த்திருக்கின்றோம்.

ஆக இந்துத்துவ தீவிரவாதிகள் அல்லது ஆரியவர்த் இந்து ராஷ்டிராவை உருவாக்கிட நினைப்பவர்கள் இந்தியாவை வகுப்புவாத பாசிசத்தின் கையில் பிடித்துக் கொடுக்க விரும்புபவர்கள், மாட்டிறைச்சியைக் காரணங் காட்டி முஸ்லிம்களைக் கொலை செய்வதை ஒரு கொள்கையாகக் கொண்டவர்கள்.

**இந்துத்துவ தீவிரவாதிகளும் மாட்டிறைச்சியும்**

இவர்கள் தொடக்கக் காலத்தில் மாட்டி றைச்சியைத் திண்றவர்கள்தாம். ஆனால் இன்று பத்தினி வேஷம் போடுகின்றார்கள்.

இன்றும் மாட்டை அறுப்பதும் அதிகமாக அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும் இவர்கள்தாம்.

இதனை நாம பல கட்டுரைகளை வாயி லாகவும் வாசகர்களுக்கு தெளிவுபடுத்தி இருக் கின்றோம்.

**நீதிபதி சந்துரு**

இப்போது மாடுகளை அறுப்பதற்காக வாங்கவோ, விற்பதோ கூடாது என வந்த அரசின் தாக்கீது, எதற்காக என்பதை பலர் விளக்கினார்கள்.

இப்படி விளக்கியவர்களுள் நீதிபதி சந்துரு அவர்களும் ஒருவர்.

நீதிபதி சந்துரு அவர்கள் சொன்னவற்றில் இரண்ட விஷயங்கள் கவனிக்கத் தக்கவை.

ஒன்று இனி மாடுகளை அறுப்பார்கள். ஆனால் அவர்களுக்கு (அதாவது மோடி வகையாறக்களுக்கு) வேண்டிய பெரும்பெரும் கம்பெனிகள், அறுக்கும் அவர்களுடைய சில்லறை அங்காடிகள் வழி விற்பனையாகும். அவற்றை நீங்கள் சாப்பிடலாம். அதற்குத் தடை இல்லை.

நீதிபதி சந்துரு, அவர்கள் சொன்ன இந்த முதல் தகவல், இந்த அரசு தாக்கீது, மோடி வகையறா முதலாளிகளுக்குப் பணம் பெற்றுத் தரும். அதில் பெரும்பகுதி மோடிக்கும் இந்துத் துவ தீவிரவாதிகளுக்கும் போய்ச் சேரும்.

நீதிபதி சந்துரு சொன்னவற்றில் இரண்டா வதாகக் கவனிக்க வேண்டியது

இப்போது மாட்டின் பெயரால் முஸ்லிம் கள் கொலை செய்யப்படுவது சட்டத்தின் முன் குற்றம் எனப் பார்க்கப்படுகின்றது. ஆனால் இனி அது சட்டப்படியான நடவடிக்கை எனப்பார்க்கப்படும். அதாவது இந்துத்துவ தீவிரவாதிகள் இனி முஸ்லிம்களைக் கொலை செய்து விட்டு மாட்டுக் கறியைச் சொல்லி விட்டால் அவர்கள் சட்டத்தைச் செயல் படுத்துகின்றார்கள் என்றே பார்க்கப்படும். (Souce : Times of India 25-5-2017)

ஆனால் வட இந்தியாவில் இந்த Notificate தாக்கீது என்பது வருவதற்கு முன்பே, மாட்டுக் கறியின் பெயரால் கொலை செய்யப்படுபவர் கள், தேசிய தொண்டர்கள், குண்டர்கள் என்றே பார்க்கப்பட்டார்கள்.

தாத்ரியில் மாட்டின் பெயரால் கொலை செய்யப்பட்ட அஃஹ்லாக்கை கொலை செய்த முதல் குற்றவாளி இறந்தபோது அவருடைய இறந்த உடலுக்கு தேசிய கொடியைப் போர்த்தினார்கள் என்பது நாம் அறிந்த ஒன்று.

பின்னர் அஃஹ்லாக் மீதும், அஃலாக் குடும்பத்த வர்கள் மீதும் குற்றங்கள் சாட்டப்பட்டன. இதற்கு நீதிமன்றங்களும், துணை நின்றன. அதனை முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி மார்க் கண்டேயே கட்ஜீ கண்டித் திருந்தார். அதனை வைகறை வெளிச்சம் இதழில் வெளியிட்டிருந்தோம்.

**தீவிரவாதிகள் முஸ்லிம்கள் மீது கெடுபிடிகளைக் கட்டவிழ்த்திட மேற்கொள்ளும் உபாயங்களுள் ஒன்று. அன றைய காலங்களில் இது எந்த அளவுக்கு? அதாவது பாங்கு சொல்வது எந்த அளவுக்கு உக்கிரம் நிறைந்ததாக இருந்தது என்றால் முஹம்மத் அலீ ஜின்னா, ஜின்னா அவர்கள் சிம்மன் கமிஷனரிடம் கொடுத்த கோரிக்கைகளுள் ஒன்றாக பாங்கு சொல்வதும் இருந்தது.**

### தமிழகத்தில் மாட்டுக்கறி தாக்கீது

தமிழகத்தில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத் தில் குழப்பம். அதனால் ஆட்சியிலும் குழப்பம். ஆனால் ஒன்றில் மட்டும் குழப்பமில்லை. அது மோடியின் காலில் விழுவதில், இதிலும் ஒரு சின்ன குழப்பம் அது யார் முந்திரிக் கொட்டைபோல் முந்தி வீழ்வது என்பதுதான்.

இந்தப் பின்னணியில் தான் OPS, என்ற ஓ. பன்னீர்செல்வம் ஜல்லிக்கட்டுப் போராளிகளை அடித்துத் துவைத்தார். மெரீனாவில் கூடிய மக்களிடையே பின் லேடன் வந்தார் எனக் கூறினார். இது அவர் மோடி வகையறாக்களுக்கு செய்த செஞ்சோற் றுக் கடன். அடுத்து,

எடப்பாடி பழனிச்சாமி என்ற EPS. இவர் மோடிக்குப் பல தொண்டுகளைச் செய்து கொண்டிருக்கின்றார். அதில் 23-5-2017 அன்று மோடியின் மாட்டுக்கறி Noticiation தாக்கீது வந்தவுடனேயே செயல்படுத்தத் தொடங்கிவிட்டார். வடசென்னை துணை ஆணையர் முஸ்லிம்களை அழைத்து ''மாட்டை அறுக்க வேண்டாம்'' என கூறியுள்ளார்.

ஆனால் அடுத்த நாளே மதுரை நீதிமன்றம் அரசின் சர்ற்ண்ஸ்ரீண்ற்ண்ய் என்ற தாக்கீதை இடைக்காலத்தின் தடை செய்துவிட்டது.

மீண்டும் கோன் ஸ்பீக்கர் அதான் (எ) பாங்கு. இதுவும் அன்றைய காலந்தொட்டே நெல்லை மாவட்டத்தில் இந்துத்துவ வாதிகள் சில காவல்துறையை ஏவிவிட்டு பாங்கு சொல்வதற்குத் தடை செய்ய முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதற்கு அரசு அதிகாரி கள், உடனேயே செவிமடுத் திருக்கின்றார்கள்.

இவர்கள் யாருக்கும் சென்னை உயர்நீதி மன்றம் ''கோன் ஸ்பீக்கர்'' விஷயத் தில் என்ன சொன்னது இறுதியாக என்பது தெரியாது. இந்த அரசு அதிகாரிகளுக்குத் தெரியாது. அதனால் எடப்பாடிக்கும் அவர் இப்போது அனுசக்தி

வீழ்ந்து, வீழ்ந்து ஆதரவு தரும் மோடிக்கும் விசுவாசமாக நடந்துகொள்வோம் என நடந்து கொள்கின்றார்கள்.

ஆக, பாசிசம் தமிழகத்தில் ஆட்சியில் இருப்பவர்களை ஆட்சியிலிருப்பவர்களை மட்டும் பீடித்துக் கொண்டிருக்கின்றது.

இத்தனை சோதனைகளுக்கிடையேயும் நாம் பொறுமை காத்தாக வேண்டிய ரமழானை பொறுமையோடும், கண்ணியத் தோடும் கடந்து வந்திருக்கின்றோம். தொடர்ந்து வருபன வற்றை எதிர்கொள்வோம்.

அல்லாஹ் எச்சரிக்கின்றான்...

"அவர்களுக்கு உங்கள் மீது அதிகாரம் கிடைத்தால், அவர்கள் உங்களுக்கு விரோதிகளாகித் தம் கை களையும், உங்களுக்குத் தீங்கிளைப்பதற்காக உங்கள் பால் நீட்டுவார்கள். அத்தோடு நீங்களும், அல்லாஹ்வை நிராகரித்தவர்களாக ஆகிவிட வேண்டும் என்று பிரியப்படுவார்கள். (60 :2 அல்குர்ஆன்) மேலும் பார்க்க திருக்குர்ஆன் வசனங்கள் 2:126, 2:217, 4:44, 14:13

-எம்.ஜி.எம்.

# கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய்

எல்லா பரிணாமவியலாளர்களின் வெளியீடுகளும் ஒரு அம்சத்தை பொதுவாக கொண்டுள்ளன. சில உயிரியல் அமைப்புகள் அல்லது உயிருள்ள பொருள்களின் குண நலன்கள் ஏன் பரிணாமம் பெறுகின்றன என்ற கற்பனை நிகழ்வுகளுக்கு அதிகமான பக்கங்களை ஒதுக்குகின்றன. இதில் கவனிக்கதக்க காரணி என்னவென்றால் எல்லா கற்பனை கதைகளும் அறிவியல் பூர்வமான நிகழ்வுகளாக காட்டப்படுகின்றன. இவை டார்வினின் புனை கதைகள்.

பரிணாமவியலாளர்களின் இலக்கியங்களில் கூறப்படும் கதைகளில் அடிக்கடி சொல்லப்படும் கதை:

குரங்கு மனிதனாக மாறுவது, நாகரீக முதிர்ச்சியற்ற மனிதன் கொஞ்சம் கொஞ்சமாக சமூகத்தின் அங்கமாக மாறுவது. எனினும் பாதியே நிமிர்ந்த, உறுமலை எழுப்பக் கூடிய, குகைகளிலே கூட்டமாக வாழ்ந்த, கரடு முரடான கல் ஆயுதங்களை பயன்படுத்திய மனிதன் போன்ற சித்திரங்களுக்கு எவ்வித அறிவியல் ஆதாரமும் இல்லை.

கற்பனை செய்து நம்ப வேண்டும் என்பதற்கான அழைப்புகள் இவை.

தங்களுடைய இத்தகைய பதிவுகளில் பிழைகள் உள்ளன என்பது தெரிந்து இருந்தும், இந்த பதிவுகளை இலக்கியமாக்குவதையோ அல்லது அவற்றை அறிவியல் உண்மை என சொல்வதிலோ எந்த தடுமாற்றமும் பரிணாமவியலா ளர்களுக்கு இல்லை.

**மாயன்: கணிதவியல் வல்லுநர்கள்**

மாயன் - BCE *1000* ஆம் ஆண்டுகளில் மத்திய அமெரிக்காவில் வாழ்ந்தவர்கள். எகிப்து, கிரீஸ் மற்றும் மெசபடோமியா போன்ற வளர்ச்சியடைந்த நாகரீகங்கள் வாழ்ந்த இடங்களில் இருந்து குறிப்பிடத்தக்க தொலைவில் இவர்கள் வாழ்ந்துள்ளனர்.

மாயன்களை பற்றி சொல்லவேண்டுமெனில், வானியல், கணிதவியல் மற்றும் சிக்கலான எழுத்து மொழிகளில் அவர்கள் ஆற்றிய பங்களிப்பை பற்றி கூறலாம். மேற்கு உலகம் அந்த கால கட்டத்தில் கொண்டிருந்த வானியல், கணிதவியல் மற்றும் நேரம் பற்றிய அறிவுகளை விட மாயன்கள் அதிகம் அறிந்து வைத்திருந்தனர்.

கணினி கண்டுபிடிப்பதற்கு முன்னரே மிக துல்லியமாக கணக்கிடப்பட்ட புவியின் ஒரு ஆண்டு சுற்று பற்றிய கணக்கீடுகள் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. மேற்கத்திய கணிதவியலாளர்களின் கண்டுபிடிப்புகளுக்கும் முன், சுமார் ஆயிரம்



## மாயன் : பரிணாம தத்துவத்தை மறுதலிக்கும் மற்றொரு நாகரிகம்

ஆண்டுகளுக்கு முன்பு பூஜ்யத்தை பயன் படுத்தியுள்ளனர். மேலும் குறியீடுகளையும் வரைபடங்களையும் (மற்றவர்களை விடவும்) பயன்படுத்தியுள்ளனர்.

**மாயன் காலண்டர்:**

ஹாப் எனப்படும் 365 நாட்களை கொண்ட காலண்டர் இவர்களுடையதே. ஒரு ஆண்டு என்பது 365 நாட்களை விடவும் சிறிதளவு அதிகமானது என்பதை இவர்கள் அறிந்து வைத்துள்ளார்கள். இவர்களின் கணிப்பின் படி ஓர் ஆண்டு என்பது 365.242036 நாட்களா கும். நாம் பயன்படுத்தும் கிரிகோரியன் காலண்டர் படி ஒரு வருடம் என்பது 365.2425 நாட்களாகும். மிகச் சிறிய வேறுபாடே இரண்டு கணக்கீடுகளுக்கும் உள்ளது.

**மாயன்களின் வானியல் அறிவு:**

மாயன்களின் சுவடி என்று அறியப்படும் மூன்று புத்தகங்கள் நமக்கு கிடைத்துள்ளன. இதில் அவர்களின் வாழ்க்கை முறை பற்றியும், வானியல் அறிவியல் பற்றியும் உள்ள தகவல் கள் அடங்கியுள்ளன. மாட்ரிட் சுவடி, பாரிஸ் சுவடி மற்றும் டிரஸ்டென் சுவடிகளே அவை. இவற்றுள் மூன்றாவது சுவடியில் மாயன்களின் வானியல் அறிவு குறித்த தகவல்கள் காணப் படுகின்றன. இவர்களின் எழுத்து முறை மிகவும் சிக்கலானது. இவர்களின் எழுத்தில் இருந்து 30% மட்டுமே பொருள் அறியப் பட்டுள்ளது. எனினும் இந்த பொருள் விளக் கத்தில் இருந்தே அவர்கள் அறிவியலில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளதை அறியலாம்.

உதாரணமாக டிரெஸ்டென் சுவடியின் பக்கம் 11 வீனஸ் கோள் பற்றி விவரிக்கின்றது. மாயன்களின் கணக்குப்படி வெனுசியன் வருடம் என்பது 583.92 நாட்களை கொண் டது. அதாவது 584 நாட்கள். மேலும் அவர்கள் சுமார் ஆயிரம் வருடங்களுக்கான கோள்களின் சுழற்சியை விளக்கும் வரைபடங்களையும் உருவாக்கியுள்ளனர். இச்சுவடியின் இரண்டு பக்கங்களில் செவ்வாய் கிரகத்தை பற்றியும், நான்கு பக்கங்களில் ஜுபிட்டர் மற்றும் அதன் கோள்கள் பற்றியும், எட்டு பக்கங்களில் சூரியனை மையமாக கொண்டு சந்திரன், மெர்குரி மற்றும் சனி கிரகங்களின் சுழற்சியை பற்றிய கணக்கீடுகளை கொடுத்துள்ளனர். மேலும் புவியுடன் இந்த கோள்களின் தொடர்புகளையும் விவரிக்கின்றனர்.

வெனுசியன் வட்டப்பாதையில் ஒவ்வொரு 6000 வருடங்களில் ஒரு நாள் குறைந்து வருகிறது என்பதையும் துல்லிய மாக கணக்கிட்டுள்ளனர். இவர்களுக்கு இந்த விபரம் எவ்வாறு தெரிந்து இருக்க முடியும்? இன்றளவும் இயற்பியலாளர்கள், வானியல் ஆராய்ச்சியாளர்களுக்கு மத்தியில் இது விவாதமாகவே உள்ளது.

கணினியின் துணை கொண்டே இன்று இம்மாதிரியான சிக்கலான கணக்கீடுகளின் முடிவுகள் கொண்டு வரப்படுகின்றன. தொழில் நுட்ப மின்னணு இயந்திரங்கள் உதவியை கொண்டே அறிவியலாளர்கள் பிரபஞ்சத்தை பற்றி அறிந்து கொள்கிறார்கள். ஆனால் மாயன்கள் அன்றே பிரபஞ்சத்தை பற்றி அறிந்து வைத்துள்ளனர்.

**திகல் என்ற மாயன்களின் நகரத்தில் காணப்படும் சாலைகளின் அமைவுகள்:**

BCE 8 ஆம் நூற்றாண்டில் மாயன் களின் பழமையான நகரமான திகல் கண்டு பிடிக்கப்பட்டது. தொல்லியல் துறை ஆராய்ச் சியின் போது இந்த நகரத்தில் இருந்து வீடுகள், அரண்மனைகள், பிரமிடுகள், வழிபாட்டு தலங்கள், மற்றும் குழுமும் இடங்கள் ஆகியவை தோண்டி எடுக்கப்பட்டன.

இந்த அனைத்து இடங்களையும் ஒன்றுக் கொன்று இணைப் பதற்கு சாலைகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. வடிகால் அமைப்புகளை யும், நீர்ப்பாசன அமைப்புகளையும் மிகச் சிறப்பாக பயன்படுத்தியுள்ளதை ராடாரின் மூலம் பெறப்பட்ட படங்கள் எடுத்துக்காட்டு கின்றன.

திகல் நகரத்தில் ஆறுகளும் இல்லை, ஏரிகளும் இல்லை. ஆனால் பத்து நீர் கொள் கலன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திகல் நகரத்தில் இருந்து காடுகளுக்கு ஐந்து பிரதான சாலைகள் செல்கின்றன.

இவைகள் சமய சடங்குகளுக்காக பயன் படுத்தப்பட்டிருப்பதாக தொல் இயல்துறை நிபுணர்கள் விவரிக்கின்றனர். ஒவ்வொரு மாயன் நகரங்களும் மிகப் பெரிய சாலைகளை கொண்டு இணைக்கப்பட்டிருப்பதாக வான் வழியாக இருந்து எடுக்கப்பட்ட புகைப் படங்கள் தெரிவிக்கின்றன. இவற்றுள் சில சாலைகள் 300 கி.மீ வரை நீளமானது.

பாறைத்துண்டுகளை கொண்டு இச்சாலை கள் போடப்பட்டுள்ளன. இந்த சாலைகளின் மேல், அரிப்பை கட்டுப்படுத்தும் (light-Color) நிறமிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. வரைகோல் களின் துணையுடன் போடப்பட்ட சாலைகள் போன்று இவை நேராக காட்சியளிக்கின்றன. மாயன்கள் எவ்வாறு சாலை கட்டுமான திசை களை அறிந்தனர் என்பதும் எந்த வகையான கருவிகளை பயன்படுத்தினர் என்பதும் இங்கே முக்கியமான கேள்விகள். இதிலிருந்து ஒர் உண்மை தெளிவாகப் புலப்படுகின்றது.

இந்த சாலைகள் தெளிவான கணக்கீடுகள், அளவீடுகள் மற்றும் அதற்கு தேவையான கருவிகளை கொண்டே போடப்பட்டுள்ளன.

**மாயன்கள் பயன்படுத்திய சக்கரங்கள்**
(Cogs Used by the Mayans):

மாயன்கள் வாழ்ந்த பகுதியில் இருந்து அவர்கள் பயன்படுத்திய பற்சக்கரங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கோபன் என்கிற மாயன் நகரத்தில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இதற்கு சான்றாக உள்ளன. பற்சக்கரங்களை பயன் படுத்திய சமூகங்கள் கண்டிப்பாக இயந்திரவி யல் அறிவை பெற்றிருக்க வேண்டும்.

பற்சக்கர இயக்கங்களின் அறிவாற்றல் இல்லாதவர்களால் இதை உருவாக்க முடியாது. உதாரணமாக அப்புகைப்படத்தில் காணப்படும் இயக்கங்களை போன்ற ஒத்த மாதிரியை எந்த வித பயிற்சி முறைகளும் இல்லாமல் அதை உருவாக்கிடவோ அல்லது அதன் இயக்கத்தை சரியான முறையில் செலுத் திடவோ செய்ய முடியாது. எனினும் மாயன்கள் அதற்கான அறிவை பெற்றிருந்தனர்.

திருக்குர் ஆனும் நமக்கு முன்னர் வாழ்ந்த சமுதாயங்கள் சில வளர்ச்சியடைந்த கலாச்சாரங்களை கொண்டிருந்தன என சொல்கின்றது.



(நபியே) இவர்கள் பூமியில் சுற்றித் திரிய வில்லையா? (திரிந்திருந்தால்) இவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எவ்வாறு ஆயிற்று என்பதைக் கண்டு கொள்வார்கள். (முன்னிருந்த) அவர்களோ, பலத்தாலும், பூமியில் விட்டுச் சென்ற சின்னங்களாலும் இவர்களை விட மிகைத்தவர்களாகவே இருந்தனர்........ திருக்குர் ஆன் 40:21

(நிராகரிக்கும்) இவர்கள் பூமியில் சுற்றித் திரிந்து பார்க்கவில்லையா? அவ்வாறாயின், அவர்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எவ்வாறாயிற்று என்பதைக் கண்டுகொள் வார்கள். அவர்களோ, இவர்களை விட அதிக மானவர்களாகவும் பலத்தாலும், பூமியில் விட்டுச் சென்ற சின்னங்களாலும் மிகைத்தவர் களாக இருந்தார்கள். எனினும் அவர்கள் தேடிச் சேகரித்து வைத்திருந்தவர்களில் ஒன்றுமே அவர்களுக்கு பயனளிக்கவில்லை. திருக்குர் ஆன் 40:82

அநியாயக்காரர்கள் வசித்திருந்த எத்த னையோ ஊர்களை நாம் அழித்திருக்கிறோம். அவற்றுடைய முகடுகள் இடிந்து குட்டிச் சுவராகி கிடக்கின்றன. அவற்றின் (எத்த னையோ) கிணறுகள் பாழடைந்து கிடக்கின் றன. அவற்றின் மாட மாளிகைகள் பாழாய் கிடக்கின்றன. திருக்குர் ஆன் 22:45

# இஃப்தார் நிகழ்ச்சி

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் மற்றும் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக வருடந்தோறும் நோன்பு துறக்கும் நிகழ்ச்சி நடத்தி வருகிறோம்.





நோன்பு நம்மிடம் எதிர்ப்பார்ப்பதென்ன? நோன்பின் நோக்கம், நோன்பின் காலத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், நோன்பின் மகத்துவம், உம்மத்தின் மாற்றம் என்று தொடர்ந்து முஸ்லிம்களை அழைத்து செய்திகளைச் சொல்லி வருகிறோம்.

அந்த வகையில் இந்த வருடம் 11–6–2017 அன்று செரியன் நகர் 4–வது தெருவில் நமது சகோதரர் ய. முஹம்மது யூசுப் பாய் வீட்டில் இஃப்தார் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தோம்.

சகோதரர் இஸ்மாயில் நிகழ்ச்சியை ஆரம்பித்தார். கிராஅத் ஓதிய பிறகு தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் நிர்வாகி சகோதரர் ரஹ்மத்துல்லாஹ் அவர்கள் பத்ருபோர் தரும் படிப்பினை என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அல்ஹம்துலில்லாஹ்.

ஆனாலும் நோன்பு துறக்கும் போது செய்யும் துஆ அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப் படும் என்பதால் இந்தியாவை சர்வாதிகார கொடுமைக்காரர்களின் ஆட்சியை பிடிங்கி அல்லாஹ்வின் நல்லடியார்களிடம் ஆட்சியை ஒப்படைக்கவும், உலகம் முழுவதும் முஸ்லிம்களின் துயர்களை லேசாக்கவும், அவர்களின் தியாகங்களை ஏற்றுக் கொள்ளவும், மனமுறுகி துஆ செய்யப்பட்டது.




### சமூக நீதி போராளி

# மதிமாறனுக்கு கொலை மிரட்டலா?

அன்புச் சகோதரர் மதிமாறன் ஒரு சமூக நீதி போராளி. கூர்மையான அறிவுக்குச் சொந்தக்காரர். அதனால் தொலைக்காட்சி விவாதங்களில் அதிகமாக கலந்துகொள்பவர்.

கருத்துப் போர்க் களத்தில் வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருப்பவர்.

அண்மையில் "யோகா" பற்றிய தொலைக் காட்சி விவாதத்தில் அவர் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த நாராயணன் என்பவரை எதிர் கொண்டார்.

நாராயணனும் சில நேரங்களில் சிறப்பா கவே விவாதிப்பவர் இந்த எண்ணம் போலி யானது என்பதை மதிமாறனை விவாதத்தில் எதிர்கொண்டபோது நாராயணனிடம் பளிச் சிட்டது.

நாராயணன், உப்புச் சப்பற்றவர், விவாத அரங்கில் தோற்றுப்போய் மண்ணைக் கவ்வும் போது மிரட்டல் என்ற மலிவான உத்தியில் - புத்தியில்லா தனத்தில் இறங்குபவர் ; என்பதைக் காட்டினார்.

விவாத அரங்கில் மிரட்டியது நாடெல்லாம், ஊரெல்லாம், கண்டணத்திற்கும், காரி உமிழும் அளவிலும் மாறியது.

## விடுதலை பத்திரிகை அறிக்கை

அதாவது நாராயணனின் மிரட்டலுக்கு எஸ்.வி. சேகர் வக்காலாத்து வாங்கினார். அவருக்கு அறிஞர் "சுபவீ" பொட்டில் அடித் தாற்போல் பதில் தந்தார். அதற்குமுன் "விடுதலை" நாளிதழ் தனது எதிர்ப்பைக் காட்டியது. இவற்றை இங்கே இடம் பெறச் செய்கின்றோம்.

பாசிச பரிவாரத்தைச் சார்ந்தவர்களை அத்தோடு நாம் விவாதத்திற்கு அழைக் காதீர்கள் எனக் கூறிட மாட்டோம். தாராள மாக அழையுங்கள் அவருடைய உண்மை முகம் ஊரெல்லாம் அறிமுகமாகும் வரை அழையுங்கள்.

ஆனால் அழைக்கும் தொலைக்காட்சியை மக்கள் மலிவாக எடுத்துக் கொள்வார்கள், பார்த்துக் கொள்ளுங்கள்.

மதிமாறனை அடிக்கடி அழைத்தால் மக்கள் விழிப்படைவார்கள். அந்தத் தொலைக்காட்சியை மக்கள் அதிகமாக ஆர்வமுடன் பார்ப்பார்கள், தரம் மிக்குயரும்.

எப்போதும் என்னை அரவணைத்து வழி நடத்துகிற திராவிடர் கழகத்தின் விடுதலையின் ஆதரவு.

தனியார்த் தொலைக்காட்சி ஒன்றில் முதல் நாள் (20.6.2017) யோகாபற்றி விவாதம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒரு பார்ப்பனர் 'நான் பூணூல் அணிந்த பிராமணன்' என்று மார்தட்டி சட்டையையும் கழற்றிக் காட்ட முயற்சித்துள்ளார். இதன்மூலம் இந்த 2017 இலும் மற்றவர்களைச் "சூத்திரர்கள்" என்று அவமதிக்கும் அராஜகத்தைக் காண முடிகிறது.

அத்தோடு நிற்கவில்லை. கடவுள் மறுப்பாளர்கள் அதிக விலை கொடுக்க நேரிடும் என்று மிரட்டும் தொனியிலும் ஆவேசமாகப் பேசியுள்ளார். எதிர்த் தரப்பில் பங்கேற்ற தோழர் மதிமாறன், "நீங்கள் சொல்லும் விலை என் காதுகளில் கொலை என்று விழுகிறது" என்று கூறி, பா.ஜ.க. அராஜகக் கூச்சல்காரரின் முகமூடியைக் கிழித்தார்.

கொஞ்ச காலமாகவே தொலைக் காட்சிகளில் பங்கேற்கும் பா.ஜ.க.வினர் - அதிலும் பார்ப்பனர்களின் பேச்சுத் தொனி அத்துமீறித்தான் சென்று கொண்டிருக்கிறது. நேயர்களும் இதனைக் கவனித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

மத்தியில் ஆளும் அதிகாரம் அவர் கள் கையில் வந்துவிட்ட திமிர், தமிழ்நாட்டு ஆட்சியோ அவாளுக்கு அடகுபோன ஆட்சி என்ற தன்மையில் திமிராக நடந்துகொள்கிறார்கள்.

முன்பெல்லாம் ஆர்.எஸ்.எஸைப் பற்றிப் பேசினால், அவர்களைப்பற்றி ஏன் பேசுகிறீர்கள்? அவர்கள் சார்பாக இங்கு யாரும் இல்லையே என்று குறுக் கிட்டவர்கள் - இப்பொழுது, 'ஆம், நாங்கள் ஆர்.எஸ்.எஸ்.தான் - அதில் பெருமை கொள்கிறோம்!' என்று ஆவேசமாகப் பேச ஆரம் பித்துள்ளனர்.

சரக்கு இல்லாத வெறுமையான நிலையில், சத்தம் கொடுக்கிறார்கள் - அடுத்தவர்களைப் பேசவிடாமல் காட்டுக் கூச்சல் போடுவது என்பதெல்லாம் கடைந்தெடுத்த கோழைத்தனம் தானே!

பந்தை அடிக்க முடியாதவர்கள் காலை அடிப்பார்கள் அல்லவா - அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அக்கிர காரவாசிகள்.

பார்ப்பனர்கள் தமிழர்கள்தான் என்று பேசும் தமிழ்த் தேசியவாதிகள் கொஞ்சம் அறிவோடு சிந்திக்கட்டும்.

காவல்துறையின் கவனத்துக்கு...

தோழர் மதிமாறன் மிரட்டப்பட்டுள்ளார்; அதிக விலை கொடுக்க நேரும் என்று எச்சரிக்கவும்பட்டுள்ளார். இதனை அலட்சியமாகக் கருதாமல் காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். தோழர் மதிமாறனுக்குப் போதிய பாது காப்பும் அளித்திடுவது காவல்துறையின் கடமையாகும்.

**- நன்றி விடுதலை.**

**சுபவீர பாண்டியன் அவர்கள் மடல் :**

தன் சமூகத்தின் ஆர்வலர்களான எஸ்.வி. சேகர்களுக்கு பேராசிரியர் சுபவீயின் கேள்விகள்.

**நடிகர் எஸ்.வி.சேகர் அவர்களுக்கு ஒரு திறந்த மடல்**

திரு எஸ்.வி.சேகர் அவர்களுக்கு,

வணக்கம். நேற்று வெளியான உங்களின் 11 நிமிடக் காணொளியைக் கண்டேன். அதுகுறித்துச் சில செய்திகளை உங்களோடு பேசுவதற்காகவே இந்த மடல். ஊர் அறிய வேண்டும் என்பதற்காக இதனைத் திறந்த மடலாக வெளியிடுகின்றேன்.

நியூஸ் 7 தொலைக்காட்சியில் நண்பர்கள் நாராயணன், மதிமாறன் இருவருக்குமிடையே சில நாள்களுக்கு முன் நடைபெற்ற உரையாடலின் அடிப்படையில் உங்கள் காணொளி அமைந்துள்ளது. அந்த தொலைக்காட்சி நிகழ்வை நானும் பார்த்தேன்.

1) நீங்களும் நானும் அடிப்படையில் முற்றிலும் நேர் எதிரான கொள்கைகளைக்

கொண்டவர்கள் என்பது வெளிப்படை. மீண்டும் அதனை உங்கள் காணொளி உறுதிப்படுத்தியுள்ளது. "சாதியும் மதமும் நமக்குத் தாய், தந்தை போல" என்று கூறியுள்ள தோடு, "ஒவ்வொருத்தரும் தங்கள் சாதியை ஓசத்திப் பேசுங்க. அதிலே தப்பில்ல" என்றும் நீங்கள் காணொளியில் குறிப்பிட்டுள்ளீர்கள்.

எங்களை இழிவுபடுத்தும் சாதி உங்களுக் குத் தாய் போலத் தெரிகிறது. சாதி தாய் என்றால், 'சாதிகள் இல்லையடி பாப்பா என்று சொன்ன பாரதி பற்றிய உங்கள் பார்வை என்ன? சாதியைக் காப்பாறுவதுதான் உங்கள் நோக்கம் என்பதை நாங்கள் அறிவோம். சாதி அமைப்பு இருந்தால்தானே, சிலர் மேலும், பலர் கீழுமாக இந்தச் சமூகத்தில் வாழ முடியும்! ஆனால் சாதியை ஒழிக்க வேண்டும் என்பதுதான் எங்களின் நோக்கம். எனவே நாம் இருவரும் ஒரு புள்ளியில் சந்திக்க வாய்ப்பே இல்லை.

*2)* "எந்தப் பார்ப்பனர் மீதாவது ஒரு எப்.ஐ.ஆர். உள்ளதா என்று கேட்கிறீர்கள். இந்திய ராணுவ ரகசியங்களை வெளிநாட் டிற்கு விற்ற கூமர் நாராயணன் யார் சேகர்? அது பழைய கதை என்பீர்கள். சங்கரராமன் கொலைவழக்கில் ஒரு பார்ப்பனர் மீதன்று, பல பார்ப்பனர்கள் மீது எப்.ஐ.ஆர். போடப் பட்டதே? வழக்கும் நடந்ததே. அவர்கள் விடுதலையாகி விட்டனர் என்பீர்கள்!

ஜெயலலிதா மீது வழக்குத் தொடுக்கப் பட்டு, உச்ச நீதிமன்றம் தண்டனையும் வழங்கி யுள்ளதே, அது கூடவா உங்களுக்கு மறந்து போய்விட்டது?

*3) 99.9%* மதிப்பெண் வாங்கினால் கூட, பார்ப்பன மாணவர்களுக்கு, படிப்பதற்கு இடம் கிடைப்பதில்லை என்று கூறியுள்ளீர்கள். அப்படியானால், இன்று பள்ளி, கல்லூரிகளில் படித்துக் கொண்டுள்ள பார்ப்பன மாணவர்கள் அனைவரும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றவர்களா? பொய்யைக் கூட உங்களால் பொருந்தச் சொல்ல முடியவில்லையே?

*4)* நண்பர் மதிமாறன், மதியில்லாதவர், குறுக்குப்புத்திக்காரர் என்றெல்லாம் வசை பாடும் நீங்கள், அடுத்தவரை வெறுக்காமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எங்களுக்கு அறிவுரை வேறு கூறுகின்றீர்கள். மதிமாறனின் புத்திக் கூர்மையான வினாக் களுக்கு விடை சொல்ல முடியாமல் தடுமாறிய 'பிரபலங்களைத்' தொலைகாட்சி நிகழ்ச்சி களில் நாங்களும் பார்த்துள்ளோம். அது போகட்டும், அவர் அடுத்த சாதியினரை அசிங்கமாகப் பேசினார், பார்ப்பனர்களைத் திட்டினார் என்று பொத்தாம் பொதுவாகவே கடைசி வரையில் பேசியுள்ளீர்களே தவிர, அப்படி என்ன பேசினார் என்று எந்த இடத் திலும் கூறவே இல்லையே ஏன்? அங்குதான், சான்று இல்லாமல் பழி தூற்றும் உங்கள் தந்திரம் இருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம்.

*5)* அந்த விவாதத்தில் நாராயணன் அவ்வளவு அமைதியாகவா பேசினார்? எவ்வளவு இரைச்சல்! அடுத்தவரைப் பேச விடாமல் தடுக்கின்ற ஆர்ப்பாட்டம்! யோகா செய்தால் மன அமைதி வரும், நிதானம் வரும் என்றெல்லாம் சொல்கின்றீர்கள், நண்பர் நாராயணன் யோகா செய்வதே இல்லையா?

அன்று மதிமாறன் என்ன கேட்டார்? யோகா நல்லது என்கின்றீர்களே, சுன்னத் செய்வதும் நல்லது என்றுதான் மருத்துவ அறிவியல் சொல்கிறது. அதற்காக அனைவரும் சுன்னத் செய்து கொள்ள வேண்டும் என்று சொன்னால் ஏற்றுக் கொள்வீர்களா என்று கேட்டார். அறிவார்ந்த இந்தக் கேள்வி உங்களைக் கோபப்படுத்தத்தான் செய்யும்.

*6)* திமுக செயல் தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியும், பாராட்டும் சொல்லி யுள்ளீர்களே, அங்குதான் உங்களின் மூளை அபாரமாக வேலை செய்துள்ளது. மக்கள் செல்வாக்கு உள்ள ஒருவரை நேரடியாகப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதில்தான் எத்தனை கவனம்.

ஸ்டாலின் அவர்கள் மீதும் , திராவிட இயக்கத்தின் மீதும் உங்களுக்கெல்லாம் எவ்வளவு அடங்காச் சினம் உண்டு என்பது எங்களுக்குத் தெரியாதா? சில நாள்களுக்கு முன்பு கூட, ரஜினி, அஜித், விஜய் மூவரும் சேர்ந்து கட்சி தொடங்க வேண்டும் என்று பேட்டி கொடுத்தீர்கள், அதன் உட்பொருள்

என்ன? என்ன செய்தாவது திமுக ஆட்சிக்கு வருவதைத் தடுத்துவிட வேண்டும் என்பதுதானே! செயல் தலைவர் மீது இவ்வளவு கோபத்தை உள்வைத்துக் கொண்டு, வெளியில் நன்றியும், பாராட்டும் சொல்கின்றீர்களே, தேர்ந்த நடிகர்தான் நீங்கள்!

செயல் தலைவர் தளபதி அவர்களையும், ஆசிரியர் வீரமணி அவர்களையும், என்னையும், தம்பி மதிமாறனையும் வெட்டிப் போட்டு விட்டால், உங்களின் கோபம் தீர்ந்துவிடுமா? அப்போது கூட எங்களை வெட்டுவதற்கு, அறியாமையிலும், வறுமையிலும் உள்ள எங்கள் சகோதரன் ஒருவனிடம்தான் அரிவாளைக் கொடுத்து விடுவீர்கள். நீங்கள் வெட்டினால், உங்கள் மீது எப்.ஐ.ஆர் வந்துவிடுமே!

இப்போதும் அன்புடன் **சுப. வீரபாண்டியன்**

**தோழர் மதிமாறனை ஆதரித்தும்,**

பாஜக நாராயணன், எஸ்.வி.சேகரின் பார்ப்பன சாதிவெறியை கண்டித்தும், ஜன நாயக சக்திகளுக்கு கொலை மிரட்டல் விடுக்கும் ஆர்.எஸ்.எஸ், பாஜக பயங்கரவாதிகளை கண்டித்தும் அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டம் சார்பாக இன்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் போராட்டம் நடைபெற்றது.

## மு.க.ஸ்டாலின் அறிக்கை :

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடந்த விவாத நிகழ்ச்சி சம்பந்தமான சர்ச்சையினையடுத்து, நடிகரும் நண்பருமான எஸ்.வி. சேகர் அவர்கள் என்னிடம் அலைபேசியில் பேசினார். சட்டமன்ற நிகழ்வுகளில் பங்கேற்றிருந்த நிலையில், “நீங்கள் சொல்வதை கவனிக்கிறேன்” எனத் தெரிவித்து, அது பற்றிக் கவனம் செலுத்துமாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி எம்.பி. அவர்களிடம் தெரிவித்தேன். சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற்று வந்தநிலையில், மக்கள் பிரச்சினைகளில் தொடர்ந்து கருத்தைச் செலுத்திட வேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டதால், இது குறித்து உடனடியாக கவனம் செலுத்த நேரமோ வாய்ப்போ நேர்ந்திடவில்லை. டி.வி. விவாதம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் கழகத்தின் சார்பில் பங்கேற்கவிருந்த உறுப்பினரும் எனது கருத்தினை அறிந்தபின் பங்கேற்கலாம் என்பதால் அந்த நிகழ்வைக் கடமை உணர்வோடு தவிர்த்திருக்கிறார்.

இதன் தொடர்ச்சியாக,தனிமனித நட்புக்கு அரசியல் வண்ணம் பூசப்பட்டு,சமூக ஊடகங்களில் விமர்சனங்களாகி வருவதை பின்னர் அறிந்தேன். நூறாண்டு கால திராவிட இயக்கம் எந்த சமூக நீதிக் கொள்கையையும் சமநீதியையும் சமத்துவத்தையும் முன்வைத்துப் பாடுபடுகிறதோ அந்தக் கொள்கைகளுக்கு குன்றிமணி அளவிலும் குந்தகம் ஏற்படாத வகையிலும் பகுத்தறிவுடனும் சுயமரியாதையுடனும் தி.மு.க. தொடர்ந்து செயல்படும் என்பதில் எவருக்கும் எள்ளளவும் சந்தேகம் ஏற்பட வேண்டியதில்லை.

தந்தை பெரியாருக்கு மூதறிஞர் ராஜாஜியுடனும் நட்பு உண்டு, தவத்திரு குன்றக்குடி அடிகளாருடனும் நட்பு உண்டு. அதற்காகத் தனது கொள்கைகளை எப்போதும் அவர் விட்டுத் தந்ததில்லை. அதுபோலவே பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞர் அவர்களும் தனிப்பட்ட முறையில் பலருடனும் நட்பு பாராட்டினாலும் கொள்கைகளில் கொண்டிருந்த உறுதியை எதற்காகவும் தளர்த்தியதில்லை. அவர்களின் வழியில் இந்தப் பேரியக்கத்தின் செயல்தலைவர் என்ற பொறுப்பில் உள்ள நான், எந்தச் சூழலிலும் திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சான கொள்கைகளை உயர்த்திப் பிடிப்பேன். அதற்காக எதையும் யாரையும் எதிர்கொள்வேன். யாரிடமும் எனக்கு தனி மனித விரோதமில்லை; பேதமுமில்லை. அதே நேரத்தில், தனிப்பட்ட நட்புக்காக, திராவிட

**மக்கள் கவனத்திற்கு**

**அன்பர் மதிமாறன் தனது பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இவர்கள் வெறுமனே மிரட்டுபவர்கள் அல்ல. அவரை ஆதரிப்பவர்களும் அவருடைய பாதுகாப்பில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.**

- MGM



# இந்தியாவின் எதிர்காலம் இஸ்லாத்திற்கே!

நேதாஜி நகர், தக்வா மஸ்ஜித்தில் இஃப்தார் நிகழ்ச்சி ஒன்றை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஏற்பாடு செய்தது.

மஸ்ஜித் தக்வா தலைவர் – சகோதரர் சாதிக் பாஷா அவர்கள் தலைமையில், அதே பள்ளிவாசல் இமாம் குர்ஆனை ஓதி ஆரம்பித்து தந்தார்கள்.

நமது (வைகறை வெளிச்சம்) ஆசிரியர் அண்ணன் மு. குலாம் முஹம்மது அவர்கள்

“இன்றைய உலக சூழலில் முஸ்லிம்கள்” என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

அந்த உரையில் நோன்பு நம்மை இறை யச்சம் உள்ளவனாக மாற்ற வேண்டும் என்றும் கடமையான தொழுகை, ஜகாத், ஹஜ் நோன்பு இபாதத்கள் அனைத்தும் கூட்டாக செய்ய இஸ்லாம் வலியுறுத்தகிறது என்று முதற்பகுதியில் பேசினார்.

ஆனால் இன்று முஸ்லிம் உலகம் கருத்து குழப்பத்தில் மூழ்கி பிரிந்து பிரிவினை பட்டுள்ளார்கள். மேலும் அதை வலுப் படுத்துவது நாளுக்கு நாள் நம்மீது கடமைபோல் செய்து வருகிறார்கள்.

இந்த கருத்து குழப்பத்தின் போக்கு மிக ஆபத்தானது என்றும், அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று அல்குர்ஆனில் ஆல இம்ரான் – 103 வசனத்தை மேற்கோள் காட்டி ஒற்றுமையை பலப்படுத்த பேசினார்கள். கருத்து வேறுபாடுகளால் முஸ்லிம்கள் பிரிந்து வருவது தடுக்கப்பட வேண்டும். குழப்பத்தை உருவாக்கும் பேச்சை முஸ்லிம்கள் நிறுத்த வேண்டும்.

கருத்து, குழப்பமும், பிரிவினையும் இந்த உம்மத்தில் யூதர்களும், நஸ்ரானிகளும் தான் நுழைத்தார்கள் என்பதை முஸ்லிம்கள் புரிந்துகொள்ள வேண்டும். கருத்து குழப் பத்தை உருவாக்கி முஸ்லிம்களை பிரித்தால் தான் வெற்றி கொள்ள முடியும் என்பது யூத, நஸ்ரானிகளின் திட்டங்களில் ஒன்று.

முஸ்லிம்களை நேரடியாக வீழ்த்த முடியாது என்பது அவர்கள் போர் தொடுத்து தோற்று, அனுபவத்தால் கற்றுக் கொண்ட பாடம்.

வரலாறும் இதை உறுதி செய்கிறது.

ஆகையால் வரும் காலத்தில் இஸ்லாமிய இளைஞர்கள் தான் உலக மக்களில் அதிகமாக இருப்பார்கள். அவர்களால் இஸ்லாம் பலம் பெறும், இஸ்லாமே உலகை ஆளும் என்று அஞ்சினார்கள்.

நாளைய உலகம் இஸ்லாத்தின் கைகளில் சிக்கிவிடக்கூடாது என்று மேற்கத்திய நாடுகள் முஸ்லிம்களுக்கு எதிராக சூழ்ச்சிகள் செய்தன.

சென்ற நூற்றாண்டில் செய்யப்பட்ட சூழ்ச்சிகள். அந்த சூழ்ச்சியின் முதல் துவக்கம் முஸ்லிம்களை வீழ்த்த, முஸ்லிம் பெண்களின் கருப்பையிலிருந்து தொடங்கினார்கள்.



முஸ்லிம் பெண்கள் (கருத்தரிப்பு தடை) குழந்தை அதிகம் பெற்றுக் கொள்ளக் கூடாது. உணவு, மருந்து, பொருள்கள் மூலம் குழந்தை ஆரோக்கியமின்மையோடு பிறக்க வேண்டும் என்று சதி செய்து செயல்படுத்தின ார்கள்.

மேலும் முஸ்லிம் நாடுகளில் ரசாயன குண்டுகளை போட்டு காற்றை விஷத் தன்மைக்கு மாற்றி அதை சுவாசிக்கும் கருவுற்ற பெண்கள் குழந்தைகள் பூமியில் வாழ முடியாத அளவுக்கு குழந்தைகள் தலை பெரித்தும், கால்கள் குறுகியும், கண்கள் இல்லாமல், காது கேளாமல் ஊனமாக பிறக்கும்படி செய்து விடுகிறார்கள். இதை முஸ்லிம்கள் உணர வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் முஸ்லிம்களிடத்தில் ரஷ்யா போர் தொடுத்தது, தோற்றார்கள். ரஷ்யா துண்டு துண்டு நாடுகளாக பிரிந்தது. பிறகு அமெரிக்கா ஆப்கானிடம் போர் புரிந்தது, அமெரிக்காவும் தோற்றது, நேரடி போர்களால் முஸ்லிம்களை வெல்வ முடியாது என்பதை இன்னும் நிரூபித்தார்கள். ஆப்கான் முஸ்லிம்கள்.

ஆகவே மேற்கண்ட சூழ்ச்சிகளை தொடர்ச்சியாக செய்து வருகிறார்கள். இன்று மிக தீவிரமாக கருத்து குழப் பத்தையே செய்து வரு கிறார்கள். முஸ்லிம்கள் பிரிந்து தங்களுக்கெதிராக சண்டை போடும் அவலம் உருவாக்குகிறார்கள்.

இன்றும் ஆப்கான், ஈராக், சோமாலியா, செசன்யா போன்ற நாடுகள் வெற்றி பெற்று வருகிறது. முஸ்லிம்கள் ஆப்கான் மக்களைப் போன்று ஒன்று பட்டு போராட வேண்டும் என்றும் உரையில் கூறி முடித்தார்கள்.

சகோதரர் கமாலுத்தீன் கொடுமை யாளர்களிடமிருந்து இந்தியாவையும், நாட்டு மக்களையும் காப்பாற்ற எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களின் ஆட்சியை பிடிங்கி அல்லாஹ்வின் அடியார்களிடம் ஒப்படைக்கும்படி துஆ செய்து நிகழ்ச்சியை முடித்தார்கள்.

பள்ளியில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நிர்வாகிகள் அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி தருவானாக.. ஆமின்.

# ஃபித்ரா கூட்டு வசூல் மற்றும் கூட்டு விநியோகம்





தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் சார்பாக வருடந்தோறும் நோன்பு பெருநாள் முன்பே ஃபித்ரா வசூலித்து ஏழை, எளிய மக்களுக்கு வழங்கி வருகிறோம்.

*அல்லாஹ்வும் அவனது தூதரும் ஃபித்ரா வழங்குமாறு நம்மை பணித்துள்ளார்கள் ஏழை, எளிய மக்கள் பெருநாள் அன்று பசியாக இருக்கக் கூடாது முஸ்லிம் உம்மத் ஒரே தரம் கொண்ட உணவு உண்ண வேண்டும் என்ற காரணத்தால் நீ உண்ணும் அரிசியையோ அல்லது கோதுமை போன்ற பொருளை ( தரம் குறையாமல் ) தந்தாக வேண்டும் என்றும் சொல்லியுள்ளார்கள்.*

*ஃபித்ராவின் அளவில் இமாம்களின் அளவுகோல்களை கவனத்தில் கொண்டும், கூட்டு விநியோகம் அல்லாஹ்வின் அருளால் சென்னை, புதுவண்ணாரப்பேட்டையிலும், பழைய வண்ணாரப்பேட்டையிலும், தாம்பரத்திலும் ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டது.*

*குறிப்பு :* **ஃபித்ரா பொருள்கள் :**

**பிரியாணி அரிசி, சர்க்கரை, நெய், ரீபண்ட் ஆயில், சிக்கன் கறி, இன்னும் சிலருக்கு ரொக்கமும் தேவை கருதி கொடுக்கப்பட்டது அல்ஹம்துலில்லாஹ்.**

**(ஏழை, எளிய மக்கள் எல்லா நாட்களும் பசியில்லாமல் உணவு உட்கொண்டு வாழ வேண்டும் என்பதை முஸ்லிம் உம்மத் கவனத்தில் கொள்ள வேண்டும்)**

# இஃப்தார் நிகழ்ச்சி







அல்லாஹ்வின் மாபெரும் கிருபையில் கடந்த 20–6–2017 அன்று நமது அன்பகம் தாஃவா மதரஸாவில் நோன்பு திறப்பு (இஃப்தார் நிகழ்ச்சி) செவ்வாய் அன்று சிறப்பாக நடைபெற்றது. இன்னும் முஹம்மத் உமர் கிராஅத் ஓதி துவக்கி வைத்தார்கள். கருப்பூர் இமாம் சிறப்பு உரை நிகழ்த்தினார். சிக்கல் நாயக்கன் பேட்டை, சத்திரம் கரூப்பூர் இமாம் ஹபீப் ரஹ்மான் மற்றும் ஹாஜி எஸ். முகம்மது ஜக்கரிய்யா அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள்.

மேலும் தாஃவா செய்வதின் அவசியத்தையும் விளக்கினார்கள். சகோதரர் கௌஸ் முஹம்மது அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். இறுதியாக மஃஹ்ரிப் தொழுகையுடன் இஃப்தார் நிகழ்ச்சி சிறப்புடன் நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் ஐமாஅத்தார்கள் அன்பகம் தாஃவா குழு மாணவர், மாணவிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியினை அன்பகம் மதரஸா மற்றும் தாருல் இஸ்லாலம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் ஏற்பாடு செய்திருந்தது, பல நண்பர்களும் இந்நிகழ்ச்சிக்கு உதவினார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல... அல்ஹம்துலில்லாஹ்.

# இந்தியாவில் தலைதூக்கும் கும்பல் ஆட்சி

## பறிக்கப்படும் உயிர்கள்!




பாசிச அரசாங்கத்தை ஒரு சமூகம் எதிர்த்து போராட முடியும். ஆனால் ஒரு பாசிச சமூகத்தை எப்படி எதிர்த்து போராடுவது? - மனஸ் பிராக், Thewire.in, 25/06/2017

முஸ்லிம்களை தேசத்துரோகிகள், பாகிஸ்தானியர்கள், பசு மாமிசம் சாப்பிடுபவர்கள், அன்னியர்கள் என இடைவிடாமல் தொடர் விஷம பிரச்சாரம் செய்யும் சங்பரிவார கும்பல் இந்திய சமூகத்தையே பாசிச மயமாக்கியுள்ளது.

**ஜுனைத் கொடூர கொலையும் அதை வேடிக்கை பார்த்தவர்கள் சொன்ன வார்த்தைகளும் இதற்கு சான்று.**

ஜுனைத் (17) ஒரு ஹாபிழ்-திருக்குர்ஆனை மனனம் செய்த மாணவர். ரமலானை தனது குடும்பத்துடன் கொண்டாடுவதற்காக மதரசாவில் (குஜராத்) இருந்து தனது சொந்த ஊரான பரிதாபத்தில் உள்ள கந்தவாளி கிராமத்திற்கு வந்தான். அவனது தாயார் சாய்ரா அவனிடம் ரூபாய் 1500-ஐ புத்தாடைகள் வாங்குவதற்காக கொடுத்தாள். அதனை பெற்று கொண்ட அவன் தனது சகோதரர்களுடன் டெல்லிக்கு பயணமானான்.

புத்தாடைகள் வாங்கிய பின் அச்சகோதரர்கள் 22 ஜூன் 2017 அன்று டெல்லியில் இருந்து மதுரா வரை செல்லும் ரெயிலில் ஏறினார்கள்.

ஹிந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில்



ஜுனைத்-இன் சகோதரர் ஹாசிம் நடந்த சம்பவத்தை இப்படி பதிவு செய்கிறார்.

“ரெயில் ஒக்லா நிலையம் வந்ததும் அங்கே 15-20 பேர் ஏறினார்கள்.

வந்தவர்கள் ஜுனைத் இருக்கையின் அருகே நின்று கொண்டு அவனை தள்ளினர். கூட்ட நெரிசலில் தவறுதலாக நடந்திருக் கலாம் என்று நினைத்த ஜுனைத் முதலில் இதனை கண்டுகொள்ளவில்லை. மறுபடியும் ஜுனைத்-ஐ வேண்டும் என்றே தள்ளினர். ஜுனைத் அவர்களை தள்ளாமல் வருமாறு கேட்டான். இதனை கேட்ட அந்த கும்பல் அவனுடைய தொப்பியை கழற்றி வீசினர். அவனை பார்த்து தேசத்துரோகி என்றனர். எங்கள் அனைவரையும் இருக்கையை விட்டு கிளம்புங்கள் என்றனர். இந்த கும்பலோடு சேர்ந்து கொண்டு அங்கிருந்தவர்களும் எங்களை தாக்க தொடங்கினர்.

துக்லாபாத் நிலையத்தில் அவர்கள் இறங்கி அடுத்த பெட்டியில் ஏறினர். இதனிடையே நான் எங்களுடைய சகோதரர் சாகிருக்கு



தொலைபேசியில் நடந்த முடிந்த சம்பவங் களை கூறி தங்களை அழைத்து செல்ல பல்லபர்க் நிலையம் வருமாறு கேட்டேன். இத்தோடு பிரச்சனை முடிந்துவிட்டது என்றே நினைத்தோம்.

பல்லபர்க் நிலையம் வந்தவுடன் இறங்கிட முற்பட்ட எங்களை அவர்கள் மீண்டும் ஒன்றுகூடி கத்தியை காட்டி தடுத்தனர்.

முசின் ஒருவழியாக அவர்களிடம் இருந்து தப்பித்து வெளியே குதித்து விட்டான். ஜுனைத், மொயின் மற்றும் நானும் உள்ளே மாட்டி கொண்டோம். எங்களை காப்பாற்ற வந்த சாகிரும் உள்ளே மாட்டி கொண்டார். அக்கும்பல் ரெயிலின் கதவை மூடினர். ரெயில் அங்கிருந்து புறப்பட்டது.

நான்கு பேர் சேர்ந்து ஜுனைத்-ஐ பிடித்து கொண்டனர். அவர்களில் ஒருவன் தன்னு டைய கத்தியை வைத்து ஜுனைதின் மார்பில் சரமாரியாக பாய்ச்சினான். அவன் சிறுவன் அவனை விட்டுவிடுங்கள் என்று சாகிர் கெஞ் சினார். தடுக்க முயன்ற என்னை மூன்று பேர் பிடித்து கொண்டனர். என்னுடைய முதுகிலும் தோளிலும் மூன்று கத்தி குத்து விழுந்தது. எங்களை காப்பாற்றிட யாரும் முன்வரவில்லை. மாறாக எங்கள் அனைவரின் கதையையும் முடித்து விடுங்கள் என்று அங்கி ருந்தவர்கள் அந்த கும்பலிடம் கூறினர்”. அசாவதி ரெயில் நிலையம் வந்ததும் நாங்கள் அனைவரும் தூக்கி வீசப்பட்டோம்.”

கொலைவெறி தாக்குதலுக்கு உள்ளான நான்கு பேரும் ஹிந்துஸ்தான் டைம்ஸ்-இடம் இப்படி கூறினார்கள். “எங்களை தாக்கியவர்கள் எங்களை தேசத்துரோகி, மாட்டுக்கறி சாப்பிடுபவர்கள் என்று திரும்ப திரும்ப அழைத்தனர். எங்களின் தொப்பி களை கழற்றி வீசினர். எங்களின் தாடிகளை பிடித்து இழுத்தனர். முல்லாக்கள் இவர்கள் என்று வசைபாடினர்.

Hindustantimes, Updated ஜுன் 2017

**இரத்த வெள்ளத்தில் மிதந்து கிடந்த ஜுனைதை அவனுடைய சகோதரரும், நண்பர்களும் பல்வால் சிவில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவனுடைய உயிரை இறைவன் அழைத்து கொண்டான்.**

**- அபூஹாசின்**

# தினமணி ஈகைப்பெருநாள் மலர் - 2017 வெளியீடு







தினமணி ஈகைப்பெருநாள் மலர் – 2017 வெளியீட்டு விழா 25–06–2017 அன்று நடைபெற்றது. விழா மலரை கவிஞர் மு. மேத்தா வெளியிட நீதியரசர் அக்பர் அலி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். விழா நிகழ்ச்சிகளை பேராசிரியர் காஜா கனி அவர்கள் ஒருங்கிணைத்தார்கள். வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது நன்றியுரை நிகழ்த்துகிறார்.



# மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம்

ஓர் டுபாக்கூர்

கார்ப்பரேட் கம்பெனிகளும் காவி பயங்கரவாதிகளும் சேர்ந்து செய்த கூட்டணிச் சதிதான் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம். அதன் விளைவுதான் 2014 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. வெற்றி. மக்களே மக்களால் மக்களுக்காக என்பதை அழித்துவிட்டு ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி.யால் கார்ப்பரேட் கம்பெனிகளுக்காக என்ற புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளன என்னென்ன மாயவித்தைகளின் மூலமாக வெற்றி பெற்றுள்ளனர் என்பதை இக்கட்டுரையில் விரிவாக காண்போம்

**வாக்காளர்கள் வாக்களிக்கும் முறை :**

நம் நாட்டில் உள்ள மொத்த மக்கள் தொகை எண்ணிக்கை 1,349,578,731 (1.34 பில்லியன்) இது 2017ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பு. இதில் ஆண்கள் 6969, 922, 456 (69.6 கோடி) மற்றும் பெண்கள் 653,656, 274 (65.2 கோடி) அதாவது சதவிகித அடிப் படையில் 1000 ஆண்களுக்கு 945 பெண்கள் வீதம்.

உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட 2–வது நாடு இந்தியா. 2007ஆம் ஆண்டு வரை சீட்டு முறையை கையாண்டது இந்திய தேர்தல் ஆணையம். ஒரு வாக்காளர் தாங்கள் வாக்களிக்கும் சின்னத்திற்கு அச்சிட்டு அதை வாக்கு சேகரிக்கும் பெட்டியில் போட வேண்டும்.

இறுதியாக அதை எண்ணிக்கையின் மூலம் தர வரிசை அடிப்படையில் அதிகமாக அச்சிட்டு உள்ள சின்னத்திற்கு அதன் பொறுப்பாளர் வெற்றி பெற்றவர் என தேர்தல் ஆணையம் அறிவிக்கும்.

**மின்னனு முறை**

சுதந்திரத்திற்குப்பின் இந்தியாவில் ஓட்டுச் சீட்டு முறையிலேயே தேர்தல் நடைமுறைகள்நடத்தப்பட்டு வந்தன. பின்பு தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக மின்னனு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு வந்தன. இதை அறிமுகப்படுத்தும் முன் சம்பத், இந்தி ரேசன், ராவ் கசர் பாதா ஆகியோரைக் கொண்ட தொழில்நுட்பக் குழுவில் கருத்து கேட்கப்பட்டது அக்குழு "ஒரு மனதாக பரிந்துரை செய்த பிறகே" மின்னனு ஓட்டுப்பதிவு இயந்திரத்தை பயன்படுத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்தது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனும் ஆலோசிக்கப்பட்டது.

**வாக்குப்பதிவு இயந்திரம் ஓர் அறிமுகம்**

இந்த மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம் முதலில் கேரளாவில் 1982–ஆம் ஆண்டு நடந்த பரூர் இடைத் தேர்தலின்போது சோதனை முயற்சியாக 50 ஓட்டுச் சாவடியில் மின்னனு ஓட்டுப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாடு முழுவதும் 10 லட்சத்து 70 ஆயிரம் மின்னனு

ஒட்டுப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப் பட்டன.

பாரத் மின்னனு நிறுவனம் (Bharat Electronics Limited (BEL) மற்றும் இந்திய மின்னனு கழகம்(ECIL) ஆகியவை இந்த மின்னனு ஒட்டுப்பதிவு இயந்திரங்களை தயாரித்து தேர்தல் ஆணையத்துக்கு வழங்கி வருகின்றனர்.

**உபயோகிக்கும் முறை**

இந்த இயந்திரம், கட்டுப்பாடு கருவி, ஒட்டுப்பதிவு கருவி என இரு பகுதிகளைக் கொண்டது. கட்டுப்பாடு கருவி மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர் இருக்கும் இடத்திலும், ஒட்டுப்பதிவு கருவி வாக்காளர் ஒட்டளிக்கும் மறைவான இடத்திலும் இருக்கும் இந்த இரு கருவிகளும் பத்து மீட்டர் நீளமுள்ள மின்னி ணைப்பு வடம் (கேபிள்) மூலம் இணைக்கப் பட்டிருக்கும். ஒரு வாக்காளர் வேட்பாளருக் கான பொத்தானை அழுத்தியதும் அந்த வேட்பாளருக்கான ஒட்டுப்பதிவாக விழும் அதன்பின்கட்டுப்பாட்டு பிரிவிலுள்ள ஒட்டு பொத்தானை மூன்றாவது வாக்குப்பதிவு அலு வலர் மீண்டும் அழுத்தினால்தான் இயந்திரம் அடுத்த ஒட்டை பதிவு செய்யத் தயாராகும்.

இயந்திரத்தின் சாவி பதிவு செய்யப்படும் போது தேதியும், நேரமும் பதிவாகிவிடும். ஒட்டுப்பதிவு முடிந்ததும், மூடுவதற்கான பொத்தானை அழுத்திவிட்டால் இயந்திரம் எந்த புள்ளி விவரத்தையும் ஏற்காது. மொத்தம் என்ற பொத்தானை அழுத்தினால் ஒட்டுக்களின் எண்ணிக்கை காட்டும் இதை 17—ம் படிவத்தில் உள்ள வாக்காளர் பதிவு புத்தகத்துடன் ஒப்பிட்டு பார்த்துக் கொள்ளலாம்.

**பா.ஜ.க.வுக்கு இரட்டை நாக்கு**

இந்தியாவில் சில அரசியல் கட்சிகள் இம்முறையை மாற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு கோரிக்கை வைத்துள்ளன. அதை தேர்தல் ஆணையம் ஏற்க மறுத்து வரு கின்றது. முறைகேடுக்கு வழி வகுப்பதை நிரூபிக் கும் நிலையில் அதை சரி செய்ய தயாராக இருக்கிறது என்று அறிவித்துள்ளது.

கடந்த 2009—ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில் பா.ஜ.க. தோல்வியடைந்தபோது கட்சியில் முக்கிய பிரமுகர் செய்த ஒரு காரியம் இப்போது கட்சியை பிரச்சனையில் சிக்க வைத்துள்ளது.

கடந்த 2009—இல் இந்த இயந்திரம் சரியில்லை என பா.ஜ.க. சார்பில் ஒரு புத்தகமே வெளியிடப்பட்டது என கூறி அந்த கட்சிக்கு நெருக்கடி கொடுத்துள்ளனர் காங்கிரஸார். அந்த புத்தகத்தை தேடிப்பிடித்துக் கொண்டு வந்தவுடன் பா.ஜ.க. வுக்கு இரட்டை நாக்கு என்று விமர்ச்சிக்கின்றனர்.

2009—ஆம் ஆண்டு தேர்தலில் பா.ஜ.க. கட்சியின் செய்தி தொடர்பாளர் ஜி.வி.என் நரசிம்ம ராவ், அத்வானியைச் சந்தித்து தோல்வி களுக்கு காரணம் ஒட்டுப்பதிவு இயந்திரம்தான் இதைப்பற்றி ஒரு புத்தகம் வெளியிடுகிறோம் என்று வெளியிட்டார். (Democracy at Rik - GVL Narasimha Rao)

**பிற நாடுகளில்**

பல நாடுகளில் இந்த மின்னனு வாக்குப்பதிவு முறையை தடை செய்துள்ளனர். இதன்மூலம் மிகச் சுலபமாக வாக்குப்பதிவை தவறாக பயன்படுத்த முடியும் என்று ஐரோப்பா மற்றும் இன்னும் பல நாடுகளில் உள்ள மாநில மற்றும் உள்ளூர் அரசாங்கமே மின்னனு வாக்குப்பதிவு முறையில் பொறுமை இழந்து வருகின்றனர்.

(Newsweek by Evgeny Morozov, Publishded May 23-2009)

இந்த இயந்திரத்தில் வாக்களிக்கும் வாக்கா ளர்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிய காகித முறையை உபயோகிக்க வேண்டும். அதில் வாக்காளர்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களித்துள்ளார் என்பதை அறிய பயன்படுத்த வேண்டும் என கூறியுள்ளது. (The New York Times, Editorial, How to trust, June 21-2009 )

**அறிக்கை**

2009 ஆம் ஆண்டு இந்திய தேர்தல் ஆணை யம் ஒரு அறிக்கை பிறப்பித்தது டெல்லியில். இந்த மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தை தவறாக பயன்படுத்த யாரால் முடியும் என்று? அதை ஏற்று ஒரு ஆராய்ச்சிக் குழு சென்றது. அப்போது அதை திறந்து பார்த்து இந்த முறை யை சுலபமாக தவறாக பயன்படுத்தி விடலாம்

என அவர்கள் சொன்னதை கேட்ட தேர்தல் அதிகாரிகள் அதிர்ச்சியுற்று அதை அப்படியே நிறுத்திவிட்டார்கள்.

தற்போது டெல்லியின் முதலமைச்சர் கெஜ்ரிவால் தனக்கு 72 மணிநேர அவகாசம் போதும் என பகிரங்கமாக அறிவித்துள்ளார். அவர் நான் அதில் 10 முறைகேடான விவரங் களை செய்து முடிக்க முடியும் என்றார். (News Tamil, April 04, 2017)

அதன்பின் அவரை செயல்பட முடியாமல் விசாரணை கமிஷன் அறிக்கை வெளியிடுகிறது. தனக்கு வேண்டியவர்களுக்கு பல்வேறு பதவி களை அளித்து முறைகேடு செய்துள்ளார் என்று நெருக்கடி கொடுத்தது பா.ஜ.க. அரசு. (தினமலர் 07, ஏப்ரல் 2017)

மோடி கூறியுள்ளது :– தேர்தல் நேரத்தில் எதிர்க் கட்சிகள்தான் இட்டுக்கட்டி ஓட்டு இயந்திர பிரச்சனையை கிளப்பி விடுகின்றனர் என்றார்.

உத்தரபிரதேசம் உள்ளிட்ட 5 மாநில தேர்தல் களின்போது எந்தப் பட்டனை அழுத்தினாலும் தாமரைக்கு ஓட்டு விழும் வகையில் பா.ஜ.க. தில்லு முல்லு வேலைகளை செய்துள்ளது என மாயாவதி மற்றும் அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த சூழலில் எதிர் கட்சிகளின் இந்த குற்ற ச்சாட்டுகள் குறித்து பா.ஜ.க. தலைவர்கள் பலர் பதிலடி கொடுத்த போதிலும் பிரதமர் மோடி மவுனம் காத்தார். 2 நாட்கள் ஒடிசாவில் உள்ள புவனேஸ்வரில் 15,16 ஏப்ரல்–2017 பா.ஜ.க. செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட மோடி நிர்வாகிகள் மத்தியில் இதை கூறினார். (தினத்தந்தி 17, ஏப்ரல்–2017)

### தவறுகள் கண்டறியும் முறை

மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்குப்பதிவு கருவி மற்றும் கட்டுப்பாடு கருவி உள்ளது. இதில் வாக்குப்பதிவு கருவி தென்படும் விதமாக வைக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டு கருவி தேர்தல் அலுவலர் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்.

**முறை -1 :** அந்த கட்டுப்பாட்டு கருவி மற்றும் வாக்குப்பதிவு கருவியை இணைக்கும் கேபிள் துண்டிக்கப்பட்டு விட்டால் அந்த ஓட்டுப்பதிவு இயந்திரத்தில் எண்ணிக்கையில் வராது.

**முறை-2 :** ஒவ்வொரு ஓட்டுப்பதிவிற்கும் காண்பிக்கப்படும் அந்த கருவி (Display) அதை சுழற்றி விட்டு அதன் பின்புறமாக ஒரு (Blue tooth) கருவியை பொருத்தினால் கைபேசி மூலமாக அதை கட்டுப்படுத்தலாம்.

முறை –3: வாக்குப்பதிவு எண்ணிக்கையை சேமித்து வைக்கும் பகுதி உண்டு (Eprom, Eprom-1) அதுதான் சேமித்து இறுதியில் மொத்தம் என்ற பொத்தானை அழுத்தியதும் எண்ணிக்கையை காண்பிக்கும். இதை ஒரு கருவி மூலம் பொருத்தி அந்த சேகரிப்பு தகவல்களை அழித்து விடலாம்.

இப்படி பலமுறைகள் மூலம் தவறாக பயன்படுத்தலாம் சமீபமாக தேர்தல் ஆணையம் கூறியதாவது இந்த ஓட்டுப்பதிவு இயந்திரம் ஒரு (Calculator) போன்றது என்றும் அந்த Calculator-ரையும் தவறாக பயன்படுத்தலாம் என்றும் ஆய்வு கூறுகிறது.

எந்த ஒரு மின்னனு முறையிலும் சுலபமாக தவறுகளை புகுத்திவிடலாம். பஞ்சாபில் எந்த பொத்தானை அழுத்தினாலும் பா.ஜ.க. விற்கு ஓட்டு விழுந்தது. இதைக்கண்டு மக்கள் அதிர்ந்தனர். (The Hindu 16, March-2017)

அப்போது இதை உருவாக்கும் நிறுவனத் துக்கும் ஆளும் பா.ஜ.க. விற்கும் ஏதேனும் தொடர்புண்டா என்பது கிட்டத்தட்ட ஊர்ஜிதமாகிறது.

### வாக்காளர் சரி பார்க்கும் காகித தணிக்கை சோதனை

(VVPAT) என்பது வாக்குச் சீட்டு இன்றி வாக்களிக்கும் அமைப்பில் வாக்காளர்கள் தாங்களாகவே தங்களால் பதிவு செய்யப்பட்ட வாக்குகளை சரி பார்க்கும் முறையாகும். வாக் குப்பதிவு செய்யப்பட்ட பின்பு சரி பார்க்கப் பட்ட காகித ஆவணம் அருகிலுள்ள கண்ணா டிப் பெட்டியில் விழுமாறு இருக்கும். இதன் மூலம் மின்னனு தேர்தல் கருவியில் ஏற்படும் செயலிழப்புகள், முறைகேடுகள் மற்றும் சேமிக் கப்பட்ட மின்னனு தேர்தல் முடிவுகள் தணிக்கை

செய்ய ஏதுவாகின்றது.

வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனை முதலில் செப்டம்பர் 2013–ல் நாகலாந்து மாநில தேர்தலில் நொக்சர் சட்ட மன்றத் தொகுதியில் பயன்படுத்தப்பட்டது.




இந்திய பொதுத் தேர்தலில் ஒரு முன்னோடி திட்டமாக 2014 பொதுத் தேர்தலில் மொத்தமுள்ள 543 பாராளுமன்றத் தொகுதியில் 8 தொகுதிகளில் (VVPAT) முறை அறிமுகப்படுத்தப் பட்டது. அவை – ரெக்னோ, காந்தி நகர், பெங்களூரு தெற்கு, மத்திய சென்னை, ஜாதப்பூர், ராய்ப்பூர், பாட்னா சாகிப் மற்றும் மிசோரம் தொகுதிகளில் செயல்படுத்தப் பட்டது.

2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் (VVPAT) இயந்திரங்களை பயன்படுத்த தேர்தல் ஆணையம் அனுமதித்தால் அதற்கு மொத்தம் 16 லட்சத்து 18 ஆயிரம் (VVPAT) இயந்திரங்கள் தேவைப்படும். இதற்கு ஆகும் செலவு ரூ. 3,174 கோடி.இந்த இயந்திரங்களை 2018க்குள் தயாரிக்க முடியாது என அந்த நிறுவனங்கள் கூறியுள்ளதால் (ECIL) (BEL) 2019-ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் பயன்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. (தினகரன் 21, ஏப்ரல் 2017)

**சவால்கள் (தேர்தல் ஆணையம்)**

தேர்தல் ஆணையம் ஏப்ரல்–12, 2017 அன்று வாக்குப்பதிவு இயந்திரத்தில் முறைகேடு இருப்பதாக கூறிய கட்சிகளை நிரூபித்துக் காட்டும்படி டெல்லியில் சவால் விடுத்துள்ளது.

அதற்கு 7 தேசியக் கட்சிகளும் 48 பிராந்தியக் கட்சிகளும் பங்கேற்றன. ஆனால் அந்த கூட்டத்தில் தேர்தல் ஆணையம் சவால்களை செய்து காட்டும்படி கூறவில்லை மாறாக அந்த இடம் விவாத அரங்கமாக மாறியது.

பா.ஜ.க. தவிர்த்து அனைத்துக் கட்சிகளும் ஒப்புகை சீட்டு முறையை பயன்படுத்தக் கோரி வலியுறுத்தினர்.

ஆம் ஆத்மி எம்.எல்.ஏவாக இருக்கும் சவுரபாபரத்வாஜ் இவர், மாதிரி மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தில் முறைகேடு நடைபெற முடியும் என்பதை சோதனையை செய்துகாட்டி விளக்கினார். அவர் கடந்த பத்து வருடங்களாக கணினி பொறியாளராக இருந்து வருகிறார். அவர் கூறியதாவது

மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தின் மதர்போர்டை மாற்றி அமைப்பதற்கு எனக்கு 90 நொடிகள் தான் தேவைப்பட்டது என்றார். இதன்மூலம் ரகசியக் குறியீடுகளை அழுத்தினால். அதன்பின்னர் எந்த வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்பதை எந்த நேரத்திலும் முடிவு செய்ய முடியும் என்று விளக்கினார்.

அதற்கு தேர்தல் ஆணையம் ஆம் ஆத்மி பயன்படுத்திய இயந்திரமும், தேர்தல் ஆணையம் வசம் இருக்கும் இயந்திரமும் வேறு. இது முறைகேடு செய்ய முடியாதது என்றது. தினமணி 12, மே 2017 (விகடன் 09, மே 2017)

**கட்சி மீது பாய்ச்சல்**

ஆம் ஆத்மி கட்சி செய்து காட்டிய இயந்திரங்களில் முறைகேடு செய்ய முடியும் என்பதை தேர்தல் ஆணையம் மறுத்தது. அதுவேறு இதுவேறு என்றது அப்போது.

ஆனால் இப்பொழுது மின்னனு வாக்குப்பதிவுஇயந்திரத்தைபொதுவாகதேர்தல் ஆணையம் அதிகாரிகள்தான் கையாள்வார்கள், இந்த இயந்திரங்கள் அனைத்தும் குடோனில் வைக்கப்பட்டிருக்கும். ஆம் ஆத்மி டெமோ காட்டிய வாக்குப்பதிவு இயந்திரம் குடோனில்

இருந்து திருடப்பட்டிருக்கலாம் எனக்கூறி அக்கட்சி மீது தேர்தல் ஆணையம் புகார் கொடுக்க இருக்கிறதாம். (One India Tamil : 09 May 2017)

**கேள்விகள்**

*1)* முஸ்லிம்களின் ஓட்டு *1999, 2004, 2009, 2016* வரை மற்ற கட்சிகளுக்கு அதிகமாக பதிவாகியுள்ளது. ஆனால் பா.ஜ.க. கட்சிக்கு மிகவும் சொர்ப்பமான வாக்கு மட்டும் பதிவாகி யுள்ளது. (The Indian Express, 15 May 2017)

இப்படி இருக்கையில் முஸ்லிம்கள் அதிகமாக உள்ள பகுதியில் பா.ஜ.க.வினர் வெற்றி பெற்றது எப்படி?

*2)* பஞ்சாபில் எந்த பொத்தானை அழுத்தி னாலும் பா.ஜ.க. சின்னத்திற்கு ஓட்டு விழுவதை கண்ட மக்கள் அதிர்ந்து புகார் தெரிவித்ததால் அதை தேர்தல் ஆணையம் மாற்றியது. அப்போது பல கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தது. தேர்தல் ஆணையம் அச்சமயத்தில் நீங்கள் இந்த ஓட்டுப்பதிவு இயந்திரத்தை ஆய்வு செய்யலாம் என அறிக்கை (அ) சவால் விடாமல் அதில் உள்ள திருத்தங்களை சரி செய்து பிறகு அறிக்கை விடக் காரணம்?

*3)* பஞ்சாபிலும் அஸ்ஸாமிலும் ஒவ்வோர் வாக்குச் சாவடியில் மட்டும் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தை மாற்றிய தேர்தல் ஆணையம் 5 மாநிலங்களிலுமுள்ள மற்ற வாக்குச்சாவடிகளில் ஏன் மாற்றவில்லை? பா.ஜ.க. வெற்றி பெற வேண்டும் என்று தேர்தல் ஆணையமே தில்லுமுல்லு வேலைகளை செய்கின்றதா?

*4)* வாக்குப்பதிவு இயந்திரம் பல முன்னணி நாடுகளில் நம்பிக்கை இழந்து அதை கைவிடும் பட்சத்தில் இந்திய தேர்தல் ஆணையம் மட்டும் இதை கையாள்வது யாருடைய உத்தரவின்பேரில்?

*5)* சில தினங்களுக்கு முன் நடத்தக் கூடாது என பல போராட்டங்களையும் தாண்டி மத்திய அரசு நீட் தேர்வு நடத்தியது. அதில் அனை வருக்கும் சம கேள்விகள் என்று தமிழ்நாட்டில் சம்பந்தம் இல்லாத கேள்விகளையும் வட நாட்டில் சுலபமான வெவ்வேறு கேள்விகளை கேட்டுள்ளது.

அதுமட்டுமின்றி எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் மாணவர்கள் உளவியல் ரீதியாக பாதிப்படைய செய்தது மத்திய அரசு அதற்கு அவர்கள் காது மற்றும் மூக்கு, கை, கால்களில் அணிவிக்கும் அணிகலன்களில் Micro Transister Receiver அல்லது Electronics பொருட்களை வைத்துக் காப்பி அடிக்க முடியும். அதனால்தான் சோதனை செய்தோம் என்றது. அப்படி இருக்க சின்ன அணிகலன்களில் இந்த பொருட்களை வைத்து முறைகேடு செய்ய முடியும் பட்சத்தில் ஏன் வாக்குப்பதிவு இயந்திரங்களில் மட்டும் தில்லு முல்லு செய்ய முடியாது?

அதை ஏன் இந்த தேர்தல் ஆணையம் மறைக்கிறது.

**நோக்கம்**

ஆம் ஆத்மி கட்சி திருடியதாகவே வைத்துக் கொள்வோம். அப்படியென்றால் இயந்திரத்தின் மதர்போட்டை மாற்றி அமைக்க முடியும் என்பதை ஒத்தக் கொள்கிறதா தேர்தல் ஆணையம்?

**வாசகர்களே!**

*2004*ஆம் ஆண்டு மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தை திறந்து பரிசோதக்க அனுமதித்த தேர்தல் ஆணையம் ஜூன் *3, 2017* ம் தேதி அன்று மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தை திறக்காமல் முறைகேட்டை நிரூபியுங்கள் என்று கூறியது முரண்பாட்டின் மொத்த உருவமாய் நஜீப் ஜைதி இருந்தார்.

ஆக இந்த அரசு (பா.ஜ.க.) *1933*ஆம் ஆண்டு ஜெர்மனியில் நடைபெற்ற அதிபர் தேர்தலை மிஞ்சிவிட்டது. ஹிட்லர் இன்று உயிருடன் இருந்தால் மோடியின் எடுபுடியாக தான் இருந்திருக்க முடியும்.

மக்களாட்சி என்ற வார்த்தை புதைக்கப் பட்டு “இந்து ராஷ்ட்ராவின் விதை விதைக்கப் பட்டுள்ளது.

மக்கள் புரட்சி ஒன்றுதான் மீண்டும் இந்தியாவிற்கு வழி வகுக்கும்.

**– கோவை ஆசிப்**



# பால்பண்ணை உரிமையாளரின் மீது தாக்குதல்!

பால்பண்ணை உரிமையாளர் உஸ்மான் அன்சாரி (55). இவர் ஜார்கண்ட் மாநிலத்தின் கிரிதி மாவட்டத்தில் பாரியாபாத்தில் வசித்து வருகிறார். ஜூன் 27, 2017 அன்று அன்சாரியின்வீட்டின்அருகேதலையில்லாமல் பசுவின் சடலம் ஒன்று கிடந்துள்ளது. இதனை அறிந்த பசு குண்டர்கள் 200 பேர் அங்கே ஒன்று திரண்டனர்.

அன்சாரியை நையபுடைத்த அவர்கள், அவரின் வீட்டிற்கு தீ வைத்து கொளுத்தினர். தகவல் அறிந்து வந்த காவல் துறையினர் அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் காப்பாற்றி மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முயன்றனர். ஆனால் திரண்டு நின்ற கும்பல் காவல்துறையினர் மீது கற்களை வீசி அவர்களை செல்லவிடாமல் தடுத்தது. பின்னர் போலிஸ் தடியடி நடத்தியும், வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டும் கும்பலை கலைத்து அன்சாரியையும் அவரின் குடும்பத்தாரையும் காப்பாற்றினர்.

அலிமுத்தின் என்ற அஸ்கர் அலி (55) - ஜார்கண்ட் மாநிலம், ராம்கர் மாவட்டத்தின், மொனுவா கிராமத்தை சார்ந்தவர்.

29 ஜூன் 2017 அன்று, அவர் தன்னுடைய வண்டியில் மாட்டிறைச்சியை கொண்டு வந்துள்ளார். பசர்டன்ட் என்ற இடத்தில் வைத்து 100 பேர் சேர்ந்த கும்பல் ஒன்று அவருடைய வண்டியை வழிமறித்து அவரை வெளியே இழுத்து கடுமையாக தாக்கியுள்ளது. வேனையும் தீ வைத்து கொளுத்தியுள்ளனர். சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறை அவரை மீட்டு சாதர் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கிருத்து அவரை பெரிய மருத்துவமனையான ராஜேந்திர மருத்துவ அறிவியல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். கொண்டு சேர்த்த சில நிமிடங்களிலேயே அவருடைய உயிர் பிரிந்தது. Hindustantimes, June 30, 2017

காவல்துறை நடவடிக்கை எடுக்கும் என்பதில் நான் நம்பிக்கை இழந்து விட்டேன். பசு குண்டர்களின் செயல்களுக்கு அரசும் துணை போகின்றது என்றே நான் நம்புகிறேன். முஸ்லிம் ஆண்களின் மீது அதிகரித்து வரும் கொலைவெறி தாக்குதல்கள் எங்களை அச்சத்தில் உறைய வைத்துள்ளன. நடப்பதெல்லாம் விபத்து என்று கருதிட முடியாது. அரசு நிருவாகத்தின் ஆதரவுடன் சில கும்பல்கள் இச்செயல்களை திட்டமிட்டே செய்கின்றனர்.

எங்களுடைய ஆடவர்கள் வீட்டிற்கு திரும்பி வருவார்களா வரமாட்டார்களா என்ற பீதியுடனே எங்களின் ஒவ்வொரு நாள்களும் நகர்கின்றன. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் எங்கள் ஆடவர்களை பாதுகாக்க நாங்கள் அனைவரும் இவர்களுக்கு எதிராக ஆயுதமும் எடுப்போம். கும்பல்கள் வழங்கிடும் தீர்ப்புகளை மற்றொரு கும்பல் வழங்கிடும் தீர்ப்புகளை கொண்டே தண்டித்திட முடியும் என்றார் மர்யம் கத்தூன். Mob Justice would be meted with Mob-Justice.

- Hindustantimes, July 01, 2017

**- அபூஹாசின்**

# முஸ்லிம்கள் அல் அக்ஸா மஸ்ஜித்துக்கு ஏன் பயணம் செய்ய வேண்டும்?



படம் : மஸ்ஜிதுல் அல் அக்ஸா

ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை அல்குத்ஸ் தினம் – ஜெரூசலம் அல் அக்ஸா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடும் நாள் என உலக முஸ்லிம்கள் அறிவித்திருக்கின்றார்கள். இது ஒவ்வொரு வருடமும் உலக முஸ்லிம்கள் நினைவு கூரும் தினம்...

இந்த வகையில் கடந்த பல ஆண்டுகளாக நாம் பைத்துல் முகத்திஸ் ( ஜெரூசலம் ) அதில் வீற்றிருக்கும் அல் அக்ஸா மஸ்ஜித் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றோம்.

கடந்த ஆண்டுகளில் பைத்துல் முகத்திஸ் (ஜெரூசலம்), மஸ்ஜித் அல் அக்ஸா ஆகியவற்றின் வரலாற்றை உங்களிடம் சமர்ப்பித்தோம்.

குறிப்பாக இந்த வருடம் உலக முஸ்லிம்கள் ஒரு வேண்டுகோளை முஸ்லிம்களிடம் வைத்து வருகின்றார்கள்.

அது, "முஸ்லிம்கள் பைத்துல் முகத்திஸ் அல் அக்ஸா மஸ்ஜித் இவற்றிற்கு பயணங்கள் மேற்கொள்ள வேண்டும். அதன்மூலம் அந்த முதல் கிப்லா உம்மத்தே முஸ்லிமா என்ற முஸ்லிம் சமுதாயத்திற்குச் சொந்தம் என்பதை உறுதி செய்திட வேண்டும்".

இந்த வேண்டுகோளை வைப்பதற்கான இப்போதைய காரணம் யூதர்கள், ஜெரூசலம், அதில் வீற்றிருக்கும் அல் அக்ஸா மஸ்ஜித் ஆகியவற்றை தங்களுடைய வழிபாட்டுத் தலமாக ஆக்கிட முயற்சி செய்து வருகின்றார்கள்.

இதற்காக யூத நாடாகிய இஸ்ரேல் இதுவரை *20* சட்டங்களை இயற்றியுள்ளது. அத்தோடு மஸ்ஜித் அல் அக்ஸாவைச் சுற்றி ஒரு சிறப்புப் படையை நியமித்துள்ளது.

மஸ்ஜித் அக்ஸாவுக்குள் ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் எத்திகாஃப் இருப்பது வழக்கம். சென்ற வருடம் முதல் *18* வயதிலிருந்து *50* வயதுக்கு உட்பட்டவர்கள் எத்திகாஃப் இருக்க யூதர்கள் அனுமதிப்பதில்லை. இப்படி அனுமதி மறுக்கும் உரிமை யூதர்களுக்கு இல்லை. காரணம் அல் அக்ஸா மஸ்ஜித் முஸ்லிம்களின் பராமரிப்பின் கீழ் இருந்து வருகின்றது. ஆனால் வன்முறை, தீவிரவாதம் இவற்றின் வழி தங்கள் விருப்பங்களை அந்த மக்கள் மீது திணித்து வருகின்றார்கள் யூதர்கள்.

ஆகவே உலகெங்குமுள்ள முஸ்லிம்கள் பைத்துல் முகத்திஸ் என்ற ஜெரூசலம் சென்று அல் அக்ஸா மஸ்ஜித் வந்து அதில் தொழுது, துஆ செய்து சென்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றனர். அங்கு வாழும் முஸ்லிம்களும் உலக முஸ்லிம்களின் அமைப்பும்

இதில் உலக முஸ்லிம்கள் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். உலகில் பல்வேறு நாடுகளும், அரசுகளும் அமைப்புகளும், இயக்கங்களும், சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து ஜெருசலத்திற்கு சிறப்பு உல்லாசப் பயணங்களை ஏற்பாடு செய்து வருகின்றன. பல அரசுகள் இந்த உல்லாசப் பயணத்திற்கு மானியங்களை வழங்குகின்றன.



மஸ்ஜித் அல் அக்ஸாவின் தோரண வாயிலில் யூதப்படைகள்
DOME OF THE ROCK

அங்கு செல்பவர்களிடம் யூதர்கள் / கிறிஸ் தவர்கள் இவர்களுக்குச் சொந்தமானவற்றை முஸ்லிம்கள் அபகரித்துக் கொண்டதாகப் பிரச் சாரம் நடத்துகின்றார்களாம். இதனை முஸ்லிம் கள் கருத்தில் கொண்டு மஸ்ஜித் அல் அக்ஸா வுக்குப் பயணங்கள் மேற்கொள்ள வேண்டும். அதன்மூலம் வரலாறு முழுக்க அது முஸ்லிம் களுக்கே சொந்தமானது என்பதை நிலை நிறுத்த வேண்டும்.

## முஸ்லிம்கள் அல் அக்ஸா மஸ்ஜித்துக்கு ஏன் பயணம் செய்ய வேண்டும்?

❖ இஸ்லாத்தின் முதல் கிப்லா. இதுதான் தொழுகையில் முதல் முன்னோக்குமிடம்

❖ வரலாற்றுக் குறிப்புகளின்படி 'கஆபா கட்டப்பட்ட' 40 ஆண்டுகளுக்குப் பின் இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டது. பல சோகம் நிறைந்த கட்டங்களைக் கடந்து நின்று கொண்டிருக்கின்றது. மக்கா, மதினா ஆகியவற்றுக்குப் பின் புண்ணி யத்தைத் தேடி பயணம் செய்திட அனுமதிக்கப்பட்ட மூன்றாவது இடம் மஸ்ஜித் அல் அக்ஸா.

❖ பெருமானார் (ஸல்) அவர்களின் விண் ணேற்றத்தின் ( மிஹ்ராஜ் ) மையப்பகுதி இதுதான்.

❖ இந்த மஸ்ஜித் – இல் தான் பெருமா னார் (ஸல்) அவர்கள் ஏனைய எல்லா நபி மார்களுக்கும் இமாமமாக நின்று தொழுகை நடத்தினார்கள்.

❖ திருக்குர்ஆனின் வாழ்த்துப் பெற்ற மஸ்ஜித் (பார்க்க திருமுறை வசனம் *17 ; 1, 17 : 60* )

❖ திருக்குர்ஆனில் விவா திக்கப்பட்ட மஸ்ஜித் (பார்க்க திருக்குர்ஆன் வசனம், *5 : 21* )

## நபிமொழிகள் :

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவிக் கின்றார்கள். நான் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டேன் அல்லாஹ்வின் தூதரே எனக்கு பைத்துல் முகத்திஸைப் பற்றிய சட்டங்களைச் சொல்லித் தாருங்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்...

**அங்கே சென்று தொழுங்கள். நீங்கள் அங்கே சென்று தொழ இயலவில்லை என்றால், அங்கே எரியும் விளக்குகளுக்குப் பயன்பட கொஞ்சம் எண்ணெய்யை அனுப்புங்கள்.**

உம்மு ஸலாமாஹ் ( ரழி ) அவர்கள் அறிவிக் கின்றார்கள். பெருமானார் (ஸல்) கூறினார்கள். **ஹஜ் அல்லது உம்ராவுக்கு செல்லும் ஒருவர் மஸ்ஜித் அல் அக்ஸாவில் இஹ்ராம் அணிந்து பின்னர் புனித மஸ்ஜித்திற்கு ( மக்காவிலுள்ள கஆபாவிற்கும் செல்வாரே யானால் அவருடைய முன்பாவங்களும், பின் பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிடும்.** ( அவர்கள் சொர்க்கம் புகுவார்கள் – திர்மிதி, அஹ்மத் நான் நபிகள் நாயகம், முஹம்மத் (ஸல்) அவர்களிடம் கேட்டேன், "பூமியில் எது முதல் மஸ்ஜித்?

புனிதமிக்க மஸ்ஜிதுல் ஹரம் 'கஆபா' என பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அடுத்தது எது? என நான் கேட்டேன், தொலை விலுள்ள மஸ்ஜித் அல் அக்ஸா என பெருமானார் (ஸல்) அவர்கள் பதில் தந்தார்கள்.

– அறிவிப்பாளர், அபூதர் (ரழி) ஆதாரம் : முஸ்லிம்.

# பொய்யைக் கல்வியாகப் புகட்டுவோம்...

## இந்துத்துவாவின் வரலாற்று திரிபுகள்




**ஹல்டிகாட் போர் - ராஜஸ்தான் பல்கலைகழகத்தின் பாடத்திட்டத்தில் பித்தலாட்டம்:**

ஜூன் 18-1576- இல் முகலாய பேரரசர் அக்பரின் படைகளும் ரானா பிரதாப்பின் படைகளும் ஹல்டிகாட் என்ற இடத்தில் மோதி கொண்டன. ஆரம்பத்தில் யாருக்கும் வெற்றி தோல்வி இல்லாமல் இப்போர் முடிந்தது. எனினும் முகலாயர்களே இப்போரில் இறுதி வெற்றி பெற்றனர். இதுவே வரலாறு.

இப்போர் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நடைபெற்ற போர் என்றும் மேவாரை ஆண்டு கொண்டிருந்த ராஜபுத்திர அரசர் ரானா பிரதாப்பை ஹிந்துக்களின் ஹீரோவாக சித்தரித்து மக்களிடையே வெறுப்பை விதைக்கும் முயற்சியும் இன்று இந்துத்துவ பாசிஸ்டுகளால் திட்டமிட்டு பரப்பபப்பட்டு வருகின்றது.

போரில் ரானா பிரதாப்பே வென்றார் என தங்களுடைய பல்கலை கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கு பயிற்றுவிக்க போவதாக ராஜஸ்தான் மாநிலத்தை ஆண்டு கொண்டிருக்கும் பாரதீய ஜனதா அரசு அறிவித்தது (Feb 2017).

சந்திரசேகர் ஷர்மா எழுதிய Rashtra Ratan-Maharana Pratap என்ற புத்தகத்தில், அவர் 1576-இல் நடந்த ஹல்டிகாட் போரில் வெற்றி பெற்றது ராஜபுத்திரர்களே என்றும் முகலாயர்கள் அதில் வெற்றி பெறவில்லை என்றும் விவாதித்துள்ளார் ( Aryavrat Sanskriti Sansthan, Delhi, 2007). இதை அடிப்படையாக வைத்தே வரலாற்றை மாற்றி எழுதப்போகிறோம் என்று ராஜஸ்தான் பாரதீய ஜனதா அரசு கூறியுள்ளது வரலாற்றாசிரியர்கள் மத்தியில் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

Medival India: From Sultanate to the Mughals என்ற புத்தகத்தை எழுதிய புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் சதிஷ் சந்திரா என்பவர் இவர்கள் வரலாறுகளை அரசியல் படுத்துகின்றனர் (Politicisation of History) என்று தன்னுடைய வேதனையை இப்படி வெளிபடுத்தியுள்ளார். “விசாலமான பார்வை கொண்டவர்களும் மதசார்பற்றவர்களும் இந்த இடையூறுகளை அனுமதிக்க மாட்டார்கள் என்றே நான் நம்பிக்கை வைக்கின்றேன்” என்கிறார்.

**ஹல்டிகாட் - இந்து - முஸ்லிம் போரா?**

இப்போரை அக்பர் தரப்பின் ஒரு அணியில் ராஜபுத்திர வம்சத்தை சார்ந்த மான் சிங் என்பவரும் ரானா பிரதாப் தரப்பின் ஒரு அணியில் ஆப்கன் படையை சார்ந்த ஹக்கிம் கான் சுர் என்பவரும் வழிநடத்தி சென்றனர். இதை இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நடைபெற்ற போர் என்றோ அல்லது ராஜபுத்திர வம்சங்கள் தன்னுடைய பகுதியின் சுதந்திரத்திற்காக போராடினார்கள் என்றோ கருதிட இயலாது.

ஏனெனில் இருதரப்பிலும் ராஜபுத்திர வம்சத்தை சேர்ந்தவர்கள் இருந்தனர். இரண்டு தரப்பிலும் முஸ்லிம்களும் இந்துக்களும்

கலந்தே இருந்தனர். ராணா பிரதாப்பின் சகோதரர் சக்தி சிங் அக்பரின் அணியில் இருந்து அவருக்கு உதவி புரிந்து கொண்டிருந்தார். நாடு பிடிக்கும் வேட்கையில் நடைபெற்றதே இப்போர்.

வரலாறு இப்படி வெட்ட வெளிச்சமாயிருக்க, ராஜஸ்தான் பல்கலைகழகத்தின் வரலாற்று துறை பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு சந்திரசேகர் ஷர்மா எழுதிய புத்தகத்தை வழங்கி தன்னுடைய இந்துத்துவ அஜெண்டாவை நிறைவேற்றியுள்ளது.

**ஏன் இந்த பொய் பரப்புரை:**

முகலாயர்கள் வெற்றி பெற்றனர் என்பதில் கடுகளவு கூட சர்ச்சையோ குழப்பமோ கிடையாது. புதிய கட்டுகதைகளை உருவாக்கவும் நன்கு உறுதி செய்யப்பட்ட உண்மை சம்பவங்களை திரித்து கூறி பொய்யை பதிவு செய்யும் முயற்சியே ராஜஸ்தான் பல்கலைகழகத்தின் இம்முயற்சி. இப்படி வரலாறுகளை பயிற்றுவிப்பதன் மூலம் மூடர்களையே உருவாக்க போகிறீர்கள். இளம் தலைமுறையினரின் மனதில் விஷத்தை விதைப்பதே இம்முயற்சி என்கிறார் அலிகர் முஸ்லிம் பல்கலைகழகத்தின் பேராசிரியர் செய்யது அலி நதீம் ரெசவி

ஆதாரம்: Frontline March 31, 2017

**பாடத்திட்டத்தில் நேரு புறக்கணிப்பு, சாவர்கர் திணிப்பு:**

ராஜஸ்தான் மாநில கல்வி வாரியம் (Rajasthan State Board) திருத்தி அமைக்கபட்ட பாடபுத்தகங்களை மாணவர்களுக்கு இந்த வருடம் வழங்கியுள்ளது.

இதில் மகாத்மா காந்தியை பற்றி சிறு குறிப்போடு நிறுத்தி கொண்டதுடன், சாவர்க்கரை பற்றிய குறிப்புகளை மிகுதமாக சேர்த்துள்ளனர். நேருவை பற்றிய எந்த வித குறிப்புகளும் இல்லாமல் அவர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்.

11- ஆம் வகுப்பின் அரசியல் விஞ்ஞானம் புத்தகத்தில் காங்கிரசை பற்றி இப்படி விமர்சித்துள்ளனர்.

“பிரிட்டிஷாரால் வளர்க்கப்பட்ட குழந்தையே காங்கிரஸ். முதலாளித்துவ வாதிகளாலும், சமூகத்தில் உயர் நடுத்தர வர்க்கத்தின் பிரதிநிதிகளை கொண்டும் நிறுவபட்டதே காங்கிரஸ்”

பாரதீய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில் 10, 11, 12 ஆம் வகுப்பு பாடப் புத்தகத்தில் பொது சிவில் சட்டம், நாட்டின் தொடர்பு மொழி-ஹிந்தி, நரேந்திர மோடியின் வெளிநாட்டு கொள்கை, குறிப்பாக பாகிஸ்தானோடு கடைபிடிக்கும் கொள்கைகள் போன்ற தலைப்புகளில் பாடங்கள் சேர்க்கப் பட்டுள்ளன (Hindustan Times).

தேசப்பற்றையும் தேசியவாதத்தையும் ஊக்குவிப்பதற்காக 10 ஆம் வகுப்பு பாடத்தில் சாவர்கருக்கு என்று சில பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் சாவர்க்கரை புரட்சியாளர், சிறந்த தேசப்பற்றாளர் என்றும் இயக்கவாதி என்றும் (Organization man) சித்தரித்துள்ளன.

வாழ்நாள் முழுவதும் சுதந்திரத்திற்காக அவர் மேற்கொண்ட தியாகங்களை வார்த்தைகளுக்குள் அடக்கிவிட முடியாது என்று புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

சாவர்கரின் தேசியவாதமும், கருணை மனுவும்: அகண்ட பாரதம், ஹிந்து ராஷ்டிரா, இந்துத்துவம் போன்ற சித்தாந்தங்களை மக்களிடம் விதைத்ததற்கு காரணமானவர் சாவர்கர். ஆனால் அந்தமான் சிறையில் இருந்தபோது பிரிட்டிஷாரிடம் கருணை மனுவை அனுப்பி தன்னை விடுதலை செய்ய கோரினார். பிரிட்டிஷ் ஆண்ட தேசத்தில் கருணை மனுவிற்கு என்ன வேலை? பிரிட்டிஷாரின் இந்திய தேசியத்தை அங்கீகரிக்கவா? இதுதான் தேசியவாதமா?

1913 நவம்பர் 14 இல் ஆங்கிலேயர்களுக்கு சாவர்கர் எழுதிய மன்னிப்பு கடிதத்தை இந்தியா கல்வி அமைச்சகத்தின் அரசிதழ் பிரிவு “Penal Settlement In Andaman” என்ற

புத்தகத்தில் மறுபதிப்பு செய் துள்ளது.

**தாய்-மகன் உறவு:**

அதில் சாவர்கர் தன்னை ஊதாரித்தனமான மகன் (Prodigal Son) என்றே குறிப் பிடுகிறார். அரசின் தாயுள்ளம் கொண்ட கதவுகள் இம்மகனுக் காக திறப்பதற்கு ஏக்கத்துடன் காத்திருப்பதாக கூறியுள்ளார்.

(Savarkar described himself as a “Prodigal son” longing to return to the “parental doors of the government”)




அரசு தன்னுடைய கருணை யினாலும் மற்றவர்கள் மீது கொண்ட இரக் கத்தினாலும் என்னை விடுதலை செய்தால், நான் பிரிட்டிஷ் அரசின் அரசியல் அமைப்பின் முன்னேற்றத் திற்கு உறுதியான சேவகனாகவும், விசுவாசமாக வும் நடந்து கொள்வேன் என்றார் சாவர்கர்.

(If the government in their manifold beneficence and mercy release me, I for one cannot but be the staunchest advocate of constitutional progress and loyalty to the English government which is the foremost condition of that progress” he said)

இனிமேல் இந்தியாவில் கல்வி கற்பவர்கள் காவிமயமான கல்வியை தான் படிக்க வேண் டும். கல்வி மட்டுமே சமூகத்தை முன்னேற்றி விடும் என்று நினைப்பவர்கள் இந்துத்துவ வாதிகள் கற்பிக்கும் கல்வியை தான் படிக்க வேண்டும் என்பதை மறந்து விடகூடாது. கல்வி மட்டுமே சமூகத்தை முன்னேற்றிவிடும் என்றால் காஷ்மீர் மாணவர்களும் மாணவியர் களும் ஏன் தங்கள் கையில் கல்லை எடுக்கப் போகிறார்கள்?

ஆதாரம்: Outlook, 09 JUNE 2017

**- அபூஹாசின்**




சென்னையில் 8-6-2017 அன்று நடந்த நோன்பு துறக்கும் இஃப்தார் நிகழ்ச்சியில் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் பொருளாளர் பேரா. இல்யாஸ் ரியாஜி உரையாற்றுகிறார்.

# இஸ்லாமிய சமுதாயப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி!

## Chennainikah.com

**தங்கள் குடும்பத்துப் பிள்ளைகளுக்கு வரன் தேடுகிறீர்களா? கவலை வேண்டாம். எங்கள் இணையதளத்தில் மாப்பிள்ளை / பெண் தேடலாம். தமிழகத்தின் மிகப்பெரிய இஸ்லாமியத் திருமணத் தகவல் இணைய தளம்.**



## w.w.w.chennainikah.com

சென்னை நிக்காஹ்.காம் எனும் இவ் இணைய தளத்தில் முஸ்லிம்கள் அனைவரும் இலவசமாகப் பதிந்து கொள்ளலாம். பயனாளித் தோழமையுடன் வடிவமைக்கப்பட்ட இவ் இணையதளம் மிகவும் பாதுகாப்பானது. நம்பகமானது. தங்களது மகன்/மகள், சகோதரன்/ சகோதரி மற்றும் உற்றார், உறவினர்களுக்கு திருமணத்துக்கு வரன் தேடுவோர் உடனடியாகப் இவ் இணையதளத்தில் பதிவுசெய்து பயன் கொள்ள வேண்டுகிறோம்.

அனைத்துப் பதிவுகளும் முற்றிலும் இலவசம். சமுதாய மேம்பாட்டுக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள இவ் இணையதளம் வழி இஸ்லாமியப் பெருமக்களுக்கு பல்வேறு வழிகளில் தொண்டாற்றவுள்ளது.

**கல்லிடை அசன் ஷேக்** அவர்களால் நிறுவப்பட்ட **அசன் ஷேக் ட்ரஸ்ட்** என்ற அறநிறுவனத்தின் துணை நிறுவனம் தான்

**chennainikah.com**

எனும் இவ் இணையதளம்.

மேலும் கூடுதல் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**கல்லிடை அசன் ஷேக்**

**சென்னை நிக்காஹ் டாட் காம்**

**எண்.16, கங்கையம்மன் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600 014.**

94444 58715, 98407 86981, 044–28133675 | இமெயில்: info@chennainikah.com



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor **M. GULAM MOHAMED,** Printed by M. Gulam Mohamed at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.